www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.21-27.1995

ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 102

## புலிகளிடம் விமானப்படை?

## தலைநகர நிலவரம் எக்ஸ்ரே ரிப்போர்ட்



## போராளிகள் கடத்திய அமெரிக்க தம்பதிகள்

சினிவிசிட்

## 'பம்பாய்' புகழ் மனிஷாவின் வித்தியாசமான விருப்பம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## பயிரை மேய்ந்த வேலிகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

நாட்டு நிலவரம்
பதட்டம் நிறைந்ததாக இருக்கிறது.
இம் முறை வெடித்த யுத்தம்
மேலும் உக்கிரம் கொண்டதாக
தனது முகத்தைக் காட்டுகிறது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள
பகுதிகளில் புலிகளும்
பாதுகாப்பு நடவடிக்கைகளில்
கூடுதல் கவனம் செலுத்துகிறார்கள்.

அரசாங்கமும் தனது
பாதுகாப்பில் அக்கறை கொண்டிருக்கிறது.

போரில் ஈடுபடும் தரப்புக்கள்
தமது பாதுகாப்பிலும்
விழிப்போடிருப்பது வியப்பல்ல!

சந்தேகப்படாதே! விழிப்பாயிருக்காதே
என்று சொல்வது முறையல்ல.
ஆனால், பாதுகாப்பு நடவடிக்கைகள்
சாதாரண மக்களது
அன்றாட வாழ்க்கையை
அச்சுறுத்துவதாக அமையக்கூடாது.

புலிகள் மனித உரிமைகளை மீறுவதாக
மனித உரிமைகளுக்கான
பல்கலைக்கழக ஆசிரியர் குழு
குற்றம் சாட்டியிருக்கிறது.

யுத்தத்தைக் காரணம் காட்டி
தமக்கு எதிரான கருத்துடையவர்களை
புலிகள் களையெடுக்க முற்பட்டால்
சுய சிந்தனையுடைய சந்ததி
உருவாக முடியாமல் போய்விடும்!

மறுபுறம் அரசும்
புலிகளை எதிர்க்கும் நடவடிக்கை
என்ற பெயரில்
சாதாரண மக்களை இனம் கண்டு
அவர்களுக்கு பாதகம் ஏற்படாமல்
இருப்பதை உறுதி செய்யத் தவறினால்
வன்முறை எண்ணங்களுக்கு
வழி சமைப்பதாகவே அமைந்துவிடும்.

தலைநகரில் கரும்புலிகள்
ஊடுருவியுள்ளதாக தகவல் வந்தால்
தேடுதல் நடவடிக்கைகள்
செய்ய வேண்டித்தான் இருக்கும்.

ஆனால் - கரும்புலி யார்

சாதாரண மக்கள் யார் என்று
அறிவதற்கு அரச படையினரிடம்
உள்ள அணுகுமுறை என்ன?

தமிழர்கள் என்ற அளவுகோல்
மட்டுமே அடையாளப்படுத்தலுக்கு
உபயோகமானால்
அப்பாவிகளும் பாதிக்கப்படவே செய்வர்.

தமிழர்களையும் உள்ளடக்கிய
சட்டபூர்வமான பாதுகாப்பு அமைப்புக்கள்
நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை
என்பதையும் -
பல்கலைக்கழக ஆசிரியர் குழு
சுட்டிக்காட்டியிருக்கிறது.

கைது செய்யப்படும் தமிழர்கள்
மொழி புரியாமல் தடுமாறுவதும்
அதனால் சந்தேகம் அதிகமாவதும்
தடுக்கப்படுவதற்கு-பல்கலைக்கழக
ஆசிரியர் குழுவின் கருத்தை
கவனத்தில் எடுத்தால் உபயோகமாக அமையும்.

கடந்த காலத்தில்
காணாமல் போனவர்கள் தொடர்பாக
அரசு நியமித்த
ஆணைக்குழு விசாரித்து வருகிறது.

உறவுகளை இழந்தவர்கள்
சொல்லும் சோகக் கதைகள்
ஆணைக்குழுவையும் அதிர்ச்சியில்
உறைய வைத்துக் கொண்டிருக்கிறது.

வேலியே பயிரை மேய்ந்த
கதைகள் ஒவ்வொன்றும்
வன்முறையை வளர்க்க
போடப்பட்ட விதைகள்!

எதிர்காலத்திலும் அவ்வாறான
சம்பவங்கள் தொடரக்கூடாது
என்பதை உறுதி செய்வதே
கண்டறியப்பட்டுள்ள உண்மைகளிலிருந்து
கற்றுக்கொள்ளும் பாடமாக இருக்க வேண்டும்.

இன்றைய ஆணைக்குழுக்கள்
கடந்தகால ஆட்சியை
அம்பலப்படுத்துவதை மட்டுமே
நோக்கமாக கொண்டவையாக
அமைந்துவிடக் கூடாது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட
தவறுகளை சீர்தூக்கி ஆராய்ந்து
மீண்டும் அந்த தவறுகள்
தலைதூக்காமல் தடுப்பவையாக
அமைய வேண்டியது அவசியம்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை -

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பயப்படாதே!!

"நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்" (ஏசாயா. 44: 6)


பயம்! திகில்! எங்கும் எதிலும் நிறைந்துள்ள ஒரு வார்த்தை. பரீட்சையில் சித்தியெய்திடுவேனா என்று மாணவர்க்கு ஒரு வகைப் பயம். போட்டியில் வெற்றியடைவேனா.... போட்டியாளருக்கு ஏற்படும் பயம்! வீட்டிலுள்ளவர் வெளியே சென்று வீடு திரும்பும் வரை வீட்டிலுள்ளோருக்கு பயம். வயதுக்கு வந்த பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்கின்றோமே என பெற்றோருக்கு பயம். ஒவ்வொரு மனித வாழ்வையும் இப்பயம் ஆட்டிப்படைக்கின்றது.

இந்தப் பயத்தை போக்குகிற ஆண்டவர் எம்முடன் இருக்கிறார் என்பதை சிலவேளைகளில் மறந்தே போய்விடுகிறோம். (சங் 91 :11) என்ன கூறுகிறது என்பதைக் கவனித்துப் பார்ப்போம். "உன் வழிகளிலெல்லாம உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்" ஆம் எம் வழிகளிலெல்லாம் எம்மைக் காக்கிறவர் இருக்கிறார் என்பதனை மனதிற் கொண்டு பயப்படாது வாழ்வில் முன்னேறுவோம்.

அவரை நம்பும் பிள்ளைகளை தன் தூதர்கள் கொண்டு காத்து வருவார். கர்த்தா எம் பட்சத்தில் இருக்கிறபடியால் எமக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஓர் ஆயுதமும் வாய்க்காதே போகும். எனவே பயப்படாது இறைதுணை நாடுவோம்.

ஜே.புளோரன்ஸ்
கெங்கல்ல

# ஆன்மீகம்



## நல்லோரின் அடையாளம்

இப்னுஹன்லலா (ரலி) என்பவர்கள் தொழுகைக்காக தினமும் பள்ளிவாசலுக்கு செல்லும் போது அபூதர்தா (ரலி) அவர்களை சந்திப்பது வழக்கம்.

அப்போதெல்லாம் ஹன்லலா (ரலி) அபூதர்தா (ரலி) அவர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல விஷயத்தை கூறிவிட்டு செல்வார்கள். அவை பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் நடந்த ஒரு சம்பவமாகவோ அல்லது ஒரு ஹதீஸாகவோ இருக்கும்.

ஒரு தடவை அவர்கள் அவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது அபூதர்தா (ரலி) அவர்களை சந்தித்தார்கள்.

இன்று நான் உங்களுக்கு நல்லோரின் அடையாளம் பற்றி கூறப் போகிறேன். நல்ல மனிதர்கள் தலை மயிரை நீளமாய் வளர்க்க மாட்டார்கள். தன் ஆடையை தனது கரண்டைக்கால் மொழிகளுக்கு கீழே இறக்கி அணிய மாட்டார்கள். இது பற்றி பெருமானார் (ஸல்) அவர்களும் கரீம் அஸதீ நல்ல மனிதராவார் இவர்கள் என்று அறிவுரை பகர்ந்துள்ளதாக அறிவித்தார்கள்.

எம்.சி.கலீல்
கல்முனை - 05

## பரிசுக்குரிய கவிதை

### அடிமைச்சாசனம்

உழைப்பவர் என்றும்
தாக்கப்பட வேண்டும் - உழைப்பை
உண்பவர் என்றும்
காக்கப்பட வேண்டும்
இதுவன்றோ!
சர்வதேசசட்டம் (?!)

ஜி. அருளேந்திரன்
திருமலை

## கவிதைப்போட்டி இல-99

### வியக்கவைத்த கவிதைகள்

**சுமை**

உள்ளத்திலும் சுமை - எங்கள்
உடல்களிலும் சுமை
வையத்திலும் சுமை - எங்கள்
வாழ்க்கையே சுமைதான்

எம். கோவிந்தராஜா
நமுனுகுல

**நிம்மதி எங்கே**

நேரிய உழைப்பு நீண்ட
போதும்
நிம்மதி என்றோர் நிலை
இங்குண்டோ?
பாரிய சுமையும் பரிதாப
வாழ்வும்
பாருக்குள் மடியும் நாள்
இனி என்றோ?

திருமதி மல்லிகா பத்மநாதன்
பசறை

**சுமைகள் இங்கு கனமாகி...**

இதமாகிப்போன இந்த
சுவையான மனித வாழ்வு
இங்கு சிலர் முதுகில்
கனமாகிப் போனதோ!!

செல்வி எஸ். வதனி
வெள்ளவத்தை

**வரம் கொடுப்போம்!**

மனச்சுமை கனமென்று
மண்டியிட்டு
ஏங்கவில்லை!
எஃகான எம் பலத்தால்
கல்மலையும்
கடற்பஞ்சே!
எதிர்த்து நாம்
துணிந்தால்
சுரண்ட
நினைப்பவர்க்கும்
முரண்டாய்வரம்
கொடுப்போம்!
என்ற சூளுரையே!

நிஜந்திகா-கனகசிங்கம்
மட்டக்களப்பு

**சிலைகள்**

உப்புநீராலே ஊறிடும்
உடலும் - கல்லாகிய
மனித கூடுகள்
மாண்டிட மீதம் என்ன
உண்டு?

றோஸ்
பண்டாரவளை

**இது நியாயமா?**

நாட்டின் முதுகெலும்பை
நடுத்தெருவில்
முறிப்பதாமோ?

ச. மகாலிங்கம்
வெளிமடை

## கவிதைப் போட்டி இல-102





**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.05.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 102
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**ஏன் பார்ப்பதில்லை**

உடலும் உளமும் ஒன்றித்து
சுமை எடுத்தும்,
ஆண், பெண்ணாய் அயராது
தோள் கொடுத்தும்,
எலும்பும், சதையும் எருவாக,
குருதி, கண்ணீர் வியர்களால்
நீர்பாய்ச்சி
நாம் வளர்த்த உலகமெம்மை
ஏன் பார்ப்பதில்லை?

வாழையூர்
வைரமுத்து

**சுமைதாங்கிகள்**

உழைப்பதில்
ஓய்வில்லாச்
சூரியனின்
சொந்தங்கள்,
சுமப்பதிலும்
சோர்வில்லா
நெஞ்சங்கள்,
சுமையொன்றே
வாழ்வென்ற
சுமைதாங்கிகள்!

வை. சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு - 2

**மோதி மிதித்திடுவோம்**

பாட்டாளியின் உழைப்பை
பங்கு போட்டு கொழுத்து வரும்,
சுரண்டல்வாதிகளை, சூதுமனம்
படைத்தோரை,
மோதி மிதித்திடுவோம்
பாரதியின் விதிப்படியே,
வாருங்கள் தோழர்களே
வலுவான மனம்கொண்டு.

எஸ். சிவசாமி செல்வராஜ்
பூண்டுலோயா

**சிறப்பேது?**

உயிரைப் பிழிந்து
உழைத்துமென்ன?
உலகே கோசம்
செய்துமென்ன?
சுரண்டல் பொசுங்கி
போகும் வரை
உழைப்போர் வாழ்வில்
சிறப்பேது?!

ஏ. அஹ்மது ஜுனது
ஏறாவூர்

**மாற்றுங்கள்**

சுமந்தது போதும்
சிலுவையில்
அறையப்பட்டாலும்
மரபை மாற்றுங்கள்...!

செல்வன் ஷஹிர்ஷாதாஸாம்
தர்கா நகர்

**உடைந்த விலங்குகள்**

களைத்து நாம் விழுந்தோம் எம்
உழைப்பை உறிஞ்சியோர்
கொழுத்திருந்தனர்.
விழித்து நாம் எழுந்தோம்
கை விலங்கினை உடைத்தோம்.

பொ. துளசி

இரு தரப்பும்
சதுரங்க நோக்கத்தில்
இருக்கும் வரை
பிரச்சனை தீராது என்று
'நாரதர்' சொல்லியிருப்பதில்
நியாயம் உண்டு

அ.பெஞ்சமின்
-பதுளை-

## வாசகர் சாலை

முன்அட்டை அழகில் மயங்கி, உள்செல்ல நாடும் எம் கண்கள், வித்தியாசமாய் நீ தரும் அம்சங்களை வாசிக்க நாடும் எம் இதயங்களில், முரசம் தொடக்கம் லியோ-டெமின் அதிசயம் வரை இமை மூடாது வாசிக்க ஒவ்வொரு வாரமும் எம்மை மகிழ்விக்க வரும் மலர் தினமுரசு நீயே!

ஸம்னாஜெலீல்
-மாத்தளை-

அன்பின் தினமுரசே
நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எம் மனதைக் கவர்ந்து இழுக்கிறது. தாய் தொடர்கதை, லேடீஸ் ஸ்பெஷல், இலக்கிய நயம் போன்ற சுவையான அம்சங்கள் உன்னை மேலும் அழகூட்டுகிறது.

உசா
-முகத்துவாரம்-

அன்பு மலரே
உனது அம்சங்கள் அத்தனையும் வரவேற்கத்தக்கது. உனது சேவை வளர எனது வாழ்த்துகள்.

எம்.பீ.தௌபீக்
-புல்மோட்டை-

இனிய முரசே...!
உன் நூறாவது வரவு என்னை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. உன்னை நான் மலைநாட்டில் தான் சந்தித்தேன். அன்றைய நாள் வசந்தமாகவே முடிந்தது.

எம்.என்.ரிஸ்வானுஸ்ஸமான்
-கண்டி-

தீஞ்சுவை தரும் தேன் முரசே!
உன் அற்புதமான ஆக்கங்கள் எம் விழிகளை விரிப்படைய வைக்கிறது. நடந்தவைகளையும், நடப்பவைகளையும், நடக்கப் போகிறவைகளையும் அருமையாய் அறியத் தருகிறாய். உனது துணிவையும், உறுதியையும், மனமாரப் பாராட்டுகின்றேன்.

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்
-பிலியந்தலை-

அன்புக்கினிய முரசுக்கு,
உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை
இருந்தும், உன்னை விமர்சிக்காமலும் இருக்கமுடியவில்லை
நீ சுமந்துவரும் எக்ஸ்ரே ரிப்போட்டில் இருந்து
அரசியல் தொடர்வரை உனது ஆக்கங்கள் தூள்!
உனது பணி தொடர்க, மகத்தான வாழ்வு பெறுக!

வீரசிங்கம் ஸ்ரீதரன்
-மூதூர்-

முரசே நீ சுமந்து வரும் அரசியல் தொடர் எம் போன்ற இளைய தலைமுறையினருக்கு வரப்பிரசாதம்.

ரி.பிரியதர்சன்
-மட்டக்களப்பு-

ஏய் முரசாரே!
ஏதோ பத்திரிகைன்னா பெரிய நெனப்பா. நீங்க நெனச்சா செய்வீங்க. இல்லாட்டி விட்டிடுவீங்க. வாசகர்களின் கருத்தைக் கொஞ்சம் கேட்டா என்ன குறைந்தா போயிடப் போவுது. கேட்டாங்களே! ரசிகன் யாரு என்று சொல்லுவோமே!! ம்ஹும்... அதெல்லாம் தெரியாது. இதற்கு மேலாவது சொல்ல இல்லே..?..?...? வாசகர் இல்லாம நீ வாழ முடியாது!! தெரிஞ்சுக்கோ ஆ..ம..மா!

ஏ.எச்.ராஸீன் மொகமட்
-ஏத்தாலை-



என் அன்பின் தினமுரசே!
நீ வாரா வாரம் வெளியிடும் அத்தனை அம்சங்களும் மிகமிக பிரமாதம். சிந்தியாவின் சூடான சுவாரஸ்யமான பதில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது.

மு.தெய்வீகரஞ்சனி
-பதுளை-

அன்பின் முரசே!
நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை இதிலும் குறிப்பாக அற்புதன் எழுதும் அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை தொடர் என்னை கொள்ளை கொண்டு விட்டது.

வை.லோகநாதன்
-டிக்கோயா-

மொழிபெயர்ப்பு என்றோ
வெளிநாட்டு எழுத்தாளர்
எழுதியதென்றோ
நினைக்கவே
முடியவில்லை. நமக்காக
எழுதியது
போல் இருக்கிறது 'தாய்'
தொடர்.

எல். தார்தீன்
-மருதானை-

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தமிழ் கட்சிகளது ஆதரவைப் பெற அரசு முயற்சி!!

# பாரிய தாக்குதலுக்கு படையினர் திட்டம்

## தீர்வு யோசனைகளை முன்வைப்பது தாமதமாகலாம்?

**புலிகள் தவிர்ந்த தமிழ்கட்சிகளது ஆதரவைப்பெறுவதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. தமிழ் கட்சிகளிடம் அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து ஜனாதிபதி கலந்துரையாடி இருப்பதன் நோக்கம் அதுதான் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.**

*(அரசியல் செய்தியாளர்)*

### வடக்கு-கிழக்கு இணைப்பு

[illegible] அன்று தமிழ் அரசியல் கட்சிகளை [illegible] ஜனாதிபதி மாகாண சபைகளுக்கு [illegible] அதிகாரம் வழங்குவது தொடர்பான [illegible] யோசனைகளைத் தெரிவித்திருந்தார்.

தமிழ் கட்சிகள் வடக்கு-கிழக்கு ஒரே [illegible] அலகாக் கொண்ட சமஷ்டி அமைப்பு முறை குறித்தே வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி தெரிவித்த யோசனைகள் [illegible] முறைக்கு உட் பட்ட அதிகாரப் பரவலாக்கம் என்ற வரையறைக்குள் அடங்கியவையாகவே உள்ளன.

அதே சமயம் வடக்கு-கிழக்கு மாகாணம் [illegible] நிர்வாக அலகாக இருக்கக் கூடியதாக [illegible] மறுசீரமைக்க ஜனாதிபதி தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

அரசியல் தீர்வு யோசனையில் இது ஒரு முன்னேற்றமான கட்டம் என்று தமிழ்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமிழ் கட்சிகளது ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகிறது.

அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப் படாவிட்டால் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து யோசிக்க வேண்டியிருக்கும் என்று ஈ.பி.டி.பி. , புளொட் ஆகிய தமிழ் கட்சிகள் தெரிவித்திருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பும் அரசியல் தீர்வு அவசியம் என்று கருத்து வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் அரசியல் தீர்வு திட்டம் குறித்து தமது அடிப்படையான சில யோசனைகளை ஜனாதிபதி தமிழ்கட்சிகளது பிரதிநிதிகளிடம் விளக்கியுள்ளார்.

ஈரோஸ், ரெலோ போன்ற அமைப் புக்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய தமிழ் கட்சிகளோடு சேர்ந்து ஜனாதிபதியை சந்திக்க விரும்பவில்லை.

### உடன் சாத்தியமில்லை

ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ் கட்சி பிரதிநிதிகளிடம் ஜனாதிபதியால் தெரிவிக்கப் பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகள் எவ்வளவு விரைவாக நடைமுறைக்கு வரும் என்று தெரியவில்லை.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வுத்திட்டம் ஒன்றை திட்டவட்டமாக முன்வைப்பது அரசுக்கு சாத்தியமாக இருக்காது என்றே அரசியல் அவதானிகள் தெரிவிக் கின்றனர்.

தமிழ் கட்சிகளின் நம்பிக்கையை பெறுவதற்காக தீர்வு குறித்த தனது யோசனைகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். எனினும் தற்போதைய நிலையில் உடனடியாக தீர்வுத்திட்டம் எதனையும் அரசு பகிரங்கமாக முன்வைக்க மாட்டாது என்றே நம்பப்படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும். அவ்வாறு எதிர்ப்பு ஏற்பட்டால் தென்னிலங் கையில் அரசுமீது அதிருப்தி ஏற்படலாம்.

இராணுவ ரீதியிலான தோல்விகள் மத்தியில் அதிருப்தியும் ஏற்படுவதை அரசு விரும்பாது. எனவே புலிகள் மீதான இராணுவ ரீதியிலான வெற்றியை அரசு எதிர்பார்க்கிறது. அதுவரை தனது தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் பின்போட்டு வைத்திருக்கக்கூடும் என்றே அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### பாரிய தாக்குதல்

புலிகள் மீதான பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அரச படைகள் திட்டமிட்டு வருகின்றன.

கிழக்கில் தமது நிலைகளை பாதுகாத்துக் கொண்டு வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள படைகள் யோசித்து வருவதாக நம்பப்படுகிறது.

இதனைப் புலிகளும் எதிர்பார்த்தே உள்ளனர்.

பாரிய தாக்குதல் ஒன்றின் மூலம் தமது கைகள் மேலோங்கும் போது தென்னிலங் கையிலும் வரவேற்பு இருக்கும். அந்த நேரத்தில் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அறிவிப்பதே உகந்தது என்று அரசதரப்பு கருதுவதாக நம்பப்படுகிறது.

### தமிழ் கட்சிகளின் நிலை

"சமஷ்டி அரசியல் அமைப்பையே நாம் கோருகிறோம்; ஆனால் ஜனாதிபதி தெரிவித்த அதிகாரப்பரவலாக்கல் யோசனையை முதல் கட்ட யோசனைகளாக ஏற்றுக்கொள்ளலாம்" என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

"அதிகாரப்பரவலாக்கமும், சமஷ்டி அமைப்பு முறையும் ஒன்றல்ல.நாம் கோருவது சமஷ்டி அமைப்பைத்தான்" என்று கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் ஏற்கெனவே கூறியிருந்தார்.

புலிகளைப் பொறுத்தவரை 'தன்னாட்சி யுள்ள சமஷ்டி' தீர்வுத்திட்டம் முன்வைத்தால் பரிசீலிக்கலாம் என்றே கூறிவருகின்றனர்.

# போருக்கு ஆள் திரட்டிய திரைப்படங்கள்!

## வீடியோ பட ர் பார்த்தோர் விசாரணையில்!

*(மட்டக்களப்பு நிருபர்)*

**மோ**தல் தவிர்ப்பு முறிவடைந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பதட்டமும் பீதியும் இன்னும் தணியவில்லை.

கிழக்கில் தினமும் ஆங்காங்கு நடக்கும் சம்பவங்கள் பதட்டத்தை மேலும் அதிகரித்து வருகின்றன.

இதே வேளை மோதல் தவிர்ப்பு நேரத் தில் புலிகளோடு நெருக்கமாக பழகியவர் கள் பலர் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

மோதல் தவிர்ப்பு நேரங்களில் புலிகள் வீடியோ படங்களை காண்பித்தார்கள். புலிகளால் தயாரிக்கப்பட்ட அத் திரைப் படங்கள் உறுப்பினர் திரட்டிலுக்கும் உதவி யிருந்தன.

மோதல் தவிர்ப்பு காலத்தில் கிழக்கு மாகாணத்தில் புலிகள் அமைப்பினரால் பெருந்தொகையான உறுப்பினர்கள் திரட்டப் பட்டனர்.

இந்த விபரங்களை அறிந்துள்ள படையி னர் புலிகளின் வீடியோ படங்களை பார்வையிட்டவர்கள் என்று சந்தேகிக்கப் படும் பொதுமக்கள் பலரை விசாரணை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மோதல் தவிர்ப்பு நேரத்தில் படையின ரிடம் புலிகள் தமது திரைப்படங்கள் சிலவற்றை பார்வை யிடக் கொடுத்திருந்தனர் என்று விஷயமறிந்த சிலர் கூறுகின்றனர்.

'பிஞ்சு மனம்', 'இன்னொரு நாடு', 'போரம்மா' போன்ற திரைப்படங்களும் பூநகரி முகாம் மீதான புலிகளது தாக்கு தலை சித்தரிக்கும் 'தவளைப் பாய்ச்சல்' திரைப் படமும் கிழக்கில் புலிகளால் காண்பிக்கப் பட்டவையாகும்.

# கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் மீது புலிகள் பாய்ச்சல் !

## விடுதலைப் புலிகள் மீது கரி பூசுகிறார்களாம்

கொழும்பிலிருந்து வெளிவரும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் மீது புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'சண்டே ரைம்ஸ்', 'ஐலண்ட்' ஆகிய பத்திரிகைகள் மீதே புலிகள் கண்டனம் பாய்ந்திருக்கிறது.

கனடாவில் இருந்து வெளிவரும் புலிகளது 'உலகத் தமிழர்' பத்திரிகையில் அந்த முழுப்பக்க கண்டனம் வெளி வந்துள்ளது.

'ஐலண்ட் பத்திரிகை ஆசிரியர், விடு தலைப்புலிகள், தமிழ் மக்களை பிரதிநிதித் துவப் படுத்தவில்லை என்று அடித்துக் கூறுகிறார்.

திருமலையில் ஏப்ரல் 19ம் திகதி கடற்படைக் கப்பல்கள் தாக்கப்பட்ட பின்னர் சண்டே ரைம்ஸ் .பத்திரிகையும், ஐலண்ட் பத்திரிகையும் ஒப்பாரி வைத்து கதறி அழுதிருக்கிறன்றன.

தமிழீழ தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படைதான் விடுதலைப் புலிகள் என்பதை இந்த சக்திகள் ஏற்க மறுக்கின்றன. அதற்கு மாறாக விடுதலைப் புலிகளை ஒரு ஆயுதக் குழு என்றும் பயங்கரவாதிகள் என்றும் நாமங்கள் சூட்டி திருப்தியடை கின்றன.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்ற யதார்த்தம் காரணமாகவே ஜனாதிபதி சந்திரிக்கா தலைவர் பிரபாகரனுடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்.

"விடுதலைப் புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்று ஐலண்ட் பத்திரிகையும், ஜனாதிபதி சந்திரிக்காவும் சொல்வது உண்மையானால், சமாதானப் பேச்சு முறிந்த 24 மணி நேரத்திற்குள் பொருளாதாரத் தடையையும், மீன்பிடித் தடையையும் அமுலுக்கு கொணடுவந்து தமிழ் மக்களை ஏன் தண்டிக்க வேண்டும்?"

இவ்வாறு புலிகளது 'உலகத் தமிழர்' பத்திரிகையில் வெளியாகியுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு அலை?

புலிகளால் யாழ்ப்பாணத்தில் இரண்டு விமானங்கள் வீழ்த்தப்பட்ட செய்தி தமிழக பத்திரிகைகளில் பெரிதாக வெளிவந் திருந்தன.

இச் செய்தியின் பின்னர் தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவான நிலை ஏற்படத் தொடங்கியிருப்பதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

'புலிகள் தமிழீழத்தை அமைத்து விடுவார்கள்' என்று தமிழக மக்களில் கணிசமானோர் நம்பத் தொடங்கியுள்ளனர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைக்குப் பின்னர் தமிழகத்தில் வீழ்ச்சி யடைந்திருந்த புலிகளது ஆதரவு அலை மீண்டும் எழத்தொடங்கியுள்ளது என்றும் நமது நிருபர் அறிவித்துள்ளார்.

# [illegible]நாட்டு இராஜதந்திரிகளோடு புலிகள் சந்திப்பு.

## திலகருக்கு விசா வழங்க கனடா மறுப்பு!

*(கனடா நிருபர்)*

[illegible] ரீதியாக ஆதரவு திரட்டவும், [illegible] பிரசாரங்களுக்கு பதிலளிக்கவும் [illegible] அமைப்பினர் தீவிரமாகவுள்ளனர்.

[illegible] உள்ள புலிகளது பிரமுகர் [illegible] திலகர் வெளிநாட்டு இராஜதந் திரிகளை சந்தித்துப் பேசிவருகிறார்.

[illegible] அமெரிக்க இராஜாங்க [illegible] அதிகாரிகளோடு திலகர் பேச்சு நடத்தியிருந்தார்.

திலகர் வருவதற்கு விசா வழங்க [illegible] அமெரிக்கா மறுத்துவிட்டது. பின்னர் [illegible] ஆபத்தானவர் அல்ல என்று [illegible] படுத்திய பின்னரே அமெரிக்கா [illegible] வழங்கியது.

[illegible] உத்தியோகபூர்வ பிரதிநிதி [illegible] அமெரிக்க இராஜாங்க திணைக் [illegible] அதிகாரிகள் சந்தித்தமை இதுவே [illegible] முறையாகும்.

இலங்கையின் பிரதேச ஒருமைப் [illegible] பேணக்கூடிய தீர்வையே அமெரிக்கா விரும்புகிறது என்று இராஜாங்க [illegible] அதிகாரிகள் திலகரிடம் கூறினார் [illegible]. இச் சந்திப்பின்போது திலகருடன் [illegible] சட்டத்தரணியும் இலங்கைத் [illegible]மான விஸ்வநாதன் ருத்ரகுமாரனும் [illegible] கொண்டார். இவரும் புலிகளது [illegible] ஆதரவாளர் ஆவார்.

இதனையடுத்து கனடா செல்வதற்கு திலகர் அனுமதி கோரினார்.

கனடாவுக்குள் நுழைய விசா வழங்க முடியாதென்று கனடா அரசு மறுத்து விட்டது. கனடாவுக்கு செல்வதற்கு திலகர் தொடர்ந்தும் முயற்சி செய்து வருகிறார்.

திலகருக்கு விசா வழங்க மறுத்தது தொடர்பாக, கனடாவில் இருந்து வெளி வரும் மஞ்சரிக்கு விளக்கமளித்த கனடிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது:

"சமாதானத்தை முறித்து புலிகள் போரை ஆரம்பித்துள்ளனர். இந் நிலையில் திலகரை கனடாவுக்குள் அனுமதிப்பது புலிகளுக்கு நாம் அங்கீகாரம் அளிப்பதாக அமைந்துவிடும். இலங்கையில் சமாதானம் நிலவுவதையே கனடா விரும்புகிறது" என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்காவில் உள்ள பல மாநிலங்களில் திலகர் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் நடத்தியுள்ளார்.

நியூயோர்க், மசாசுசெற்ஸ், கலி-போர்னியா, மிச்சிகன், புளோரிடா போன்ற அமெரிக்க மாநிலங்களில் நடந்த கூட்டங் களில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

"தமிழ் மக்களின் நிரந்தர விடிவுக்கு தமிழ் ஈழம் மட்டுமே ஒரே தீர்வு" என்று திலகர் தனது உரையில் வலியுறுத்தினார்.

# ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் கொலை.

*(ஏறாவூர் நிருபர்)*

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரில் சிறிதயாபரன் என்னும் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புலிகள் இயக்கத்தினரே இக் கொலைக்கு காரணம் என்று அறியப் பட்டுள்ளது. ஏறாவூர் சோதனைச் சாவடிக்கு அருகே உள்ள பிள்ளையார் கோவில் முன்பாக வைத்தே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்ட சிறிதயாபரன் ஈ.பி.ஆர். எல்.எஃப் அமைப்பின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு நேரத்தில் தம்மை சந்தித்து புலிகள் பேசியதாக ஈ.பி.ஆர். எல்.எஃப். மட்டக்களப்பு கிளையினர் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக் கதாகும்.


## முத்தான செய்தி

அடுத்த வார முரசில்

திக்-திக்-கிளு-கிளு-சஸ்பென்ஸ் கலந்த

புதிய தொடர்

எழுதுவது தமிழக எழுத்தாளர்

திகில்கதை மன்னன்

ராஜேந்திரகுமார்

சரி - தொடருக்கு தலைப்பு என்ன?

அது அடுத்த வாரம் வரை சஸ்பென்ஸ்!

முரசு வாசகர்களுக்கு அசத்தலான கதை விருந்து


# [illegible]ல் தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்!

## [illegible]ப் பிரமுகர் மீது குற்றச்சாட்டு

*(சுவிஸ்)*

[illegible]லாந்தில் உள்ள சூரிச் [illegible] இரண்டு தமிழ் இளைஞர்கள் [illegible] தாக்கப்பட்டனர்.

[illegible] அன்று இச் சம்பவம் [illegible]. இத் தொடர்பாக சம்பந்தப் [illegible] இளைஞர்களது உறவினர்கள் பொலி [illegible]. அன்றிரவே கடத்தப் [illegible] திரும்பினார்கள்.

[illegible] 05.05.95 அன்று [illegible] தமிழ் இளைஞரும் சூரிச் [illegible] இரும்புக் கம்பிகளால் [illegible]. வெளியில் வந்த குழு ஒன்றே தாக்குதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. தாக்கப்பட்ட இளைஞர் சூரிச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து சுவிஸிலுள்ள 'தமிழ் மக்கள் உரிமைப் பாதுகாப்பு அமைப்பு' அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சூரிச் நகரில் நடைபெற்ற தாக்குதல் களுக்கு புலிகள் அமைப்பைச் சேர்ந்த முரளிதரனும் அவரது குழுவினருமே காரணம் என்று அந்த அமைப்பு விடுத்த அறிக்கை கூறுகிறது.

# மிதிவெடியால் மரணபயம்

**ம**ட்டக்களப்பு மாவட்டத் தில் படையினர் நடமாடும் பகுதிகளில் புலிகள் மிதி வெடிகளை புதைத்து வைத் துள்ளனர்.

இதனால் பாதுகாவல் கடமையில் ஈடுபடும் படையினர் முதலில் பொதுமக்களை நிறுத்திப் பார்த்துவிட்டுத்தான் குறிப்பிட்ட இடங்களில் பாதுகாவல் கடமையில் ஈடுபடு கின்றனர். இதனால் பொது மக்களும் பாதிப்படைய வேண்டிய நிலை தோன்றி யுள்ளது.

இது தவிர, வீதியோரங் கள், மரநிழல்கள், தெருக்கள் போன்ற இடங்களில் மிதிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளதால் பொதுமக்கள் நடமாட அஞ்சுகின்றனர்.

வீடுகளைவிட்டு வெளியே கால்வைக்கவே பயமாக இருப்பதாக பொதுமக்கள் பலர் பீதியோடு கூறுகிறார்கள்.

யாழ்ப்பாணம் பலாலியில் இரண்டு 'அவ்ரோ' விமானங் கள் வீழ்ந்த பின்னர் கிழக்கிலும் விமானங்களை காண முடியா மல் இருந்தது. தற்போது மீண்டும் பயணிகள் விமானமும், ஹெலிகொப் டரும் கிழக்கில் பறந்து திரிவதைக் காணமுடிகிறது.

# காதோடு காது



உதாரா

## கும்பாபிஷேக குழப்பம்

மட்டக்களப்பு-எல்லை வீதியில் புகழ் பெற்ற இந்து ஆலயம் படாதபாடுபட்டு முழுமுயற்சியின் அறுவடையாக மகாகும் பாபிஷேகம் சுப வேளையில் ஒன்றுகூட அருள் கிடைத்தது. கோவில் துரைத்தனத்தார்-ஒரு பூஜையை முன்னணி அரசியல் வாதிக்கு ஒதுக்கினர். கோவில் நிர்வாகம் ஒரு நல்ல காரியத்தை அன்று செய்தது-நன்றே செய்தது.....? அரசியல்வாதிக்கு ஆலவட்ட வரவேற்பு கிடைத்தது; சுகமாகவும் குணமாகவும் இருந்தது. பார்புகழும் பரராஜவரவேற்பென்றே சொல்லிவிடலாம். அரசியல்வாதி நல்ல காரியமொன்றை செய்தார்...? மேலங்கியுடன் ஆலயத்துள் பிரவேசித்தார். அவரின் பாதுகாவலரும் பாதணியுடன் பின்தொடர்ந்தார். பூஜை முடிந்ததும் வழங்க வேண்டிய காளாஞ்சி, முன்னரே வழங்கப்பட்டது. சுவாமி உள்வீதி வலத்தில் இசைத்த மேளதாளவாத்தியம் அரசியல் தம்பதிகளுக்கா-சாமிக்கா என்றாகிவிட்டது. இச்செய்கையினால் இளைஞர்கள் ஆத்திரங்கொண்டுள்ளனர். இன்னொரு தடவை குறைதீர-கோவில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென விரும்பியுள்ளனர்.

**சென்றிகள் புனரமைப்பு**

மட்டக்களப்பு பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளிலும் காவல் அரண்கள் புதுப்பிக்கப்படுகின்றன-புதிய அரண்களும் சோதனைச் சாவடிகளும் அதிகரித்துள்ளன. சோதனைகளும் ஜரூர் படுத்தப் பட்டுள்ளன.

**பயம் இல்லை**

பகைமைத் தவிர்ப்புக்குப் பின் பகைமை மூண்டது. பயணிகளும் பஸ் பயணத்தைக் குறைத்துள்ளனர். பதைபதைப்பு-பதட்டம்! இதனால் கிராமத்து மக்கள் நகருக்கு வர விரும்புவதில்லை. நகருக்கு-பயந்து பயணம் செய்யாத இவர்கள் கிராமத்தில் ஆறுதலாக இருப்பார்களா என்றால் அதுதானும் இல்லை. அங்கும் 'றவுண்டப்', தேடுதல், ஆள்பிடிப்பு என்றால் எப்படியிருக்கும்!

**முகமூடி மனிதன்**

மட்டக்களப்பில் நீண்டகால இடைவெளிக்குப்பின் முகமூடி மனிதன் தோன்றினான். மட்டக்களப்பு பொலிஸ் நிலைய காவல் அரண்கள் தாக்கப்பட்டதும் அதிகாலையில் இம்மனிதனை மக்கள் தரிசித்தார்கள். கறுப்புத் துணியால் முகத்தை மூடிக்கொண்ட இம்மனிதனின் கண்களை மட்டும்தான் காணமுடிந்தது. வெண்விழிக்குள் இரு கருவிழிகள் யாரைக் கருவறுக்கப் பார்த்து நோட்டம் விட்டதோ தெரியவில்லை.

**வனப்பகுதி அரண்கள்**

உன்னிச்சை, மரப்பாலம், மகா ஓயாப் பிரதேசங்களை அண்டியுள்ள பாதுகாப்பு சிறு அரண்கள் மூடப்பட்டு பெரிய அரண்களில் சங்கமிப்பதாக ஊர்மக்கள் அவதானித்துள்ளனர். பெரும் பலத்தை ஒருங்கிணைக்கவே இந்த ஏற்பாடு என அறியமுடிகிறது.

**ஒருநேர பாடசாலை**

கல்விப்பணிப்பாளரால் உருவாக்கப்பட்ட இரு நேரப் பாடசாலை இன்றைய பதட்ட சூழ்நிலையை முன்னிட்டு இனி ஒரு நேரப் பாடசாலையாக மாறும். மாணவர்களை விட ஆசிரியர்கள் இனி இல்லையென்ற ஆனந்தம் அடைந்திருக்கிறார்களாம்.

**புது வாசகம்**

மட்டக்களப்பு பொது நூலகத்தில் வாசிப்புக்குச் செல்லும் சிலர் யாரோ தெரியவில்லை-தூஷிக்கும் வாசகங்களை எழுதி மனநிறைவு பெறுகிறார்களாம். நாவலாசிரியர் ஒருவரின் நூலில் எழுதியிந்த வாசகம்: "உனக்கு வேறு வேலை இல்லையா? வேலை இல்லாது போனால், தோட்டத்தில் இரண்டு கத்தரியை நாட்டு, அது சோறு போடும்." எழுத்தளானைப் பொறுத்தமட்டில் இந்த வாசகத்தில் அர்த்தம் இருக்கிறது என நியாயப்படுத்துகிறன்றனர். எப்படியிருக்கிறது நம்மவர் நோக்கு?

**மீண்டும் அகதிகள்**

கிட்டு முறிப்புக்குளத் தாக்குதலுக்குப்பின் சிதறிய மக்கள் கதிரவெளி-வாழைச்சேனைப் பகுதிகளினூடாக மட்டக்களப்புக்கு வந்துள்ளனர். உடுத்த துணியுடன் அகதிகளாக வந்துள்ள இவர்கள் நாவலடி போன்ற கிராமங்களில் உயிர்தப்பிய நிலையில் உற்றாருடன் சேர்ந்துள்ளனர். நாவலடியிலும் 'றவுண்டப்' என்றால் எங்கே...?

**கல்லடிப் பாலத்தில் மின் அலங்காரம்**

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய காவல் அரண்களை புலிகள் தாக்கித் தப்பியபின்-மட்டக்களப்பு வாவியில் ரோந்துப்படகுச் சேவை உஷார் படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தின் நீர் நிலைப்பகுதியிலும் உள் பகுதியிலும் பிரகாசம் தரும் வெளிச்ச பல்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

**புலி ஆள்சேர்ப்பில் தவறிய யுவதிகள்**

ஆள் அணி திரட்டலில் உட்படுத்தப்பட்ட சில யுவதிகள் வாகரைப் பகுதியில் வைத்து-வழிதவறி திசைமாறினர். பொலிசிலும் அகப்பட்டனர். மட்டக்களப்புக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் விசாரணைக்குப்பின் விடுவிக்கப்பட்டனர். நல்ல புத்திமதி சொல்லி வீட்டுக்கு அனுப்பியதாகச் செய்தி. ஆயிரத்தில் ஒரு நல்ல காரியம் நடந்தமை, பாராட்டுக்குரியதே.

**மரங்களுக்கு நல்ல வெட்டு**

சுற்றாடல்-சூழல் பாதுகாப்பு சட்டத்தில் மிகுந்த விருப்பம் காட்டுபவர்கள் பலர்-மட்டக்களப்பில் இருக்கிறார்கள். மட்டக்களப்பில் விழிப்புக்குழுக்கள் மத்தியிலும், வனத்தைப் பாதுகாக்கும் அதிகாரிகள் மத்தியிலும் அக்கறை அதிகமாக உண்டு. பாராட்டுக்கள். கொக்குவில் வாவியை அண்டியுள்ள பிரதேசத்தில் கண்டல்காடுகள் அழிக்கப்பட்டுள்ளதும், கருவேப்பங்கேணியில் ஒரே நாளில் நாற்பது பனைமரங்கள் 'சென்றி'க்கு வெட்டப்பட்டிருப்பதும் இவர்கள் அறிவார்களா என ஸ்ரீமான் பொதுஜனம் கேட்கிறார்.

**ஊருக்கு உபதேசம்**

மட்டக்களப்பில் வனவளத்தைப் பெருக்கவும் பாதுகாக்கவும் விரும்பும் ஒரு அதிகாரி தன் வீட்டுக் குப்பையை-மதிலுக்கு வெளியே எறிகிறாராம். 'ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே,' என்ற பழமொழி இவருக்கு பொருந்தும் என பாதிப்புக்குள்ளாகும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

# கொச்சிக்காப் போடியார் பேசுகிறார்

★பத்தொம்பதாம் திகதி மலையில் தண்ணிக்குள்ள குழம்பினதோட தொட்டுது அண்ணே கயிட்டம்.

★இலச்சனுக்குள்ள தமிழுக்கு எடுக்கப் போற மெண்டுதான் தமிழ்ச்சனமும் அள்ளிப் போட்டதுகள்.

★படம் பாத்தவங்க எல்லாம் பட்டாங்க. தோள்பட்ட உரிய இப்ப ஆமிட்ட வாங்கிறாங்க"

***அய்யாத்துர அண்ணே!***

எழுதின கடதாசிகளுக்கும் நீங்க வெகு காலமா பதில் எழுதாம உட்டுத்தியள். நான் ஒருவரில நேசம் வைச்சா மறக்க மாட்டன் எண்டு உங்களுக்குத் தெரியும் தானே! இண்டைக்கு, நேத்தா நான் உங்களோட பழகின. சரியான கணகாட்டா போயித்து. கக்கிசமெண்டா, கக்கிசமில்ல. வருஷக் காரனும் வந்து போயித்தாரு.

பத்தொம்பதாம் திகதி மலையில தண்ணிக்குள்ள குழம்பின தோட தொட்டது அண்ண கயிட்டம். எங்களட எம்.பி மாருக்கும் வேலையாப் போச்சு. நாங்களும் தமிழனுக்காக கத்திறம் எண்டு குல்மால் பண்ண.

ஓம் அண்ண, இலச்சனுக்குள்ள தமிழுக்கு எடுக்கப் போறமெண்டுதான் தமிழ்ச்சனமும் வோட்ட அள்ளிப் போட்டுதுகள். இப்ப, அடிச்சா, புடிச்சா, ரோட் மறிச்சா தமிழனுக்காக கத்தத்தானே வேணும் எண்டு, குறிஞ்சிப்போடி முணுமுணுத்துப் போறாரு.

எங்கட ஆக்கள சப்புச் சுப்பா எண்ணக் கூடா. பீனாக்கிளான் கிணறு வெட்ட அணில் பிள்ள உறுண்டு பிரண்டு விளையாடின போலதான் கத. இந்த நாசமத்த வேலைய ளால தானே நம்மட சாதியும் நாசமத்துப் போயித்து.

நக்குண்ட சாதியா போயித்தண்ண நம்மட சாதி. எல்லாம் தேன் தொட்ட விரல சூப்பாம விட்டா, அவனப் போல மடயன் ஆரண்ண இருக்கான்? அய்யாத்துர அண்ண, சரியா குளறு குளறு எண்டு குளறிப் போட்டுத் தான் உங்களுக்கும் என்னத்தை யாச்சும் ஊர்ப் புதினங்கள எழுதுவுமெண்டு எண்ணினநான்.

நம்மளத் தொட்ட மாராயம் எப்ப அண்ண தொங்கலாகும்? நம்மட ஊட்டுப் பூனைக் கெண்டாலும் மணிகட்டிப் போட லாம். ஆரு கட்டுறதெண்டு தெரியாமக்கிடக்கு.

நான் இப்ப கொத்தியாவலப்பக்கமும்

## மட்டக்களப்பு புதினம்

போறதில்ல. தமிழ் தெரியாத ஆக்கள் கொட்டியா (புலி) கொல எண்டு கூப்பிடு கிறானுகள்.

எங்கட ஊர் கன்னயில நடக்கிற காரியங் களப் பாத்தா யாழ்ப்பாணம் போயித்தா நல்லம் போல கிடக்கு.

நாமளும் அம்மாட பக்கம் நிண்டதோ, நிக்கல்லையோ-நிண்டபோல காட்டினத்தால இந்த ஆசுபத்திரக்கொமிட்டியிலயும் ஒரு மாதிரிப் பூந்துத்தன். பூந்த புறகுதான் பாத்தன்- ஏன் பூந்தன் எண்டு.

பெரிய திப்பிராட்டியம் புடிச்ச ஆசுப்பத் திரி. மருந்தும் இல்லாத, டாகுத்தனும் இல்லாத-பேசக்கதைக்க ஆளும் இல்லாத ஆசுபத்திரியில செச்ச! என்னத்துக்குத்தான் ஓடி ஆடிப் பூந்தன் எண்டு இப்பதான் யோசிக்கன்.

எல்லாத்தையும் உட்டுக்கிடாவிப் போட்டு -வயலுக்க போய் கிடப்பமெண்டா- அதுவும் ஏலபோல கிடக்கு. ஒரு கன்னயில பொடிய னுகள்; இன்னொரு கன்னயில ஆமிக் காரனுகள். பொடியனுகளுக்கிட்ட எண்டா சொல்லிக்கில்லித் தப்பலாம்.



ஆமிப்படையில கிடக்கிறவனுகளுக்கிட்ட சொல்லிக்கில்லி வாய்க்கா. இப்ப இரிக்கிற நேச்சரில வாய்க்குள்ள போட்டிடுவானுகள்.

பொடியனுகள் ஊருக்குள்ள வந்து கிடக்கக்க நாங்க கிட்டயும் முடுகல்ல. ஏனெண்டா முந்தின சண்டையில கக்கிசப் பட்ட நாமதானே-எண்டு.

இப்ப என்னடா எண்டா, பொறுப்புத் தறுப்புக்கு பொடியனுகளுக்கு உதவின வங்க, படம் பார்த்தவங்க, தண்ணி, கிண்ணி குடுத்தவங்க, சோறு கீறு குடுத்தவங்க எல்லாரும் பட்டாங்க! தோள்பட்ட உரிய வாங்கிக் கட்டுறானுகள் எண்டு நம்மட தோலருர பேத்தி-பெரியபிள்ள சொல் லித்துப் போறாள்.


## BRIGHT ன் கல்வித்திட்டம்

**90 DAYS SPOKEN ENGLISH & SINHALA**

**3 ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலக்கல்வி**
**POSTAL TUITION WITH THREE AUDIO CASSETTES**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்துள் இலகுவாக எளிய நடையில் மாணவர்களின் விருப்புக்கு ஏற்றமுறையில் நவீன உளவியல் முறையில் ஆங்கில/சிங்கள பேச்சு மொழி கற்றுத்தரப்படும்.

எமது பாடத்தொகுப்புடன் ஒவ்வொரு மாதமும் ஒரு கசெட் ஆக 3 ஒலிப்பதிவு நாடாவும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில/சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுகின்றது.

**METHOD OF BOOK KEEPING**
**கடைக் கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இப் பயிற்சிநெறியை மேற்கொள்வது மூலம் Book-Keepers, Accounts Clerk, Audit Clerks, Bank Clerks, Cost Clerks ஆகிய தொழில்களை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில். நுட்பகல்வி நெறியாகும். இப்பயிற்சியை திறம்பட முடிப்பவர்கட்கு நற்சான்றிதழும் வழங்கப்படும்.

**G.C.E. (O/L) முன்னோடி பயிற்சி - 1000 வினாவிடை**
**ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பயிற்சி – புதியபாடத்திட்டம்**

பரீட்சை எடுக்கும் மாணவர்கட்கு சிறப்பு சித்தியை (D) பெற்றக்கொடுக்கும் பாடப்பொழிப்பு, விளக்கம் ஒவ்வொரு பாடத்திற்கும் 1000 வினாவிடை கொண்ட பாடத்திட்டம். ஆண்டு 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கேற்ற முறையில் அதிக புள்ளியை பெற்றுத்தரும் முன்னோடிப் பயிற்சித் திட்டம். பரீட்சையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் BRIGHT ன் வெகுமதி வழங்கப்படும்.

**இத்தோடு வெளிவந்துவிட்டன**
**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான**

ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 4,5 குரிய பாடநூல் 75/=
ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 5 செயல்முறைப் பயிற்சி 60/=

800 மாதிரி வினா. 500 பொது அறிவு கேள்வி பதில். 250 விவேக கணக்குகள்
9 பாடங்களை உள்ளடக்கிய கேள்வி களுடன் கூடிய மாதிரி வினா நூல் 100/=

(புத்தகங்களை 20/- பெறுமதியான முத்திரை அனுப்பி V.P.P யில் பெற்றுக்கொள்ளலாம்)
மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
S - 27, FIRST FLOOR, P. O. BOX - 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. T.P 434770



**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:


| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 505/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 258/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 132/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் — THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 — P.O.BOX: 1772
கொழும்பு — COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.





**அற்புத மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட் டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.).
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


## அவுஸ்திரேலியாவில் 'பாப்பா பாரதி.'

மெல்பனில் வாழும் தமிழ்க் கலைஞர்கள் பரலது விடாமுயற்சியின் பயனாக 'பாப்பா பாரதி' என்னும் குழந்தைகளுக்கான தமிழ் வீடியோ மலர்ந்துள்ளது. இதன் நீளம் 45 நிமிடங்கள்.

இது எங்கள் முதல் முயற்சியாகும். இந்த வீடியோ பெறும் வரவேற்பு, மேலும் எம்மை இத்துறையில் ஊக்குவித்து, தரத்தில் இன்னும்கூடிய தயாரிப்புக்களைத் தமிழ்ப் பிள்ளைகளுக்காக எதிர்காலத்தில் தருவதற்குத் துணை புரியும். தமிழ்ப்பிள்ளைகளுக்கு - அவர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் சரி - இத்தகைய தமிழ் வீடியோக்களின் தேவை இன்று மிக அவசியமாக உள்ளது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இலாப நோக்கற்ற இந்த வீடியோ முயற்சிக்காக ஏற்கெனவே எமக்குச் சில உதவிகள் கிடைத்திருப்பினும், கணிசமான விற்பனை இன்றிச் செலவுகளைச் சமன் செய்தல் சாத்தியமில்லை. 1995 மே மாத இறுதியில் உலகின் பல்வேறு நகரங்களிலும் இந்த வீடியோ மிகவும் நியாயமான விலையில் விற்பனைக்கு வர இருக்கிறது.

உலகெங்குமுள்ள தமிழ் அமைப்புக்கள், பத்திரிகைகள், வானொலிகள், பாடசாலைகள், தமிழர்களின் வர்த்தக நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் இன்னோரன்ன யாவருடைய உதவியையும் ஒத்துழைப்பையும் தாம் வேண்டி நிற்பதாக அவுஸ்திரேலியாவில் உள்ள 'பாரதப்பள்ளி' அதிபர் மாவை நித்தியானந்தன் கூறியுள்ளார்.

## வெள்ளி விழாக்கண்ட குருநாகல் இந்து!

—(குருநாகல் நிருபர்)—

வடமேல் மாகாணத் தலைநகரில் 1969ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ் அறிவொளி பரப்பும் குருநாகல் இந்துத் தமிழ் மகாவித்தியாலயம் வெள்ளி விழாவை வெகுசிறப்பாகக் கொண்டா டியது.

குருநாகல் சைவமகாசபை யினரால் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக புதிய கட்டிடமொன்று நிறுவிப் பரிசளிக்கப் பட்டது. இதைப் பிரதி அமைச்சர் பி.சந்திரசேகரன் திரைநீக்கம் செய்து வைத்தார். இக்கட்டிடத்தை கட்டி முடிக்க குருநாகல் சைவமகாசபைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆ.சுப்பிரமணியம் அவர்களும், இதர நிர்வாகசபை உறுப் பினர்களும் முன்னின்று உழைத்தனர்.

அன்றைய தினம் வெள்ளி விழா சிறப்பு மலரொன்று வெளியிடப்பட்டது. இதற்கான நல்லாசிகளை விசேடமாக சாமி விஸ்வநாதக் குருக்களும், சிவலோக பதவியடைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோருடன் அமைச்சர்களும், கல்விமான்களும், கல்வித் துறை அதிகாரிகளும் வழங்கியிருந்தனர். இறுதியாக பரிசளிப்பு விழாவும், கலைநிகழ்ச் சிகளும் நடைபெற்றன. பரிசில்களுக்கான பொறுப்பை பழைய மாணவர்கள் பொறுப் பேற்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அதிபர் க.கந்தசாமி தன் ஆசிரிய குழாத்துடன் இப் பாடசாலையை வெகுவாக முன்னேற்றியிருப்பதை பலரும் பாராட்டினார்கள். அதிக எண்ணிக்கை யானோர் கலந்து கொண்ட இவ்விழா வெகு சிறப்பாக அமைந்தது.


**G.C.E. (0/L)-95**
**MATHS**
**விரிவுரை**
K.V. SATHIYAMOORTHY
ஆரம்பம்: 30.05. 95
(ஏனைய பாடங்களும் கற்பிக்கப்படும்)
தொடர்புகளுக்கு:
32/E HATTON ROAD,
TALAWAKELLE.



**FLASKS**
சகலவிதமான பிளாஸ்க் (Flask) வகைகளிலும் றீபில் (Refill) வகைகளும் பல்வேறு அளவுகளிலும் டிசைன்களிலும் கிடைக்கும்
PETTAH CENTRE
67, Bankshall Street,
Colombo - 11.
Tel: 330213

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளிடம் விமானப்படை?

இது வரை வடபகுதி மக்களுக்குத்தான் வானம் தொல்லையாக இருந்தது.

இப்போது அரசுக்கும், படைகளுக்கும் கூட வானமே தொல்லையாக மாறியிருக்கிறது.

புலிகளிடம் விமானங்கள் இருப்பதாக வெளிவந்த செய்தி ஏவுகணை வேகத்தில் தலைநகர் வரை அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை எந்தவொரு நாட்டுடனும் சண்டைக்குப் போகாத சமர்த்துப் பிள்ளை. அதனால் இலங்கைப் படைகளுக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இதுவரை தேவையாக இருக்கவில்லை.

ஆயுதங்களோடு ஆயுதங்களாக கொஞ்சம் விமான எதிர்ப்பு ஆயுதங்களையும் இலங்கை வாங்கி வைத்திருந்தது.

அவை உபயோகமாகக்கூடும் என்று அரச படையினர் நினைத்தே இருக்கமாட்டார்கள்.

இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் அடுத்தடுத்து விழுந்தபோதுதான் படைத்தரப்பு விழித்துக்கொண்டு வானத்தைப் பார்க்கத் தொடங்கியது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை புலிகளால் கொண்டுவர முடிந்துள்ள போது, விமானங்களை ஏன் கொண்டுவர முடியாது என்று படைத்தரப்பு யோசிக்க ஆரம்பித்தது.

விமானம் என்றால் பெரியரக விமானங்கள் என்று அர்த்தமல்ல.

முன்பு ஆங்கிலப் படங்களிலும் தற்போது தமிழ் படங்களிலும் கூட 'கிளைடர்' விமானங்கள் சண்டைக் காட்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

'கனம் கோட்டார் அவர்களே' என்றொரு படம் நம்மூர் தொலைக் காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டது.

அந்தப் படத்தில் 'கிளைமாக்ஸ்' காட்சியில் சத்யராஜ் பறந்துவந்து டப்பு டப்பு என்று துப்பாக்கியால் சுடுவார். அவர் பறந்து வந்ததுதான் 'கிளைடர்' விமானம்.

வெளிநாடுகளில் கிளைடர் விமானங்கள் சுலபமாக வாடகைக்கு கிடைக்கும். யார் வேண்டுமானாலும் வாடகைக்கு எடுத்து ஜாலியாக சுற்றிவிட்டு வந்து திருப்பிக் கொடுக்கலாம்.

கிளைடர் விமானங்கள் மட்டுமல்ல ஹெலிகொப்டர் கூட வெளிநாடுகளில் வாடகைக்கு கொடுக்கிறார்கள்.

கிளைடர் விமானத்தின் உதிரிப் பாகங்களை வெளிநாடுகளில் விலைக்கு வாங்கமுடியும்.

ஹெலிகொப்டர் கூட விலைக்கு விற்கப்படுகிறது.

புலிகள் மிகத் தீவிரமாகச் செயல்படும் கனடா போன்ற நாடுகளில் கூட ஹெலிகொப்டர்கள் விற்பனைக்கு இருக்கின்றன.

கிளைடர் விமானத்தையோ, ஹெலிகொப்டரையோ அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்து பொருத்த முடியும். தொழில் நுட்பம் தெரிந்த ஒருவர் இருந்தால் போதும்.

வெளிநாடுகளில் விமானங்கள் செலுத்த கற்றுக்கொடுக்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவ்வாறு கற்றுக் கொடுக்கும் போது விமானங்கள் பற்றிய தொழில் நுட்பத்தையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

புலிகளின் பிரமுகராக இருக்கும் ஒருவர் கொஞ்சக்காலம் கனடாவில் இருந்தவர்.

அங்கு ஹெலிகொப்டர் செலுத்தும் பயிற்சியும் பெற்றவர். இவர் தற்போது யாழ்ப்பாணத்தில்தான் இருக்கிறார்.

அவருக்கு தொழில் நுட்பம் தெரிந்திருக்கலாம்.

எனவே 'கிளைடர்' போன்ற சிறிய ரக விமானத்தை புலிகள் தயார் செய்வது நினைத்துப் பார்க்கமுடியாத விஷயமல்ல.

யாழ் மாவட்ட புலிகளது தளபதியாக கிட்டு இருந்தபோதே விமானம் தயாரிக்கும் முயற்சி நடந்தது.

ஹொண்டா 200 ரக மோட்டார் சைக்கிள் எஞ்சினை வைத்து, அதன் சக்தியில் இயங்கும் குட்டி விமானத்தை தயாரிக்க கிட்டு முயற்சி செய்தார்.

1987ல் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சிறிய விமானம் போல் ஒன்றைத் தயாரித்து புலிகள் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தார்கள். அது தரையில் மட்டுமே ஓடியது. மேலே உயரமாட்டேன் என்று அடம்பிடித்தது. அத்தோடு அந்த முயற்சியை ஒத்திவைத்து விட்டார்கள்.

ஆக, விமானப்படை ஒன்றை தயார் செய்ய வேண்டிய அவசியம் பற்றி புலிகள் நீண்டகாலமாகவே யோசித்து வந்திருக் கிறார்கள்.

கடற்புலிகளுக்குரிய அதிவேகப் படகுகள் பல புலிகளால் உள்ளூரில் தான் தயாரிக்கப் படுகின்றன.

அதேபோல விமானப் படைக்குரிய தயாரிப்புக்களையும் வெளியில் இருந்து தருவித்த உதிரிப்பாக உதவிகளோடு புலிகள் உள்ளூரில் வைத்துச் செய்யும் சாத்தியங்கள் உள்ளன.

சிறியரக விமானம் ஒன்றை புலிகள் சமீபத்தில் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்ததாக பொதுமக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

அந்தத் தகவல் தலைநகர்வரை எட்டிவிட்டது. அதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் மறு பரிசீலனைக்கு உள்ளாகியுள்ளன.

ஆனால், புலிகள் இதுவரை தம்மிடம் விமானம் இருப்பதாக வெளிவரும் செய்திகள் குறித்து வாயே திறக்கவில்லை.

விமான எதிர்ப்பு ஏவுகணை தம்மிடம் இருக்கிறதா இல்லையா என்று கூட புலிகள் இதுவரை தெளிவாக ஒன்றும் சொல்லவில்லை.

அவர்கள் வாய்திறக்காமல் இருப்பதால் தான் அரசாங்கமும், படைத்தரப்பும் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

புலிகள் தம்மிடம் என்ன இருக்கிறது என்று சொல்லித் தொலைத்தாலாவது அதற்கேற்ப மாற்று ஏற்பாடுகளை செய்ய முடியும். இப்போது வாய்வழி செவிவழிச் செய்திகளை நம்பி ஓடுப்பட்டுத் திரிய வேண்டியிருக்கிறதே என்பதுதான் படைத் தரப்பின் உயர்மட்டத்தில் உள்ள கவலை.

புலிகளைப் பொறுத்தவரை தம்மிடம் விமானம் இல்லாவிட்டால் கூட உண்மையைச் சொல்லப் போவதில்லை.

எதிர்த்தரப்பின் மனோவலிமையை தகர்க்கும் விதமான செய்திகள் உருவாவதையும், உலாவுவதையும் மறுதரப்பு விரும்பவே செய்யும்.

தென்னிலங்கையில் புலிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரமிப்பு படையினரின் மனோவலிமைக்கு எதிராக மாறிவருகிறது.

புலிகள் தொடர்பான பிரமிப்புக் காரணமாக பல வதந்திகள் பரவுகின்றன.

சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் புலிகள் தொடர்பான வியப்பை தோற்றுவிக்கும் செய்திகளும், கட்டுரைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

புலிகள் படைகளுக்கு எதிராக செய்ய வேண்டிய உளவியல் யுத்தத்தை தென்னிலங்கையில் உலாவும் வதந்திகளும், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் கச்சிதமாகச் செய்துவருகின்றன.

'புலிகள் பொல்லாத கில்லாடிகள். படைகளால் அவர்களை வெல்வது சந்தேகம்தான்' என்ற நம்பிக்கைதான் இந்த செய்திகளின் அடிப்படையாக இருக்கிறது.

அதனால்தான் பூநகரி முகாம் சுற்றி வளைப்பு என்று ஒரு நாள் வதந்தி பரவுகிறது. பலாலி முகாம் முன்பாக புலிகள் நின்று சரணடையச் சொல்கிறார்கள் என்று மறுநாள் இன்னொரு வதந்தி கூறுகிறது.

இப்போதைய எதிர்பார்ப்பெல்லாம் புலிகளின் விமானத் தாக்குதல் எங்கே நடக்கப்போகிறதோ? என்பதுதான்.

இங்கே கவனிக்க வேண்டிய விடயம்- புலிகளிடம் விமானம் இருந்தாலும் கூட உடனடியாக அதனை பயன்படுத்துவார்களா என்பதுதான்.


பெரிய ரக விமானம் புலிகளிடம் இருக்கமுடியாது. போர் விமானமும் புலிகளிடம் கிடைக்க உடனடி வாய்ப்பில்லை.

சிறிய ரக விமானங்கள்தான் புலிகளிடம் இருப்பதாக வைத்துக்கொண்டால் அவைகூட ஒன்றோ இரண்டோதான் இருக்க முடியும்.

பெருமளவில் வாங்குவதற்கு பெருந்தொகை நிதி தேவை. பெருமளவான உதிரிப் பாகங்களை கொண்டுவந்து சேர்ப்பதும் சுலபமல்ல. இதெல்லாம் நீண்டகாலம் தேவையான நடவடிக்கைகள்.

புலிகளிடம் நிதி இருந்தாலும் தனியே விமானம் வாங்குவதில் மட்டும் அவற்றை செலவழித்தால் நிதி நெருக்கடி நிச்சயம் ஏற்படும்.

எனவே-ஒன்று அல்லது இரண்டு 'கிளைடர்' விமானங்கள் புலிகளிடம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறு இருந்தால் அவற்றை தேவையில்லாமல் இழப்பதற்கு புலிகள் முன்வரமாட்டார்கள்.



இது ஒருவர் மட்டுமே பறந்து இயக்கக்கூடிய 'கிளைடர் விமானம்'. ஒன்றுக்கு மேற்பட்டோர் இருந்து பயணம் செய்யக் கூடிய 'கிளைடர்' விமானங்களும் பல ரகங்களில் இருக்கின்றன.

கிளைடர் விமானத்தில் வந்து தாக்குதல் நடத்தலாம். ஆனால் திரும்பிச் செல்ல முடியுமா என்பது படையினரின் பதிலடி நடவடிக்கையைப் பொறுத்த விடயம்.

'கிளைடர்' விமானத்தை சுட்டு வீழ்த்துவது சுலபம். ஏனெனில் மிக உயரத்திலோ அல்லது துரித வேகத்திலோ 'கிளைடர்' விமானம் பறக்க முடியாது.

பாதுகாப்புக்குரிய முக்கிய நிலைகள் மீது அல்லது படை முகாம்கள் மீது வான் வழியாக வந்து தற்கொலைத் தாக்குதல் நடத்த புலிகள் நினைக்கலாம் என்று படைத்தரப்பு சந்தேகிக்கிறது.

**நாரதர்**

அந்த சந்தேகத்தில் நியாயம் இருக்கலாம். ஆனால் தற்போதைக்கு புலிகளுக்கு அதற்கான அவசியம் இருக்கிறதா என்பதே கேள்விக்குரிய விடயம்.

முக்கியமான தருணம் ஒன்றில்தான் அதிகபட்ச இழப்புக்கு எந்தவொரு தரப்பும் முன்வருவதுண்டு.

தற்போது புலிகள் விமானத்தாக்குதல் நடத்தித்தான் தமது பலத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அவசியமில்லை.

ஆனால், பூநகரி இராணுவமுகாம் அல்லது பலாலி இராணுவ முகாம் போன்றவற்றின் மீது இறுதியான தாக்குதல் ஒன்றைத் திட்டமிட்டு தமது சிறிய ரக விமானங்களை புலிகள் பயன்டுத்தக்கூடும்.

இழப்புக்கேற்ற லாபம் கிடைக்கும் முக்கிய தருணத்தில்தான் புலிகள் தம்மிடமுள்ள விமான்த்தை இழக்க முன்வருவார்கள்.

எப்படியோ தலைநகரான கொழும்பிலோ அல்லது தூர இலக்குகள் மீதோ புலிகள் விமானத் தாக்குதல் நடத்தும் சாத்தியம் உடனடியாக இல்லை என்றே தெரிகிறது.

ஆனால், படைத்தரப்பை பொறுத்தவரை இனி புலிகளது விமானத் தாக்குதலை எதிர்பார்த்து விமான எதிர்ப்பு ஆயுதங்களோடுதான் எங்கும் இருந்தாக வேண்டும்.

விமானப்படையின் விமானங்கள் செல்லும் போது கூட 'நமது விமானங்கள் தானே' என்று இனிமேல் அலட்சியமாக இருக்க முடியாது.

எப்போது விமானத் தாக்குதல் நடக்கும், எங்கு நடக்கும் என்ற தினசரி எதிர்பார்ப்பு படைத்தரப்பின் மனோவலிமைக்கு சோதனையாக அமையலாம்.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதாக தெரியவந்திருக்காவிட்டால், புலிகளிடம் விமானம் இருப்பதாக வந்த செய்தியும் முக்கியத்துவம் பெற்றிருக்காது.

ஏவுகணையை வாங்கியவர்களால் 'கிளைடர்' ரக விமானங்களையாவது வாங்க முடிந்திருக்கும்தானே என்ற கருத்துத்தான் அரசின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

□□

ஏப்ரல் 19ல் மோதல் தவிர்ப்பு முறிந்தபின்னர் பிரதான எதிர்க்கட்சிக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

சமரச முயற்சியில் சறுக்கல் ஏற்படும் என்று தெரியும். எப்போது ஏற்படும் என்றுதான் பிரதான எதிர்க்கட்சியும், அதன் தலைவர் ரணிலும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

இப்போது ஜனாதிபதி சந்திரிக்கா மீது எங்கிருந்து தாக்குதலை தொடங்குவது என்பதுதான் ரணில் விக்கிரமசிங்காவின் ஒரே யோசனை.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்காவின் வசீகரம்தான் எதிர்க்கட்சிக்கு பெரிய பிரச்சனை.

புலிகளோடு பேச்சு முறிந்த போது சந்திரிக்கா ஏமாந்து போனார் என்பதைவிட, புலிகள் ஏமாற்றிவிட்டார்கள் என்று தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் சந்திரிக்காவுக்கு சாதகமாக இருக்கிறது.

சமாதானத்தின் அவசியத்தை சிங்கள மக்கள் பெரும்பான்மையோர் விளங்கிக் கொண்டுள்ளனர்.

புலிகளை யுத்தத்தில் வெல்வது சுலபம் அல்ல என்பதும் தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

எனவே-சந்திரிக்கா புலிகளோடு பேசியது தவறு என்ற கருத்துக்கு ஆதரவு பெரிதாகத் திரளப் போவதில்லை.

அதனால் எதிர்க்கட்சி வேறு ஒரு கோணத்தில் இருந்து தாக்குதலை தொடுக்க உத்தேசித்துள்ளது.

"புலிகளோடு பேசியது இருக்கட்டும். புலிக்கொடிக்கு கீழே இருந்து ஏன் பேசினீர்கள்?" என்ற கேள்வியோடு எதிர்க்கட்சி இறங்கியிருக்கிறது.

ஆனால் ஆறின கஞ்சி பழங் கஞ்சி. புலிக்கொடிப் பிரச்சனை பேச்சின் ஆரம்ப கட்டத்திலேயே 'ஐலண்ட்' போன்ற பத்திரிகைகளில் எழுப்பப்பட்டன. அப்போது மௌனமாக இருந்துவிட்டு எல்லாம் முடிந்தபின்னர் மீண்டும் கிளறுவது எந்தளவுக்கு சிங்கள மக்களைக் கவரும் என்பது கேள்விதான்.

புலிக்கொடி பிரச்சனையை முக்கியமாக வைத்து அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும் யோசனை எதிர்க்கட்சிக்கு இருப்பதாகத் தெரிகிறது.

ஆளும் தரப்பில் உள்ள லலித் அத்துலத் முதலி அணியின் ஆதரவு தமக்கு கிடைக்கலாம் என்று ஐ.தே.கட்சி எதிர்பார்க்கிறது.

ஆனால், அப்படிக் கிடைத்தாலும் கூட பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகளின் ஆதரவு ஐ.தே.கட்சிக்கு கிடைக்கப் போவதில்லை.

புலிக்கொடி பிரச்சனையை அரசுக்கு பாதகமானதாக்க தமிழ் கட்சிகள் விரும்பப் போவதில்லை.

தற்போதைக்கு ஐ.தே.கட்சியால் சந்திரிக்காவின் வசீகரத்தை மீறி ஆட்சியதிகாரக் கனிக்கு அம்பு எய்ய முடியாது.

எனினும் தொடரும் யுத்தமும், சூழும் நெருக்கடிகளும் வசீகரத்தால் மட்டுமே சமாளிக்கக் கூடியவையல்ல.


அரசின் நிர்வாக வேகம், முடிவெடுத்துசெயற்படுத்தும் திறன்குறித்தெல்லாம் பொதுஜன முன்னிணிக்குள் கூட புகைச்சல்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு தீவிர ஆதரவாக இருந்தவர்கள் கூட முணுமுணுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா சூழலை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொண்டால் வசீகரமும் சேர்ந்து அவருக்கு பாதுகாப்பளிக்கும்.

இல்லாவிட்டால் எதிர்க்கட்சிக்கு மகிழ்ச்சிதான்.

## அதிரடி அய்யாத்துரை



சில காலத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் செல்வியின் வீட்டுக்கு மேலாக மர்ம விமானம் ஒன்று பறந்தது தெரியுமோ? அது பெரிய சர்ச்சையானதல்லோ? பறந்தது 'கிளைடர்' எண்டு ஊகிச்சவையல்லோ? இப்ப ரெண்டு எழுத்தாரும் 'கிளைடர்' வைச்சிருக்கினம் எண்டுகதை பரவியிருக்கல்லோ? செல்வி வட்டாரம் மீண்டும் பழைய [illegible]த்தை கிளறி முடிச்சுப் போட்டுப் பார்க்குதாம். இனித் தமிழ் நாட்டிலும் கிளைடர் பறக்கத் தடை வரலாம்.

வவுனியாவிலை இருந்து கொழும்பிலை இருக்கிற புருசனுக்காக [illegible] இரண்டோடு வந்தார் மனைவி. கொழும்பு ரயில் [illegible]திலை பையைத் திறக்கச் சொல்ல, மெல்ல திறந்திருக்கிறார். அடுத்த நிமிசமே பச்சை உடைக்காரர் பாய்ஞ்சு விலகிப் போய் [illegible]. ஏன் தெரியுமோ? வாழைப்பூ அவைக்கு 'மோட்டார் [illegible]' மாதிரித் தெரிஞ்சதுதான் காரணமாம். கையிலை எடுத்துக் [illegible] பிறகுதான் கிட்ட வந்து 'அட உதுதானோ' எண்ட [illegible] பார்த்தினமாம். வாழைப்பூ கொண்டுவருவோர் எதுக்கும் [illegible] இருக்கிறது நல்லது.

ஆங்கிலத்தில் ஹி (He) என்று சொன்னால் அவர் என்றும் சொல்லலாம். அவன் என்றும் சொல்லலாம். இந்திய சஞ்சிகை ஒண்டு ஜனாதிபதியிடம் ஆங்கிலத்தில் பேட்டி எடுத்தது. ரெண்டு எழுத்தாரின் தலைவரை 'அவன், இவன்' எண்டு ஏக வசனத்திலை வாறமாதிரி பேட்டியை தமிழில் பிரசுரித்திருக்கினம். ஜனாதிபதிதான் அப்படி ஏக வசனத்திலை சொன்னமாதிரி நினைக்கட்டும் எண்டு பேட்டி எடுத்தவர் சின்ன வேலை செய்திருக்கிறார். கருத்து மோதல் இருக்கலாம். காரசாரமாய் விமர்சிக்கலாம். அதுக்காக அடுத்தவர் முதுகுக்கு பின்னாலை மறைஞ்சு நிண்டு மூட்டி விடக்கூடாது. சம்பந்தப்பட்ட சஞ்சிகை உணர்ந்தாச் சரி.

கிழக்கின் வெகுஜன பிரதிநிதியான சிங்கத்தார் வெகுஜன சபைக் கூட்டத்திற்கு வரேல்லையாம். ஏன் எண்டு கேட்டதற்கு கிடைத்த பதில், விமானப் போக்குவரத்து இல்லை. தரைப் போக்குவரத்துப் பாதுகாப்பில்லை அதாலை வரேல்லையாம். ரெண்டு எழுத்தாரைப் பொறுத்தவரை கூட்டான கட்சியின் அணுகுமுறை-நம்ப நட, நம்பி நடவாதேதான். சிங்கத்தாரும் அந்தப் பொலிசியைத்தான் பின்பற்றுகிறாராக்கும்.

தொலைக்காட்சி வசந்தமானவர் விலகிப்போய் மீண்டும் வெளிநாட்டு வானொலியில் சேர்ந்துவிட்டாரல்லோ! அதிகார மேலிடம் சம்பந்தமாக கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறாராம். அவரைச் சேர்த்துக்கொண்டதாலையும் பிரச்சனை. இப்ப அவராலையும் பிரச்சனை. இது தேவையா எண்டு தலையில் அடித்துக் கொண்டாராம் அதிகாரத் தரப்பு முக்கியஸ்தர் ஒருவர்.

பதவிக்கு வர முன்னர் முன்னணிக்கு பக்க பலமாக இருந்த சிங்கள வாரப் பத்திரிகை ஆசிரியர்-கடும் அதிருப்தியிலை இருக்கிறாராம். அதிகார தரப்பார் குறித்து அவர் எழுதும் விசயங்களை எதிர்த்தரப்பு குசியோடை கொண்டுவந்து வெகுஜன சபையிலை காண்பிக்குதாம். அதிகாரத் தரப்பாருக்கு மெல்லவும் முடியேல்லை, விழுங்கவும் முடியேல்லை எண்ட நிலையாம்.

திருவான மலையிலை ரெண்டு எழுத்தாரின் பெண்கள் அணி நடமாட்டம் எண்டு செய்தி பார்த்திருப்பியள். அதிலை பாருங்கோ அழகான ரெண்டு எழுத்தார் எண்டு ஒரு வார்த்தை இருந்ததுதான் ஆபத்து. தமிழாக இருந்தால் மட்டுமில்லை, அழகாக இருந்தாலும் பிரச்சனையோ எண்டு பொம்பிளைப் பிள்ளையள் பயப்பிடத் தொடங்கீட்டுதுகள். செய்தி கொடுத்தவர் ஒரு கலாரசனையாளராய் இருப்பாரோ?

புதிய சிந்தனைகளை நறுக் என்றும் நச் என்று குறிதவறாமல் இடிப்பது போலவும் சொல்வதுதான் புதுக்கவிதை பாருங்கோ. சம்பத்தில் படித்த மூன்று வரிக் கவிதை இது. எழுதியவர் மாரி கண்ணன்.

**கொடி**

"உங்களது சுதந்திரத்திற்காக  
என்னை  
கட்டிப் போடுகிறீர்கள்!"

இதை ஹைக்கூ கவிதை பாணியில் நான் மாற்றிப் போட்டுப் பார்த்தது இப்படி:

"சுதந்திர விழாவில்  
கட்டிப் போடப்பட்டது  
கொடி!"

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அமெரிக்க தூதரகத்தில் போராளிகள் பாய்ச்சல்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




27

அற்புதன் எழுதுவது

## அரசியல் தொடர்

# யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தம்பதி கடத்தல்!



டி.ஜி.பி. மோகனதாஸ்

### பாலகுமாரின் தந்திரம்

சென்னை 'பிரசிடென்சி' ஹோட்டலில் இருந்து பிரபாகரன் தனது காரில் புறப்பட்டு சென்றுவிட்டார்.

பத்மநாபாவும் தனது காரில் புறப்பட ஆயத்தமானபோதுதான் ஈரோஸ் உறுப்பினர் ஓடி வந்தார்.

மேலே ஹோட்டல் அறையில் இருந்த பாலகுமாரும், சிறீ சபாரத்தினமும் அந்த உறுப்பினர் மூலம் ஒரு தகவல் அனுப்பியிருந்தனர்.

பத்மநாபாவை தங்களை வந்து சந்திக்கும்படி தான் தகவல் அனுப்பியிருந்தனர்.

பத்மநாபா அங்கு மீண்டும் சென்றார். "கூட்டமைப்பு பெயரை மாற்றுவது பிரச்சனையில்லை என்று கூறிவிட்டீர்கள். அப்படிப் பெயரை மாற்றினால் புலிகள் புதிய கூட்டமைப்பை உருவாக்கியதாக கருதப்பட்டு விடும். சிறீ சபாரத்தினமும் இதையே சொல்கிறார்."

என்றார் பாலகுமார். பிரபாகரனும் பத்மநாபாவும் கீழே சென்றபோது சிறீ சபாரத்தினத்தின் மனதை மாற்றிவிட்டார் பாலகுமார். எனவே பாலகுமாரின் கருத்தை சிறீயும் ஆமோதித்தார்.

பெயரை மாற்றுவதில்லை என்ற முடிவுக்கு பத்மநாபாவும் சம்மதித்தார்.

இதன்பின்னர் சில நாட்கள் கழித்து அடுத்த சந்திப்பு நடைபெற்றது.

அதில் பிரபா கலந்துகொள்ளவில்லை. புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கமும், இராசநாயகமும் கலந்துகொண்டனர்.

பெயர் பிரச்சனை மீண்டும் எழுந்தது. அன்ரன் பாலசிங்கம் சில கருத்துக்களைத் தெரிவித்தார்.

**"தம்பி ஒற்றுமைக்கு தயாராக இருக்கிறார். தம்பியை சுற்றியிருக்கும் சிலர் இதனை விரும்பவில்லை. நானும் இராசநாயகமும் தம்பியோடு கதைத்து அவரை உடன்படச் செய்திருக்கிறோம். இந்த நிலையில் கூட்டமைப்பு பெயர் ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்று இருந்தால் எங்களுக்குள் பிரச்சனை வரும். ஏன் 'தமிழ் ஈழம்' என்று போடவில்லை என்று கேட்பார்கள். அதனால் 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி-புலிகள் கூட்டமைப்பு' என்று அழைத்துக் கொள்வோம்."**

என்றார் பாலசிங்கம். நீண்ட விவாதத்தின் பின்னர் பாலசிங்கத்தின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### கையொப்பம் வரும்

தம்பியைச் சுற்றியிருப்பவர்களில் சிலர் ஒற்றுமை முயற்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை என்று பாலசிங்கம் கூறியதில் உண்மை இல்லாமல் இல்லை.

கூட்டமைப்பு சார்பாக பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுக்கப்படுவதுண்டு.

புலிகளது சார்பில் அறிக்கைகளில் கையொப்பமிடுபவர் பேபி சுப்பிரமணியம்.

பேபி சுப்பிரமணியம்தான் அப்போது புலிகளது அரசியல் செயலாளராக இருந்தார்.

கூட்டமைப்பு கூட்டத்திற்கு ஒருநாள்கூட பேபி சுப்பிரமணியம் சென்றது கிடையாது.

கூட்டமைப்பு அறிக்கையை பாலசிங்கம் கொண்டுசென்று பேபி சுப்பிரமணியத்திடம் கையொப்பம் வாங்கிவந்து கொடுப்பார்.

பிரபா நினைத்திருந்தால் பாலசிங்கத்தை கையொப்பம் போடுமாறு கூறியிருக்கலாம். ஆனால் பேபி சுப்பிரமணியம் அரசியல் செயலாளராக இருப்பதால் அவர்தான் கையொப்பமிட வேண்டும் என்பதில் மாற்றம் ஏற்படுத்த பிரபா விரும்பவில்லை.

இது மட்டுமல்ல; 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் விரிவுரையாளர் நித்தியானந்தன் பல ஆக்கங்களை எழுதிக் கொண்டிருந்தார்.

அவர் எழுதும் ஒவ்வொரு ஆக்கங்களையும் பேபி சுப்பிரமணியம் பார்வையிட்டு அனுமதி கொடுத்த பின்னரே அச்சேற வேண்டும் என்பது பிரபாவின் உத்தரவு.

இது குறித்து நித்தியானந்தன் வருத்தப்பட்டதும் உண்டு.

நித்தியானந்தன் போன்றவர்கள் வருவார்கள்-போவார்கள். பேபி சுப்பிரமணியம் போன்றவர்கள் என்றும் தன்னோடு இருப்பார்கள் என்பது பிரபாவின் கருத்து.

விரிவுரையாளர் நித்தியானந்தன் புலிகளில் இருந்து பின்னர் விலக்கப்பட்டார். பேபி சுப்பிரமணியம் 'இளம்குமரன்' என்ற பெயரில் இப்போதும் புலிகள் அமைப்பில் இருக்கிறார்.

கூட்டமைப்பு, ஒற்றுமை முயற்சிகள் பற்றி பின்னர் மீண்டும் பார்க்கலாம்.

1984ல் நடந்த முக்கியமான சில சம்பவங்கள் பற்றி இப்போது கூறுகிறேன்:

### சி.ஐ.ஏ.

தமிழ் பேசும் மக்களது போராட்டத்தை நசுக்க இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதவுகிறது என்று இயக்கங்கள் குற்றம்சாட்டி வந்தன.

இதில் முன்னணியில் நின்றது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இலங்கை அரசுக்கு பக்கபலமாக இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரசாரம் செய்து வந்தது.

1984ம் ஆண்டு சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். திட்டமிட்டது.

ஒரு நாள் பத்து மணிக்கு அமெரிக்கத் தூதரகம் முன்பாக மூன்று ஒட்டோக்களில் சென்று இறங்கினார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள்.

தூதரக வாயிலில் துப்பாக்கியோடு காவலர்கள் நிற்பார்கள்.உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

எப்படியாவது உள்ளே சென்றுவிட வேண்டும். தூதரக வளவில் வைத்து அமெரிக்கக் கொடியை எரிக்க வேண்டும் என்பதுதான் திட்டம்.

ஓட்டோவில் இருந்து இறங்கியவுடன் காவலரை நோக்கி ஓடிய ரமேஷின் கையில் ஒரு சிறிய கமரா இருந்தது. அதனை காவலருக்கு நேராக நீட்டி மிரட்டியவுடன் காவலர்கள் துப்பாக்கியைப் போட்டுவிட்டு உள்ளே ஓடிவிட்டனர்.

கமராவை சிறிய துப்பாக்கி என்று காவலர்கள் நினைத்துவிட்டார்கள்.

உள்ளே புகுந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள். சிறிய ஒலிபெருக்கி மூலம் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார் டேவிட்சன்; கொடிக்கு தீவைத்தார் தயாபரன். அதற்கிடையில் பொலிசாருக்கு தகவல் சென்றுவிட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரின் உத்தரவின்படி அன்று மாலையில் கைதானவர்கள் விடுதலையாகினர்.

அன்றுமுதல் சென்னையில் அமெரிக்க தூதரகம் முன்பாக பொலிஸ் டிரக் ஒன்று ஆயுதம்தரித்த பொலிஸாரோடு காவலுக்கு நிறுத்தப்பட்டது. தூதரகப் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.

தூதரகம் ஒன்றுக்குள் நுழைவது பாரதூரமான குற்றம். அத்துமீறி நுழைபவர்களை சுட்டுத்தள்ளவும் அங்கிருக்கும் காவலர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை தூதரகம் அமைந்துள்ள நாடுகூட கேட்க முடியாது.

அன்று காவலர்கள் பயந்திருக்காவிட்டால் தூதரகத்தில் நுழைந்தவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்திருக்க முடியும்.

அமெரிக்க எதிர்ப்பில் முன்நின்ற இயக்கமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் அடையாளம் காணப்பட்டது.

### தம்பதி மீது குறி

யாழ்ப்பாணத்திலும் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவு ஊடுருவியிருப்பதாக சந்தேகம் நிலவியது.

உதவித் திட்டங்கள், அபிவிருத்தி ஆராய்ச்சிகள் என்ற போர்வையில் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவினர் நடமாடுவதாக ஈ.பி.ஆர். எல்.எஃப். சந்தேகப்பட்டது.

அவ்வாறான சந்தேகத்தில் சிக்கிக் கொண்டனர் அலென் தம்பதியினர்

யாழ்ப்பாணத்தில் குருநகர் இராணுவ முகாமுக்கு அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அவர்கள் தங்கியிருந்தனர்.

அலென் தம்பதியை கடத்திச் சென்று பணயக்கைதிகளாக்குமாறு ஈ.பி.ஆர். எல்.எஃப் மக்கள் விடுதலைப்படை தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டார்.

1984ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி இரவு அலென் தம்பதியின் வீட்டுக்குள் புகுந்தனர் மக்கள் விடுதலைப் படை உறுப்பினர்கள்.

வீட்டுக்கு முன்னால் இராணுவ முகாம். காவலுக்கு நின்ற இராணுவத்தினரின் கண்களில் படாமல் காரியத்தை முடிக்க வேண்டும்.

தமது இரவுணவை முடித்துவிட்டு படுக்கையறையில் உல்லாசமாக இருந்தனர் அலென் தம்பதியினர்.

சிவ பூசைக்குள் கரடி நுழைந்தது போல திடீரென்று கதவு தட்டப்பட்டது.

துணியொன்றை இடுப்பில் சுற்றிக் கொண்டுவந்து கதவைத் திறந்தார் அலென்.

அவரை துப்பாக்கி முனையில் மடக்கினார்கள். திருமதி மேரி அலெனும் துணிகளை அள்ளிச் சுற்றிக் கொண்டு ஓடிவந்தார்.

இருவரையும் மாற்று உடை அணிந்துவருமாறு கூறப்பட்டது. பின்னர் ஒரு வாகனத்தில் தம்பதியினர் மறைவிடம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### கோரிக்கைகள்

**"20 போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்."**


**"5 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள தங்கம் தரப்பட வேண்டும்."**

என்று மறுநாள் அரசுக்கு அறிவிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட வேண்டிய போராளிகளது பெயர்களும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டன.

ஜே.ஆர்.அரசு திகைத்துப் போனது. உலகெங்கும் செய்தி பரவியது.

இலங்கையில் இருந்த வெளிநாட்டவர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளானது.

யாழ்ப்பாணத்திலிருந்த வெளிநாட்டவர்கள் அனைவரும் பொலிஸ் பாதுகாப்போடு கொழும்புக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.



டக்ளஸ் தேவானந்தா

அமெரிக்க அரசு தனது பிரஜைகள் பற்றிய கவலையை இலங்கை அரசுக்கு தெரிவித்தது.

பொலிசாரும், இராணுவத்தினரும் யாழ்ப்பாணத்தில் சல்லடை போட்டுத் தேடினார்கள். பயன் இல்லை.

இலங்கை அரசு இந்தியாவின் ஒத்துழைப்பை கோரியது. ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபாவும், மக்கள் விடுதலைப்படை பிரதம தளபதி டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் நாட்டில் இருந்தனர். அவர்களோடு இந்திய அரசு தொடர்பு கொண்டு உதவவேண்டும் என்று இலங்கை அரசு கேட்டுக்கொண்டது.



### தமிழகத்தில் கைது

கடத்தப்பட்ட அலென் தம்பதி யாழ்ப்பாணத்தில்தான் ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்தார்கள். கடத்தப்படவர்கள் தமிழ்நாட்டுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று இலங்கை அரசு நம்பியது.

இந்திய அரசும்கூட அலென் தம்பதியினர் தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றே நினைத்தது.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அலென் தம்பதி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அக்கறை காட்டினார்.

தமிழ்நாட்டில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எஃப். முக்கியஸ்தர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சுரேஸ் பிரேமசந்திரனை கைதுசெய்த தமிழக இரகசியப் பொலிசார் அவரிடமிருந்த டயரியை துருவி ஆராய்ந்தனர்.

பத்மநாபாவையும், டக்ளஸ் தேவானந்தாவையும் எப்படியாவது கைதுசெய்துவிட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

பத்மநாபா அப்போது டில்லியில் இருந்தார். அங்கிருந்தால் கைதுசெய்யப்படலாம் என்பதால் விமானம் மூலமாக சென்னை திரும்பினார்.

இதனை அறிந்துவிட்ட தமிழக பொலிசின் உளவுப்பிரிவினர் விமான நிலையத்தின் முன்பாக காத்திருந்தனர். பத்மநாபாவை அழைத்துச் செல்ல வந்த அவரது கார்மீது உளவுப் பிரிவினரது கழுகுப் பார்வை பதிந்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஒரு உளவுப்பிரிவு வைத்திருந்தது. மக்கள் ஆய்வுப் பிரிவு (MAP) என்பது அதன் பெயர். இந்தியாவில் அதற்கு பொறுப்பாக இருந்தவர் ரமேஷ்.

விமான நிலையத்தில் வந்திறங்கிய பத்மநாபாவை வேறு ஒரு காரில் ரமேஷ் அழைத்துச் சென்றுவிட்டார். மக்கள் ஆய்வுப் பிரிவின் மறைவிடத்திற்கு பத்மநாபா அழைத்துச் செல்லப்பட்டார்.

### முற்றுகை

தமிழ் நாட்டில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பின் தங்குமிடங்கள் யாவும் தமிழக உளவுப்பிரிவுக்கு நன்கு தெரியும். ஆனால் மக்கள் ஆய்வுப் பிரிவின் மறைவிடம் மட்டும் தெரிந்திருக்கவில்லை.

சுரேஸ் பிரேமசந்திரனின் டயறியில் மக்கள் ஆய்வுப் பிரிவின் தொலைபேசி இலக்கம் இருந்தது. அதனை வைத்து முகவரி கண்டுபிடித்து தமிழக பொலிசின் உளவுத்துறை இரவு 12 மணிக்கு அந்த மறைவிடத்தை முற்றுகையிட்டது.

பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், மக்கள் ஆய்வுப் பிரிவு பொறுப்பாளர் மணி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோரை தனியாக வைத்து தமிழக உளவுத்துறை விசாரித்தது.

தமிழக பொலிஸ் துறை டி.ஜி.பியாக அப்போதிருந்தவர் மோகனதாஸ்.

மோகனதாசும் ஒரு சி.ஐ.ஏ அனுதாபி என்றே அப்போது கருதப்பட்டார்.

தமிழ்நாட்டில் இருந்த ஈழப் போராளிகள் பற்றிய விபரங்களை மோகனதாஸ் இலங்கை அரசுக்கு கொடுத்து உதவுவதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

எனவே-மோகனதாசின் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் டக்ளஸ் தேவானந்தாவும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் முரண்டு பிடித்தனர்.

### இந்திரா வேண்டுகோள்

இலங்கையில் அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் அத்துலத் முதலி.

இந்திய அரசின் முயற்சி தோல்வியடைந்தால் போராளிகளது கோரிக்கைக்கு இணங்க அவர் தயாராக இருந்தார்.

போராளிகளால் விடுதலை செய்யுமாறு கேட்கப்பட்ட 20 அரசியல் கைதிகளும் பலாலி விமானநிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, விடுவிக்கப்பட தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அலென் தம்பதியை விடுதலை செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களுக்கு தெரியப்படுத்தினார்.

இந்திரா காந்தியின் விருப்பத்தை மீறுவது சரியல்ல என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் முடிவு செய்தனர்.

அந்த முடிவை மக்கள் விடுதலைப்படை தளபதி டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தவுடன் அலென் தம்பதி விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

அலென் தம்பதி கடத்தல் நடவடிக்கையில் ரெக்ஸ், மோகன், குமார், இந்திரன், ரோகன், ஆகியோரும் பங்குகொண்டனர்.

### மோகனதாசின் துள்ளல்

தமிழக பொலிஸ் டி.ஜி.பியாக இருந்து ஓய்வு பெற்ற மோகனதாஸ், 1992இல் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார்.

'எம்.ஜி.ஆர். நிஜமும்-நிழலும்' என்பது அதன் பெயர்.

அந்தப் புத்தகத்தில் அலென் தம்பதி கடத்தல் விடயத்தில் தமிழக பொலிஸ் எடுத்த நடவடிக்கைகள் பற்றி உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்துள்ளார்.

தனது மிரட்டல்களால் தலைவர்கள் பணிந்தனர் என்று அவர் கூறியிருப்பதில் சுயதம்பட்டம் மட்டுமே இருக்கிறது.

தமிழ்நாட்டில் அப்போதிருந்த சூழலில் எந்தவொரு போராளி அமைப்பையும் பொலிசார் மிரட்ட இயலாது. அந்தளவுக்கு தமிழக மக்களது பேராதரவு இருந்தது.

(தொடர்ந்து வரும்)

அலசுவது—இராஜதந்திரி

# சமரச முயற்சிகளில் சர்வதேச மத்தியஸ்தம்



பி.பி.சி. செய்தியாளர் ஆனந்தி, பிரபாகரன் சொல்வதை வாங்குகிறார்.

## • தமிழீழ விடுதலைப் புலிகளின்றி சாத்தியப்படாத தீர்வு முயற்சிகள்!

## • தாமதங்கள் மூலம் மரணங்களை அதிகரித்துச் செல்லும் அவலநிலை!

அரசுக்கும் எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையே ஏற்பட்டுள்ள பிளவு தொடர்ந்து விரிசல் அடைவதாகவே இருக்கிறதே தவிர சமரச முயற்சிகள் மீண்டும் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.

கடந்த ஏப்ரல் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகள், தாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தாக்குதலையும் கனகச்சிதமாக நிறைவேற்றிவரக் காணப்படுகின்றனர்.

கப்பல்கள், விமானங்கள், முகாம்கள் மீது இதுவரை இடம்பெற்ற தாக்குதல்களில் சுமார் 250 படையினர் வரை கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசபடைகள் தமது 'ஆக்ரோஷமான' பதிலடி நடவடிக்கையாக கடந்த வாரம் வடக்கே ஆனையிறவு, பூநகரி முகாம்களை அண்டிய பகுதிகளிலும், கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் விமானக்குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன.

இந்நிலையில் தற்போது மீண்டும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் முழு அளவிலான யுத்தம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கே கடந்த சில மாதங்களாக மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவியிருந்தது. வேட்டுச்சத்தமோ, குண்டுச்சத்தமோ கேட்காத நிலையில் மக்கள் நிம்மதியாக நடமாடித் திரிந்தனர். ஆனால் தற்போது அவர்கள் மீண்டும் பதுங்கு குழிகளையும், அகதி முகாம்களையும் நாடி ஓடவேண்டிய நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

சந்திரிகா அரசாங்கத்துக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையே இடம்பெற்ற சமரச முயற்சிகள் குறித்து முழு நாடுமே பெரும் நம்பிக்கை கொண்டிருந்தது. இதுவரை காலமும் இலங்கையிலிருந்த தலைவர்களை விட சந்திரிகா மீது வடக்கு-கிழக்கு மக்கள் நல்ல அபிமானத்தைக் கொண்டிருந்தனர்.

வடக்கே சந்திரிகா அரசு பொருளாதார அழுத்தங்களை நீக்க முன்வந்ததை அங்குள்ள மக்கள் பெரிதும் வரவேற்றனர். சந்திரிகாவின் அணுகுமுறைகள், சமாதானம் குறித்து அவர் வெளியிட்டு வந்த அசைக்கமுடியாத நம்பிக்கை என்பன வடக்கு-கிழக்கு மக்களை அவர்பால் பேரபிமானம் கொள்ளச் செய்தன.

ஆனால் வடக்கு-கிழக்கு மக்கள் [illegible] சமூக நிலையை [illegible]ளோ இன்று [illegible] சமூகநிலை [illegible]லிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் சென்றுள்ளதையே அறிய முடிகின்றது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டது தொடர்பாக பி.பி.ஸி தமிழோசை அறிவிப்பாளர் ஆனந்திக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் விரிவான பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் இன்றைய நிலவரம் தொடர்பாக அவர் தமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தார். "அரசாங்கம் பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது வாக்குறுதிகள் பலவற்றை வழங்கியிருந்தது. ஆனால் அவற்றை எவ்வகையிலும் நடைமுறைப்படுத்த அரசு முன்வரவில்லை" என்பது திரு. பிரபாகரனின் குற்றச்சாட்டாக இருந்தது.

எல்.ரி.ரி.ஈயினருக்கும், சந்திரிகா அரசுக்குமிடையிலான சமரச நடவடிக்கைகள் பூர்வாங்கக் கட்டத்திலேயே இருந்துவந்தன. எவ்வகையிலும் உறுதியுடன் முன்னேற்றகரமாக அப்பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியன வற்றின் போது மனிதாபிமானக் கருத்துக்களையே வலியுறுத்தி வந்திருந்தார். இந்நிலையில் கடந்த பத்துவருடகாலத்துக்கும் மேலாக இன்னல்களை இடையறாது அனுபவித்து வரும் வடபகுதி மக்கள் மீதான மனிதாபிமான அணுகுமுறைகளை சந்திரிகா துரிதப்படுத்தியிருக்க வேண்டும். மின்சாரம், எரிபொருள், உணவு விநியோகம், போக்குவரத்து, சுகாதார வசதிகள், கல்வி வசதிகள் போன்ற அனைத்துத் துறைகளிலும் நம்பிக்கை தரக்கூடியவகையில் அவர் நடந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு எதனையும் மேற்கொள்வதற்குப் பதிலாக வடபகுதி குறித்த விடயங்களில் தாமதமான போக்கையே சந்திரிகா ஆட்சியாளர்கள் கடைப்பிடித்துவந்திருந்தனர்.

இதன்மூலம் பூர்வாங்க நிலையில் இருந்த பேச்சுக்களை தாமதப்படுத்தியதுடன், வடபகுதி மக்களின் சமாதானம் குறித்த எதிர்பார்ப்பையும் மழுங்கடித்திருப்பதனை அறிய முடிகின்றது.

சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ தலைவருக்குமிடையே சுமார் 50 கடிதங்கள்வரை பரிமாறப்பட்டுள்ளன.

இருதரப்பினரும் நடந்துமுடிந்த நான்கு சுற்றுப் பேச்சுக்களில் தத்தமது தரப்புப் பிரதிநிதிகளை ஈடுபடுத்தியிருந்தபோதிலும் ஜனாதிபதி சந்திரிகாவும், திரு.பிரபாகரனும் கடிதங்கள் மூலமாக கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டிருந்தனர்.

ஆயினும் இக் கடிதப் பரிமாற்றங்கள் மூலமாகக்கூட இருதரப்பினரும் ஒரு புரிந்துணர்வைக் கட்டி எழுப்ப முடியாதவர்களாகவே இருந்துள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்னையின் அடிப்படை அம்சம் அரசியல் சார்ந்ததாகும். தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகள், பிரதேச பாரம்பரியம், மற்றும் சமூக, பொருளாதார கலாசார அம்சங்களை நிலைநிறுத்துவதாகவே வடக்கு-கிழக்கு விவகாரம் விளங்கி நிற்கின்றது.

அவர்களது இந்த நீண்டகால நியாயமான கோரிக்கைகள் காலத்திற்குக் காலம் இலங்கையில் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களால் தட்டிக்கழிக்கப்பட்டு வந்துள்ளன.

ஏமாற்றப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும், தாக்கப்பட்டும், இறுதியாகத் தற்போது மரண அவஸ்த்தைக்குள்ளாக்கப்பட்ட நிலையிலுமே வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திவரக் காணப்படுகின்றனர்.

கடந்த ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு மக்களை அவர்களது கோரிக்கைகளிலிருந்தும் விலகிச் செல்லும் வகையில் பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்தனர். அந்த அழுத்தங்களின் உச்சக்கட்டமாகவே இன்றைய பொருளாதாரத்தடைகள் உட்பட ஏனைய கடும் போக்கான அணுகுமுறைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் தம்மீதான பொருளாதாரத் தடைகள் மற்றும் அழுத்தங்களை அகற்றி நிரந்தரத் தீர்வை நோக்கி சந்திரிகா அரசு நகர வேண்டுமென்பதே வடக்கு-கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் சந்திரிகா ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்குப் பிரச்னையை அணுகிய விதம், அப்பிரச்னையின் தாற்பரியத்தை அவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதனையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மக்கள் மீதான பொருளாதார தடை, மற்றும் ஏனைய அழுத்தங்களை நீக்குவதில்கூட 'இரட்டை மனத்துடன்' ஆட்சியாளர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

முற்றுமுழுதாக பொருளாதாரத் தடையை நீக்கும்பட்சத்தில் வடக்கே எல்.ரி.ரி.ஈயினர் பலமடைந்து விடுவார்களோ என்ற பயம் சந்திரிகா ஆட்சியாளர்களிடம் காணப்பட்டிருந்தது. இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரதேசம் என்றதும் எல்.ரி.ரி.ஈயினரே ஆட்சியாளரின் மனக்கண்ணில் நிழலாடினரே தவிர, பொதுமக்கள், மற்றும் அவர்களது கஷ்டங்கள், நஷ்டங்கள் என்பன எவ்வகையிலும் உரிய கவனத்தைப் பெறவில்லை.

எல்.ரி.ரி.ஈயினரைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் பலமான நிலையிலேயே இருந்துவருகின்றனர். அவர்கள் தமக்கு வேண்டியவற்றை நிறையவே வைத்திருக்கக் காணப்படுகின்றனர்.

ஆயுதங்கள் முதற்கொண்டு ஆடம்பர வாகனங்கள் வரை அவர்களிடம் அனைத்துமே காணப்படுகின்றன.

எனவே எல்.ரி.ரி.ஈயினரின் பலம், மற்றும் பலவீனம் குறித்து ஆட்சியாளர்கள் போட்டது ஒரு தப்புக் கணக்காகவே இருக்கின்றது.

இந்நிலையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை எல்.ரி.ரி.ஈயினர் முறித்துக் கொண்டுள்ள இத்தருணத்தில் வடக்கு-கிழக்கு மக்களே மீண்டும் மரண அவஸ்த்தையை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் கருத்து வெளியிட்டபோது "தாம் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை தளரவில்லை எனவும், எல்.ரி.ரி.ஈயினர் இல்லாமல் கூட தம்மால் சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்" என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இக்கருத்துக்கு எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே. பிரபாகரன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் பதிலளித்திருந்தார். அப்போது அவர் "எல்.ரி.ரி.ஈயினர் பங்குபற்றாத சமாதான முயற்சி நடைமுறைச்சாத்தியமானால் ஜனாதிபதி சந்திரிகா அதனை முன்னெடுத்துப் பார்க்கட்டும்" என்று கூறியிருந்தார்.

இலங்கை ஆட்சியாளர்களின் கடந்தகால அரசியல் அணுகுமுறைகளை எடுத்து நோக்கும்போது, வடக்கு-கிழக்கு பிரதேச அரசியல் கட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அரசியல் அணுகுமுறைகளும் தோல்வியையே தழுவியிருக்கக்காணப்படுகின்றன.

வட்டமேசை மகாநாடுகள், பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகள் என்று பல்வேறு அரசியல் அணுகுமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் எதிலுமே ஓர் உறுதியான முன்னேற்றத்தைக்காணமுடியவில்லை.

இத்தகைய நிலையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஒரு பலம்மிக்க ஆயுதப் போராட்ட இயக்கமாக இருந்துவரும் எல்.ரி.ரி.ஈயினரைத் தவிர்த்து சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதென்பது அசாத்தியமானதாகவே இருக்கும்.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான தீர்வு என்பது அப்பிரதேசத்தின் அனைத்துத் தரப்பு அரசியல் சக்திகளையும் திருப்திப்படுத்த வேண்டியதாக இருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈயினருடன் முன்னைய ஆட்சியாளரோ அல்லது இன்றைய ஆட்சியாளர்களோ பேச்சுவார்த்தைகள் என்று ஆரம்பித்த போது தமிழ் அரசியல் கட்சிகள் தமது மன ஆதங்கத்தை வெளியிட்டிருந்தன.

எத்தகைய ஒரு தீர்வுத்திட்டமும் தம்மைத் திருப்திப்படுத்துவதாகவும் அமையவேண்டுமென்றே அத்தமிழ் கட்சிகள் தெரிவித்திருந்தன.

இது தவிர ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் வடக்கு-கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்ற நிலையில் தனது கோரிக்கைகளையும் வலியுறுத்துவதாகக் காணப்படுகின்றது.

எனவே எந்தவொரு வகையிலும் வடக்கு-கிழக்கின் அனைத்து தமிழ், முஸ்லிம் அரசியல் சக்திகளும் ஒரு நிரந்தரத் தீர்வை வலியுறுத்தியிருக்கவே காணப்படுகின்றன.

இது விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு மிகத்தீவிரமானதாகவும், அபாரமான ஆயுதப்போராட்டப் பின்னணியைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே இன்று மிகவும் அவசியமானதாகின்றது.

இராணுவ ரீதியான நிலைப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசதரப்பினரும், எல்.ரி.ரி.ஈயினரும் கூடுதல் கவனமெடுக்க வேண்டியவர்களாகின்றனர்.

கடந்த மாதம் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவடைந்தது முதற்கொண்டு இன்றுவரை ஏற்பட்டுள்ள உயிர், உடமைச்சேதங்கள் பாரியளவில் காணப்படுகின்றன.

இத்தகைய துரதிஷ்டவசமான நிலையில் எல்.ரி.ரி.ஈயினரிடம் ஏவுகணைகள் உண்டு. அதற்கு மாற்றீடாக ஆயுதப்படைகள் வேறு நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து பதிலடியில் குதிக்க வேண்டும் என்ற 'விடாக்கொண்டன்' நிலைப்பாட்டிலிருந்தும் விலகி ஆயுதப் போட்டி ஒன்று ஏற்படுவதை ஆட்சியார்கள் தவிர்க்க வேண்டியவர்களாகின்றனர்.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்த காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா பரந்த கண்ணோட்டத்துடன் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அப்போது அவர் தமது அரசினால் முடியாவிட்டால் சர்வதேச உதவியுடனாவது வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணத்தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

பல வெளிநாடுகள் கூட இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு தமது ஆதரவைக் கடந்தகாலங்களில் வெளியிட்டிருந்தன.

எனவே ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சர்வதேச ரீதியாக ஒரு அணுகுமுறையைப் பரிசீலிக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதையே தற்போது நன்கு உணர முடிகின்றது.

'ஈழப் போர்-3' என்று குறிப்பிடுமளவுக்கு தற்போது வடக்கு-கிழக்கில் யுத்த நிலவரங்கள் மோசமான கட்டத்தை அடைந்துள்ளன.

தீர்வு முயற்சிகள் தாமதமடையும் பட்சத்தில் நாளாந்தம் மரணப்பட்டியலின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவே இருக்கும்.

'விதண்டாவாதங்களை' வளர்த்துக்கொள்ளாது விரைவில் செயலில் இறங்கி விடிவை நோக்கி முன்னேறுவதே இன்றியமையாததாகின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# '68ல் ஒரு அரசியல் கொலை



# தரு வது ரசிகன்

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடியின் தம்பியின் பெயர், ரொபேர்ட் கென்னடி.

ரொபேர்ட் கென்னடி கம்பீரமானவர்: அழகானவர். அண்ணன் போலவே பெண்கள் விடயத்தில் பலவீனமானவர்.

பேரழகி மர்லின் மன்றோவின் கட்டிலறையில் ரொபேர்ட் கென்னடியின் காலடிகளும் பலதடவை பதிந்திருக்கின்றன.

அண்ணன் கென்னடியின் வாரிசாக அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் குதித்தார் ரொபேர்ட் கென்னடி.

அமெரிக்காவெங்கும் தீவிரப் பிரசாரம். அமெரிக்க வாக்காளர்கள் ரொபேர்ட் கென்னடிக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால் என்னவென்று யோசிக்கத் தொடங்கியிருந்தனர்.

"உங்கள் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கிறது?"

பத்திரிகையாளர் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

கேட்டது பெண் நிருபர் இளமையாக இருந்தாள்.

ரொபேர்ட் கென்னடி அவளை குறும்பாய்ப் பார்த்துக்கொண்டு பதில் சொன்னார்:

"வெற்றி வாய்ப்பு உங்களைப் போல இருக்கிறது!"

பெண் நிருபருக்கு புரியவில்லை. விழிகளை விரித்து,

"புரியவில்லையே உங்கள் விடை," என்றாள்.

"அதாவது உங்களைப் போல செழிப்பாக இருக்கிறது"!.

பெண் நிருபரின் வெள்ளைத் தோல் கன்னம் குங்கும நிறத்திற்கு மாறியது.

"எதிர்த் தரப்பு பிரசாரங்கள் பலமாக இருக்கிறதே!"

வேறொரு நிருபர் கேட்டார்.

ரொபேர்ட் கென்னடி உடனடியாகச் சொன்ன பதில்:

"வெற்று வேட்டுக்கள்! எங்களிடமிருப்பது நிஜமான தோட்டாக்கள். விஷயம் இல்லாத வர்கள்தான் துள்ளுவார்கள். பொறுப்பைக் கொடுத்தால் காரியத்தில் கோட்டை விட்டுவிடுவார்கள்!"

பத்திரிகையாளர்கள் அகன்றனர். தொலைபேசி அழைத்தது. உதவியாளர் எடுத்து விபரம் அறிந்து,

"உங்களுக்குத்தான்" என்று ரொபேர்ட் கென்னடியிடம் றிசீவர் கொடுத்தார்.

"ஹலோ" என்றார். இனிதாய் உணர்ந்தார். காரணம்: மறுமுனையில் ஒரு பெண் குரல் வாழ்த்துச் சொன்னது.

வாழ்த்துச் சொன்ன பெண், வருத்தத்தோடு கேட்டாள்:

"உடம்பைக் கவனித்துக் கொள்கிறீர்களா?"

"தொலைபேசி வழியாக எப்படிக் கவனிப்பது?" மறுமுனை சிரித்தது.

"உங்கள் உடம்பைப் பற்றிச் சொன்னேன்!"

"நன்றி! கவனிக்கிறேன். நீ யார் என்று சொல்லவேயில்லையே?"

"நேரம் வரும்போது நேரிலேயே வருகிறேன். குரலை மறக்கமாட்டீர்களே?"

"இனியவையாவும் என் இதயத்தில் இருக்கும்- நிரந்தரமாக"

மறுமுனை மீண்டும் சிரித்து தொடர்பு துண்டித்தது.

□□

ரொபேர்ட் கென்னடி உற்சாகமாகப் புறப்பட்டார்.

1968 ஜூன் மாதம் 5ம் திகதி லொஸ் ஏஞ்சலில் உள்ள அம்பாசிடர் ஹோட்டல் கம்பீரமாகத் தெரிந்தது.

அங்குதான் பிரசாரக் கூட்டம். லொஸ் ஏஞ்சல்ஸ் எங்கும் ரொபேர்ட் கென்னடி சுவரொட்டிகளில் புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

அதே புன்னகையோடு அம்பாசிடர் ஹோட்டலுக்குள் நுழைந்தார்.

துப்பாக்கிகள் ஏந்திய பாதுகாவலர் அணி அவரைத் தொடர்ந்து வந்தது.

"ஜனாதிபதியாகிவிட்டது போலவே முகத்தில் உற்சாகம் தெரிகிறது பார்த்தாயா?"

ஹோட்டலில் சிலர் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஜனநாயகக் கட்சியின் தொண்டர்கள் ஆரவாரப்பட்டார்கள்.

பிரசாரக் கூட்டம் நள்ளிரவுவரை நடந்தது. ரொபேர்ட் கென்னடியின் முகத்தில் சோர்வு துளியும் இல்லை.

கூட்டம் முடிந்தது. தொண்டர்களோடு கைகுலுக்கி முடித்து, புறப்பட்டார் ரொபேர்ட் கென்னடி.

"சேர்",

பாதுகாவலர் ஒருவர் அழைக்க,

"என்ன?"

"வந்த வழியில் செல்ல வேண்டாம். இதோ இந்தப் பாதை வழியாக செல்லலாம்" பணிவான குரலில் பாதுகாவலர் கூற,

"ஏன்"

"பாதுகாப்பு ஏற்பாடு!"

ரொபேர்ட் கென்னடி சற்று யோசித்து,

"ஓ.கே, உங்கள் விருப்பப்படியே!"

## உலகைக் குலுக்கிய கொலை

பாதுகாவலர் மரியாதைகலந்து புன்னகைத்து விட்டு, வேறு பாதை வழியாக அவரை அழைத்துச் சென்றார்.

அது மரணத்தின் பாதை என்று தெரியாமல் ரொபேர்ட் கென்னடி உற்சாகமாய்ச் செல்ல, ஏனைய பாதுகாவலர்கள் அவரைத் தொடர்ந்தனர்.

தனது அண்ணன் போலவே, தனது கைகளை காற்சட்டைப் பொக்கற்றுகளுக்குள் வைத்துக்கொண்டுதான் ரொபேர்ட் கென்னடியும் நடந்து செல்வார்.

'லிஃப்ட்' வழியாக வந்து வரவேற்பு அறைக்கு எதிரே வெளியேறி நடந்து கொண்டிருந்தனர்.

ரிசப்ஷனிஸ்ட பெண்கள் ரொபேர்ட் கென்னடியை தங்கள் விழிகளால் வருடிக் கொண்டிருந்தனர்.

ரொபேர்ட் கென்னடியின் பார்வை ரிசப்ஷனுக்கு அருகே நின்ற இளைஞன் மீது தாவியது.

அவன் ஒரு விளம்பர சுவரொட்டியை தனது ஒரு கையில் வைத்திருந்தான்.

வித்தியாசமான முறையில் அந்த விளம்பர சுவரொட்டி இருந்தது. அதுதான் ரொபேர்ட் கென்னடியைக் கவர்ந்திழுத்தது.

ரொபேர்ட் கென்னடி நின்று கவனித்தார். நட்போடு அந்த இளைஞனை நோக்கினார்.

அவன் ரொபேர்ட் கென்னடியை நோக்கி முன்னேறி வந்தான்.

சுவரொட்டியின் மறைவில் இருந்த அவனது மற்றொரு கையில் துப்பாக்கி இருந்தது!

அவனோடு கைகுலுக்கலாம் என்று ரொபேர்ட் கென்னடி நினைத்தார்.

அவனும் நெருங்கி வந்து, மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை திடீரென்று நீட்டினான்.

ரொபேர்ட் கென்னடி அதிர்ந்து போக, அவன் சுடத் தொடங்கினான்.

டுமீல்...டுமீல்...

சுட்டுக் கொண்டே கெட்ட வார்த்தைகளால் ரொபேர்ட் கென்னடியை வசை செய்தான்.

அம்பாசிடர் ஹோட்டல் தரையில் ஜனாதிபதியாகும் தனது கனவுகளோடு ரொபேர்ட் கென்னடி சரிந்து விழுந்தார்.

பாதுகாவலர்கள் உஷாராகி கொலையாளியை உயிரோடு பிடிக்க வியூகமாய் வளைத்தனர்.

அவன் பாதுகாவலர்களை நோக்கி சுடத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் முன்னாள் தடகள வீரர்களான ரோசி, ரொபேர்ட் ஆகியோர் அங்கு இருந்தனர்.

தடகள வீரர்கள் இருவரும் கொலையாளியை பாய்ந்து அமுக்கினார்கள்.

□□

விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. கொலையாளியின் பெயர் பிசரா சர்க்கன். வயது 24. பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவன்.

"ஏன் கொன்றாய்? எதற்காக கொன்றாய்? ஏவியது யார்?"

எந்தக் கேள்விக்கும் சர்க்கன் வாயே திறக்கவில்லை.

இதற்கிடையே விசாரணையாளர்களுக்கு ஒரு சந்தேகம்.

கொலையாளி பயன்படுத்திய துப்பாக்கியால் எட்டுத் தடவைதான் சுட முடியும்.

ஆனால் ரொபேர்ட் கென்னடியின் உடலில் எட்டுக்கும் மேற்பட்ட சூடுகள்!

அப்படியானால் இன்னொரு நபர் யார்? விசாரணையாளரின் சந்தேகப் பார்வை சீசர் மீது திரும்பியது.

சீசர்தான் ரொபேர்ட் கென்னடியின் முக்கிய பாதுகாவலன்.

பின்புறமிருந்து சீசரும் சுட்டிருக்கலாம் என்று விசாரணையாளர்கள் சந்தேகப்பட்டார்கள்.

சந்தேகம் இருந்தது. ஆனால் ஆதாரங்கள் இல்லை. அதனால் சீசர் மீது குற்றம் சாட்ட முடியவில்லை.

இதேவேளை மற்றொரு தகவல் கிடைத்தது.

ரொபேர்ட் கென்னடி கொலை செய்யப்பட்ட போது அம்பாசிடர் ஹோட்டலில் இருந்து இரண்டு ஆண்களும் பெண்களும் வெளியே ஓடி வந்தார்கள்.

யார் அவர்கள்? பொலிஸ் வலை விரித்தது. ஒரு பெண் கைது செய்யப்பட்டாள்.

அவளது பெயர் கதே. விசாரித்துவிட்டு பொலிசார் அவளை விடுதலை செய்தனர்.

விடுதலையான கதே மறுநாளே ஹோட்டல் ஒன்றில் பிணமாகக் கிடந்தாள். தற்கொலை என்று சொன்னது பொலிஸ்.

இறுதியில் சர்க்கன் மட்டும் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டான்.

"தூக்கில் போடுங்கள் இவனை" என்றது நீதிபதியின் தீர்ப்பு.

சர்க்கன் தூக்கில் தொங்க விரும்பவில்லை. அப்பீல் செய்தான்.

தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இன்றுவரை சர்க்கன் லொஸ் ஏஞ்சல்ஸ் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான்.

ஆனால், இதுவரை ரொபேர்ட் கென்னடியை கொலை செய்த காரணத்தை மட்டும் சொல்ல மறுத்துக் கொண்டிருக்கிறான்.

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✚ விந்தைகள்

## யோசனைகள்

தலை வலிக்காகப் போட்டுக் கொள்ளும் மாத்திரைகளை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. அதனால் வயிற்றுப்புண் ஏற்படும். சிறிது பாலுடன் சாப்பிட வேண்டும்.



மாத்திரையுடன் காப்பி எப்போதும் சாப்பிடக்கூடாது.

உடலை இளைக்கச் செய்யும் மாத்திரைகளை மாலை ஐந்து மணிக்குப் பிறகு சாப்பிடக்கூடாது.

கருவுற்ற பெண்கள் டாக்டர் அனுமதியின்றி மாத்திரை சாப்பிடக்கூடாது.

விட்டமின் மாத்திரைகள் அதிகமாக சாப்பிடுவது கெடுதல்.

குழந்தைகளுக்கு தூக்கத்தில் மருந்தைக் கொடுக்கக் கூடாது.

கார் ஓட்டும் போதும் இயந்திரங்கள் அருகில் வேலை செய்யும் போதும் மருந்து சாப்பிடக் கூடாது.

மருந்துகளை குளிர்ந்த இடங்களில் வைக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி பேதி மருந்து கொடுக்கக்கூடாது.

சாதாரண தேமல், காயம் ஆகியவற்றுக்கு பென்சிலின் போன்ற மேல் பூச்சுக்களைத் தடவக் கூடாது.


நாம் சாப்பிட்ட, நமது உடலுக்கு ஒத்துக்கொண்ட, ஒத்துக்கொள்ளாத மருந்துகளின் பெயர்களை டைரியில் குறித்துக் கொள்ள வேண்டும்.

## உட்கார்ந்து சாப்பிடுக

பித்த நீராலும், கொலஸ்ட்ரோல் எனும் கொழுப்பாலும் பித்தப் பையில் கற்கள் உண்டாகின்றன. நுண்ணிய லேசர் கதிர் சிகிச்சை மூலம் சாவித் துவாரம் போன்ற சிறு துளையைப் போட்டு கற்களை பவுடராக மாற்றிவிடும் புதிய சிகிச்சைமுறை உருவாகியுள்ளது. இரத்த சேதம், வலி, மருத்துவமனையில் தங்கவேண்டிய காலம் போன்றவை குறைவாக இருக்கும். பித்தக்கல் மனிதனுக்கு மட்டுமே ஏற்படுகிறது. காரணம் நிற்பதுதான் என்கின்றனர். நான்கு கால்கள் உடைய விலங்குகளுக்கு இவ்வியாதி ஏற்படுவதில்லை-நின்று கொண்டு சாப்பிடுவதும் கல்லை உண்டாக்குகிறதாம். எனவே நன்றாக ஆற அமர தரையில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு பின்பு எழுந்து சென்றால் கல் உண்டாகும் வாய்ப்பிருக்காது.

டாக்டர். ஜி.ராஜமோகன்
(ஜெர்மனி-மெடிகல் போகஸ் சஞ்சிகை)

## நகம் கடிப்பது எதனால்?



இந்தக் கெட்ட பழக்கத்திற்குக் காரணம் குழந்தைகளல்ல; பெற்றோர்களே. கண்டிப்பாக வளர்க்கப்படும் வசதி படைத்த பெற்றோர்களின் குழந்தைகளே இப்படிப் பாதிக்கப்படுகிறார்கள்.

குழந்தை விளையாட வேண்டும் என்று நினைக்கும். உடனே 'கூடாது-போய் படி' என்பார்கள் பெற்றோர்கள். மாடியில் காற்றாடி விடத் துடிக்கும். 'மாடியே ஏறக்கூடாது' என்று தடை விதிப்பார்கள். சைக்கிள் கற்றுக் கொள்ள ஆசைப்படும். 'விழுந்து அடிபடுவாய்' என்று பயமுறுத்துவார்கள். இப்படி அது செய்ய விரும்பும் ஒவ்வொரு காரியத்திற்கும் குறுக்கே விழுந்து தடுப்பார்கள் - கோபிப்பார்கள் - அடிப்பார்கள்.

அந்தக் குழந்தையின் மனதில் ஒரு மனத்தளர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. இயலாமையை நினைத்து, தனிமையில் இருக்கும் போது நகம் கடிக்கத் தொடங்குகிறது. நாளடைவில் அது தனிச்சை செயலாகி, எந்த நேரமும் நகம் கடிக்கத் தொடங்குகிறது.

## ஆசைக்கு வயதில்லை




படத்தில் இருப்பவர் இந்தியாவிலுள்ள ஹைதராபாத்தின் 8வது நிஜாம். பெயர் முகரம்ஜா. 61 வயதாகும் இவர் சமீபத்தில் செய்த காரியம்; அவுஸ்திரேலிய அழகியான 26 வயது ஆயிஷாவைக் கரம் பிடித்தது.

ஆயிஷா இவருக்கு 5வது மனைவி. புதுப் பொண்டாட்டி வந்த யோகம் தனக்கு புகழ் கிடைக்கத் தொடங்கி இருப்பதாக இவர் கூறுகிறார்.

200கோடி மதிப்புள்ள பழங்கால நகைகளுக்கு வாரிசான இவர் அரசியலில் ஈடுபட உத்தேசித்துள்ளார்.

## வேளா வேளைக்கு உண்பது அவசியமா?



ஆகார வேளைகள் என்று சில குறிப்பிடப்பட்ட நேரங்களை நாம் நிச்சயித்துக் கொண்டுள்ளோம். இந் நேரங்களில் பசி தோன்றாதிருந்தாலும் கூட சிலர் வழக்கம் போல் ஆகாரம் உட்கொள்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

மேலும் சிலர் உடலைப்பற்றி அக்கறைப்படாது பசி இல்லாது போனாலும் சுலபமான ஆகாரம் என்றவுடன் அது எந்த வேளையாக இருந்தாலும் அவற்றை உண்பதில் தவறவிட்டு விடுவதே கிடையாது.


ஆனால் உடல் ஆரோக்கியத்தை பொறுத்தவரை இவை முற்றிலும் பிழையான நடைமுறையாகும். நமக்கேற்படும் நோய்களில் அனேகமானவற்றிற்கு நாம் மேற்கொண்டு வரும் ஆகாரங்களும் ஒரு காரணியாக இருக்கிறது.

ஆகார வேளைகள் என்றாலும் கூட குறிப்பாக உடலில் பசி ஏற்படவில்லையானால் அவ்வேளைக்கான ஆகாரத்தை தவிர்த்துக் கொள்வது சிறப்பாகும். ஒருவேளை ஆகாரத்தை தவிர்த்துக் கொள்வதன் மூலம் நம் உடலுக்கு பெரும் தீங்குகள் ஏதும் நேர்ந்துவிடப்போவதில்லை.

இடைநடுவே பசி ஏற்பட்டால் காய்கறி சூப், அல்லது பலகாரம், அல்லது இலகுவான பானம் போன்றவற்றில் ஏதாவது ஒன்றை அருந்துவதன் மூலம், உங்களின் உடல் உற்சாகமாகவும் சுறுசுறுப்புடனும் காணப்படும். உடல் ஆரோக்கியத்திற்கும் அனுகூலமாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


# மலருக்கு மர ஆடை



ஆதி காலத்தில் மரவுரி தரித்தனர் முன்னோர். (அதற்கு முன் அதுவும் இல்லை) தற்போது 'பாஷன்' என்ற பெயரில் பழமை திரும்பத் தொடங்கிவிட்டது.

இலண்டனில் நடந்த 'பாஷன் ஷோவில்' பலரைக் கவர்ந்தார் இந்த அழகி. இவர் அணிந்திருப்பது நவீன ஜாக்கெட். மரக்கட்டைகளில் அளவுகளுக்கு ஏற்ப கச்சிதமாகத் தயாரிக்கப்பட்டது. இடுப்புப் பகுதியில் ஆணி, நட்டு போட்டு இறுக்கி வைத்தால் போதும். மலருக்கு மரம் பாரம்தான். ஆனாலும் அழகுதான்.

# பாடாத பாட்டெல்லாம் பாடவந்தேன்



படத்தில் இருப்பவர்தான திருவாளர் தீக்கோழி. புதிதாக கட்சி ஆரம்பித்துவிட்டாரோ அல்லது பட்சிகள் பாடல் குழு ஏதாவது அமைத்துவிட்டாரோ என்று யோசிக்கிறீர்களா? இப்போதுதான் பாடவே பயிற்சி எடுக்கிறார். மற்றவை பின்புதானாம். ஹி... ஹி.....ஹி.... இங்கிலாந்தில் ஃபார்ஹாம் பறவைகள் சரணாலயத்தில் ஒரு வித்தியாச கிளிக்.

# முட்டு... முட்டு... அய்... முட்டு!



பெற்றோர் வேலையாக உள்ளபோது குழந்தையைப் பொறுப்பாக கவனிக்கும் வேலையை நாயார் தான் செய்கிறார். உள்ளது ஐந்தறிவு என்றாலும், அன்புடனல்லவா, அது போதும்.

# ஒரு விரல் வித்தை

'புஷ் அப்' செய்வது உடலுக்கு மகா வலிமை. 'புஷ் அப்'பில் பல ரகங்கள் உள்ளன. கைகளை விரித்து தரையில் வைத்து செய்வது, முஷ்டிகளை மடக்கி செய்வது. படத்தில் இருப்பவர் ஒரு விரலில் உடல் பாரம் முழுவதையும் செலுத்தி, தேங்காயில் விரல் வைத்து புஷ் அப் செய்கிறார். இது அசாத்திய திறமை. அதனால்தான் உலக சாதனையாளராக மாறியிருக்கிறார். நீங்களும் முயலலாமே.



# சுமையல்ல இது சுகம்!

இங்கிலாந்தில் 'ரெட் மொறிஸ்' என்னும் விவசாயி வீட்டிற்கு அன்னப் பறவையார் விசிட் செய்வது வழக்கம். ஏதாவது கொறிக்க வந்தவர் அங்குள்ள சின்னப் பூனையாரோடு செல்லம் காட்டத் தொடங்கிவிட்டார். விடுவாரா பூனையார் சவாரி நடத்துகிறார்.



## இந்தியில் அர்ஜுன்

தமிழில் அர்ஜுன் இயக்கி நடித்து வெற்றிபெற்ற படம் 'சேவகன்'. இந்தப் படத்தை இந்தியில் தயாரித்து இயக்க திட்டமிட்டுள்ளார் அர்ஜுன். கதாநாயகியாக மாதுரி டிக்ஷித் நடிப்பார் என்று தெரிகிறது.

## நக்மாவோடு பிரசாந்த்

'ஆணழகன்' படத்தையடுத்து தியாகராஜன் இயக்கும் புதிய படத்தில் பிரசாந்த் நடிக்கிறார். ஜோடியாக வெண்ணைக் குவியல் அழகி நக்மா நடிக்கிறார்.

தாடியோடு 'பங்க்' ஸ்டைலில் நடிக்கிறார் பிரசாந்த்.

## பிரபு-படம் வேகம்

பிரபு நடித்துவரும் 'பெரிய குடும்பம்' படத்தை சூப்பர் வேகத்தில் 'சூட்' பண்ணிவருகிறார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.

ஏன் இந்த வேகம்? கே.எஸ்.ரவிக்குமார் அடுத்து இயக்கப் போவது சூப்பர் ஸ்டார் ரஜினி படமல்லவா? அதான் இந்த வேகம்.





மாதுரி டிக்ஷித்

# 102

## கமலின் துரோகி

ஷங்கர் இயக்கத்தில் 'இந்தியன்' படத்தில் கமல் நடிப்பது தெரிந்த சமாச்சாரம்.

'இந்தியன்' வருவதற்கிடையில் 'பாசவலை' என்றொரு படம் கமல் நடித்து வெளிவரப் போகிறது. கே.விஸ்வநாத் இயக்கத்தில் கமல் நடித்த 'சுபசங்கல்பம்' என்ற தெலுங்குப் படமே 'பாசவலை' என்ற பெயரில் தமிழில் வருகிறது.

கமல் தெலுங்கில் சொந்தமாக தயாரிக்கும் படத்திற்கு 'துரோகி' என்று பெயரிட்டுள்ளார். அர்ஜுன், நாசர், கவுதமி ஆகியோர் நடிக்கின்றனர்.



மனிஷாகொய்ராலா

சொர்க்கமிருப்பது உண்மையென்றே அதைப்
பக்கத்தில் வைத்துவிட்டேன் - வெறும்
வெட்கத்தை விட்டுவிட்டேன் - இனி
துக்கப்படுவதில் அர்த்தமில்லை என்று
தோளை நிமிர்த்தி விட்டேன் - மனச்
சோர்வை அகற்றி விட்டேன்!

*கவியரசு கண்ணதாசன்.*

முகப்பில்
மனிஷா கொய்ராலா
விஜயசாந்தி
படம்: ஸ்ரீட்ஃபைட்டர்


## 'முகாபலா' நிலைக்குமா?

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் கடந்த இரண்டு ஆண்டுகளில் புகழ் ஏணியில் கிடு கிடுவென்று உயர்ந்துவிட்டார்.

காதலன் படத்தில் 'என்னவளே அடி என்னவளே' என்ற பாடலுக்குத்தான் அவர் நீண்டநாள் எடுத்துக்கொண்டாராம். அந்தப் பாடலுக்காக நேபாளம் மற்றும் சீனா நாட்டு இசைகளை ஆராய்ச்சி செய்யவேண்டியிருந்ததாம்.

ஆனாலும் ரகுமான் உண்மையை ஒப்புக்கொள்கிறார். "'முகாபலா', 'சிக்குப்புக்குரயிலு' போன்ற பாடல்கள் பணம் சம்பாதிக்கவும், கசட் விற்பனைக்கும் பயன்படலாம். ஆனால் இவ்வாறான பாடல்கள் நீண்டகாலம் இரசிகர்கள் மனதில் இருக்காது." என்று ஒப்புக்கொள்கிறார் ரகுமான்.

"என்னவளே அடி என்னவளே" போன்ற பாடல்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் முணு முணுக்கப்படும் என்பது நிச்சயம்" என்கிறர் 28 வயதான ஏ.ஆர்.ரகுமான்.



பாண்டியராஜன்

## ஐஸ்வர்யா மறுப்பு *

ஏற்கெனவே ஒப்பந்தமான 'மக்கள் ஆட்சி' படத்தில் நடனக்காட்சியில் நடித்துள்ளார் ஐஸ்வர்யா.

இதனையறிந்த தயாரிப்பாளர்கள் ஐஸ்வர்யாவை புதிய படங்களில் ஒப்பந்தம் செய்ய ஓடினார்களாம். திருமணத்திற்கு முன் ஒப்பந்தம் செய்யப்பட்டதால்தான் குழந்தை பிறந்த பின்னர் வந்து 'மக்கள் ஆட்சி' படத்தில் ஐஸ்வர்யா நடித்தாராம். புதிய படங்களில் நடிக்கும் ஐடியாவே ஐஸ்வர்யாவுக்கு இல்லையாம். இந்த முடிவு நிலைக்குமா?





## அந்த மூன்று பேருக்கு மவுசு

பம்பாய் இந்திப் படவுலகில் தமிழ் பட உலகைச் சேர்ந்த மூவருக்கு கிராக்கி.

யார் அந்த மூன்று பேர்? மணிரத்னம், ஏ.ஆர்.ரகுமான், பிரபுதேவா.

இவர்களில் முதலிடத்தில் இருப்பவர் பிரபு தேவாதான். இந்திப்பட இரசிகர்கள் மனதில் ஆழமாகப் புகுந்துவிட்டார் பிரபுதேவா.

'காதலன்' படத்திற்கு இந்தியில் 'ஹம் சே கே முகாபலா' என்று பெயர் வைத்தார்கள். "நம்மகிட்ட போட்டியா?" என்று அர்த்தமாம்.

'மிஸ்டர் ரோமியோ' படத்தை இந்தியில் தயாரிக்க இப்போதே பலத்த போட்டி.

## வயது 17 மட்டும்

தற்போதைய கவர்ச்சி இராணி சங்கவி தன் வயது 17 தான் என்று சத்தியம் செய்கிறார்.

நடிகர் பாக்யராஜ் கொடுத்த அறிவுரையின்படிதான் இன்று முன்னுக்கு வந்துள்ளதாக கூறும் சங்கவி ஸ்ரீதேவியின் இரசிகை.

## படுசூடான காட்சி

தெலுங்கில் சிரஞ்சீவி நடித்த படங்கள் தொடர்ச்சியாக அடிவாங்கியிருந்தன. யோசித்தார் சிரஞ்சீவி. படு கவர்ச்சி, இரட்டை அர்த்தங்கள் கலந்து ஒரு படத்தில் நடித்தார். படத்தின் பெயர் 'அல்லுடா மஜாகா'. படுக்கையறைக் காட்சி ஒன்றும் படு சூடாக படத்தில் இடம்பெறுகிறது. விளைவு: படம் சூப்பர் ஹிட். ஆந்திர மாநிலத்தில் 80 திரையரங்குகளில் 50 நாளைத் தாண்டி வசூலில் தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்




## ஊர்வசியை தூக்கியாச்சு!

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'காந்தி பிறந்த மண்' இதில் விஜயகாந்த் ஜோடியாக ஊர்வசி ஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தார். இப்போது ஊர்வசியை ஓரம்கட்டி விட்டு ரேவதியை கொண்டுவந்திருக் கிறார்கள்.

விஜயகாந்திற்கு இரண்டு ஜோடிகள். இன்னொரு ஜோடி ராவாலி. இவர் 'திருமூர்த்தி' படத்திலும் விஜயகாந்துடன் நடித் திருக்கிறார்.

விஜயகாந்த்-ரேவதி ராசியான ஜோடி என்பதால்தான் ஊர்வசி தூக்கப்பட்டதாக சொல் கிறார்கள்.



# சினி விசிட்

## வெளிநாட்டில் விஜயசாந்தி

அர்ஜூன் இயக்கத்தில் விஜயசாந்தி நடிக்கும் 'தாயின் மணிக்கொடி' படத்தின் படப்பிடிப்பு வெளிநாடுகளில் நடைபெறவுள்ளது. ஹொங்கோங், தாய்லாந்து போன்ற நாடுகளில் பாடல் காட்சிகளின் படப்பிடிப்புக்கள் நடைபெறவுள்ளன.

## ...பிரியாவுக்கு அதிஷ்டம்

... டமாகிய நிலையில் மனமுடைந்து ... பானுப்பிரியா. வீட்டில் அவருக்கு ... தேடினார்கள்.

...பானுப்பிரியாவுக்கு அதிஷ்டம் அடித்தது. ...சுரேஷ் கோபி நடித்த 'ஹைவே' ... வெற்றிமேல் வெற்றி குவித்துவிட்டது. ... ஒரு புதிய படத்தில் சுரேஷ் ... நடிக்கிறார் பானுப்பிரியா. வாய்ப்புகள் ... வரன் தேடும் படலம் ஒத்திவைக் ...

## ...வும் சிங்கப்பூரும்

... வருடங்களில் 10 முறை குஷ்பு சிங்கப்பூர் ... "அங்கு போய் எல்லாம் ... நாட்டில் மட்டும் ஏன் மேடைகளில் ..." என்று ஒரு நிருபர் கேட்டாராம். ... பதில் நம்ம ஊர் இரசிகர்கள் ... நேரில் காண்கிறார்கள். ... இரசிகர்களுக்கு அந்த வாய்ப்பு ... அங்கு போய் ஆடுகிறோம்." ... அடடே பரந்த மனசு.

...க்கு ரஜினி ஆறுதல்

'அதிரடிப்படை' படத்தை சொந்தமாக தாயாரித்து நஷ்டத்தில் அதிரடி வாங்கியவர் ரோஜா ... பின்னர் அவருக்கு பிரமாத வெற்றி எதுவும் கைக்கெட்டவில்லை.

ரஜினிகாந்த்தை வைத்து சொந்தமாக படம் தயாரிக்க நினைக்கிறார். ரஜினியிடம் கேட்டபோது "கொஞ்சம் பொறு ... தருவேன்" என்று ஆறுதல்படுத்தி அனுப்பிவைத் ...

# மினி சினி

* ரஜினி நடிக்கவுள்ள 'முத்து' படத்தின் கதை மலையாளப்படமொன்றின் தழுவலாகும். மலையாளத்தில் மோகன்லால் நடித்த வேடத்திலேயே ரஜினி நடிக்கிறார்.
* பாரதிராஜாவின் 'முதல் மரியாதை' படத்தில நடித்த ராதாவுக்கு ராதிகா பின்னணி குரல் கொடுத்தார். அண்மையில் வெளிவந்த பாரதிராஜாவின் 'பசும்பொன்' படத்தில் சரண்யாவுக்கு ரேவதி பின்னணி பேசினார்.
* 'நாட்டாமை' தெலுங்குப் பதிப்பில் குஷ்பூ வேடத்தில் நடித்து வரும் பானுப்பிரியா, அடுத்து தெலுங்கில் தயாராகவுள்ள 'வனஜா-கிரிஜா' படத்தில் தமிழில் ஊர்வசி நடித்த வேடத்தில் நடிக்கவிருக்கிறார்.
* மணிரத்தினத்திடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய பெருமாள் என்பவர் தனியாக ஒரு படத்தை இயக்கவுள்ளார். இந்தப் படத்தை சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிக்கவுள்ளது.
* தெலுங்கில் சிவரஞ்சனி, ஊஹா என்ற பெயரில் நடித்த 'ஆமே' (அவள்) பெரு வெற்றி பெற்றது. தற்போது இந்தப் படம் தமிழில் உருவாகவுள்ளது. சிவரஞ்சனி நடித்த வேடத்தில் 'கருத்தம்மா' மகேஸ்வரி நடிக்கிறார்.
* கோவை செழியன் தயாரிப்பில் மம்முட்டி கதாநாயகனா நடிக்கும் படத்தை மணிவண்ணன் இயக்குவதாக இருந்தது. இப்போது இந்தப்படத்தை 'தலைவாசல்' செல்வா இயக்கவுள்ளார்.
* மிகப்பிரபலமான நகைச்சுவை ஜோடியான நாகேஷ்-மனோரமா நீண்ட இடைவெளிக்குப் பிறகு கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'மருமகன்' படத்தில் மீண்டும் ஜோடியாக நடித்துள்ளார்கள்.
* டாக்டர் ராஜசேகர் நடிக்கும் '1995 இந்தியன்' படத்தில் கதாநாயகியாக கௌதமி நடிக்கவுள்ளார். 'நம்மவர்' படத்திற்குப் பின்னர் கௌதமி நடிக்கும் தமிழ்ப்படம் இதுதான்.
* 'கூலி' படத்திற்கு இசையமைத்துள்ள சுரேஷ் பீட்டர் அடுத்து நாஸர்-ஊர்வசி நடிக்கும் 'அருவாவேலு' படத்திற்கு இசையமைக்கவுள்ளார். இந்தப் படத்தை பாரதிகண்ணன் இயக்குகிறார்.
* 'பாட்ஷா' படத்திற்குப் பின்னர் மலையாளத்தில் 'என்பாஸ்' என்ற படத்தை இயக்கி வரும் சுரேஷ் கிருஷ்ணா, அடுத்து தமிழில் இரண்டு படங்களை இயக்கவுள்ளார். இவற்றில் நெப்போலியன், அரவிந்தசாமி ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர்.



## சத்யராஜுக்கு 4 படம்

'வில்லாதி வில்லன்' படத்தை இயக்கி மூன்று வேடங்களில் நடித்துள்ளார் சத்யராஜ். இதன் படப்பிடிப்புக்கள் முடியும் வரை வேறெந்த புதிய படத்திலும் நடிக்காமல் இருந்தார். இப்போது 4 புதிய படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். குரு தனபால் இயக்கும் 'மாமன் மகள்' ஆர்.கே.செல்வமணி இயக்கும் ஒருபடம். ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் மூன்றாவது படம். நாலாவது படத்தை புவித்ரன் இயக்குவார் என்று தெரிகிறது.



## மனிஷா ஒரு மனிஷா

'பம்பாய்' படத்தில் மனிஷா கொய்ராலா நடித்தாலும் நடித்தார் தமிழ் இரசிகர்கள் அவர்மீது பைத்தியமாகிவிட்டார்களாம்.

தமிழ் நாட்டிலிருந்து இரசிகர் கடிதங்கள் மனிஷா வீட்டில் மலை போலக் குவிகிறதாம்.

மனிஷா கொய்ராலாவும் மனம் திறந்து பேசும் இந்தி நடிகைகள் பட்டியலில் இருக்கிறார். "எனக்கு விருப்பமான ஆண்மகன் கிடைக்கும் போது உடலுரீதியான உறவுக்கு இடம் கொடுப்பேன்." என்று மனிஷா சமீபத்தில் ஆங்கில இதழ் ஒன்றுக்கு பேட்டி கொடுத்தார். அது பம்பாய் பட உலகையே கலக்கிவிட்டது. அந்தப் பேட்டியை மனிஷா மறுக்கவேயில்லை.

"உண்மையைச் சொன்னேன். எப்படி நடந்து கொள்வது என்பது என் உரிமை. இதில் தலையிடவோ விமர்சிக்கவோ வெளியாருக்கு உரிமை கிடையாது" என்கிறார் மனிஷா.

"நல்லது. இதுவரை உங்களுக்கு பிடித்த ஆண்மகன் யார்?"

இந்தக் கேள்விக்கு மனிஷாவின் பதில் இது: "எனக்கு பல ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள். நெருங்கிப் பழகியும் இருக்கிறேன். நான் வித்தியாசமானவள். என்னைக் கவரும் ஆண்மகனை இதுவரை சந்திக்கவில்லை. என்கிறார் மனிஷா.



# தலைப் பிரசவத்திற்கு தகுந்த யோசனைகள்!



மாதவிலக்கு தள்ளிப்போதல், மார்பகம் மிருதுவாதல், அடிக்கடி வாந்தி, தலைசுற்றல், சோர்வு, அடிக்கடி சிறுநீர் போதல் ஆகியன தாய்மை அடைவதற்கான அறிகுறிகளாகும். இவ்வறிகுறிகள் தோன்றிய 15 நாட்களுக்குள் மகப்பேறு மருத்துவரிடம் சென்று சோதனை செய்வது கட்டாயமாகும்.

3வது மாதம் முதல் மாதந்தோறும் மருத்துவரைச் சந்தித்துத் தக்க ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

கடுமையான தலைவலி, தொடர்ச்சியான வாந்தி, முகம் ஊதிப்பெருத்தல், அடி வயிற்றில் தீவிரமான வலி, கருப்பைப்புறவழியில் இரத்தக் கசிவு அல்லது நீர் கசிவு இருத்தல் ஆகிய அறிகுறிகள் தோன்றினால் உடனே மருத்துவரைச் சந்திக்க வேண்டும்.

பிரசவ திகதிக்குள் குறைந்தது பத்து முறைகளாவது மருத்துவரிடம் சோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

நாளொன்றுக்கு 2,500 கலோரி அளவு சத்துணவு தேவை. அதற்கேற்ப உணவு வகைகளைப் பகிர்ந்து வேளாவேளைக்குச் சாப்பிட வேண்டும்.

கருப்பையில் வளரும் குழந்தையின் சீரான வளர்ச்சி, தாயின் உணவு, மருந்து, பழக்க வழக்கம் ஆகியவற்றைச் சார்ந்திருப்பதால் தரமான உணவு, நல்ல பழக்கங்கள், மருந்துகள், பயிற்சிகள் ஆகியன மேற்கொள்ள வேண்டும்.

தினசரி உணவில் கொத்தமல்லி, கறிவேப்பிலை, கீரைவகைகள், கோதுமை உணவு, பார்லி கஞ்சி ஆகியன சாப்பிடுதல் நல்லது. அதிக காரம், அதிக உப்பு சேர்ந்த பலகாரம் போன்றவற்றைத் தவிர்த்தல் நல்லது.

மகப்பேறு காலத்தில் பப்பாளி, அன்னாசி, சிறுகீரை, விபூதி, மண், அரிசி ஆகியன சாப்பிடக்கூடாது. கோப்பி அதிகமாகக் குடித்தல் கூடாது.

கிணற்றில் நீர் இறைத்தல், மாடிப்படி ஏறுதல், இடுப்பில் தண்ணீர்க் குடம் தூக்குவது போன்ற கடினமான வேலைகளைச் செய்யக்கூடாது.

காலில் வீக்கம், கண்பார்வை மங்குதல், முகம் வீங்குதல், இதயம் படபடத்தல் ஆகியன ஏற்பட்டால், மகப்பேறு மருத்துவமனையில் எட்டாவது மாதமே சேர்ந்து விடுவது நல்லது.

முதல் மூன்று மாதங்களுக்குள் தாய்க்கு அம்மை வந்தாலோ, டாலிடோமைட் போன்ற மருந்துகளை சாப்பிட்டிருந்தாலோ குழந்தையின் உறுப்புக்கள் நலிவுற்று ஊனமுற்ற பிறப்பாக அமைந்துவிடும். இம்மாதிரி நிலையில் டாக்டரிடம் சென்று சோதித்துக் கொள்வது நல்லது.

கருவுற்று மூன்றாவது மாதம் முதல், பிரசவமாகும் நாள்வரை தாயானவள் கீழ்க் கண்டவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்:

* உணவு, உடை, இருப்பிடம் ஆகியன தூய்மையாக இருக்க வேண்டும்.
* சோம்பேறித்தனமாக இருக்கக்கூடாது.
* காற்றாட, காலாற நடக்கலாம்.
* கோபமடைதல், உரக்கப் பேசுதல், கவலை, சோர்வு ஆகியன கூடாது.
* எக்காரணத்தைக் கொண்டும் பட்டினி இருக்கக்கூடாது.
* சிறுநீர், மலம் தடையாகாமல் கழித்தல் வேண்டும்.
* உடலுறவை ஏழாவது மாதத்துடன் நிறுத்திக் கொள்வது நல்லது.

# லேடீஸ் ஸ்பெசல்

## அழகாயிருக்க கத்துக்கணும்

கூந்தல் சுருள் சுருளாக அமைந்திருக்க கூடிய பெண்கள் பின்னலின் முனையை அப்படியே விட்டுவிடுவது அழகாக இருக்கும். குறுகலான கழுத்தை உடைய பெண்கள் வட்ட வடிவமான கழுத்து பிளவுஸ்ஸை அணிந்தால் அழகாக இருக்காது. அவர்கள் V வடிவ கழுத்து பிளவுஸ் அணிவதுதான் அழகாக இருக்கும். பிளவுசின் கழுத்துப்பட்டை அகலமாக இல்லாமல் மெல்லியதாக இருக்குமாறு அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஒடுக்கமான கழுத்தினைப் பெற்ற பெண்கள் காதுகளில் ஜிமிக்கி போன்ற தொங்கலாடும் நகைகளை அணியக்கூடாது. காதுகளை ஒட்டினாற் போன்ற நகைகளை அணிந்தால் தான் அழகாக இருக்கும்.

கூம்பிய நீளமான முகமுடைய பெண்கள் வளையம் அமைந்த வட்ட வடிவமான கொண்டை போட்டு வட்ட வடிவில் மல்லிகை அல்லது முல்லைப் பூச்சரத்தை சுற்றிக் கொண்டால் முகம் எடுப்பாக-அழகாக இருக்கும்.

உயரமாக கொண்டை போட்டுக் கொள்ளும் பெண்கள் அடர்த்தியாக பூச்சூடிக் கொண்டால் அழகாக இருக்காது. இரு இலைகளுடன் கூடிய ஒற்றை ரோஜாவை வைத்துக்கொண்டால் அழகாக இருக்கும். ரோஜா கிடைக்கவில்லை என்றால் கொத்தாக ஏதாவது ஒரு மலரை சூடிக் கொள்ளலாம்.

பெண்களின் உடல் நிறம் பிரகாசமாக தோன்ற தக்காளிப்பழங்களை தினமும் நிறைய சாப்பிட வேண்டும். தோல் பிரகாசமாக தோன்றுவதுடன் சுருக்கங்கள் இல்லாமல் இருப்பதற்கும் தக்காளிப்பழம் உபயோகிப்பது மிகவும் நல்லது.

நல்ல சிவந்த அப்பிள் பழத்தை நறுக்கி ஒரு பாத்திரத்தில் இட்டு மத்தினால் கடைந்து மாவாக ஆக்கி, அந்த மாவுடன்



சுத்தமான பாலேட்டை கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் வைத்திருந்து முகம் கழுவினால் முகம் மினுமினுப்பாக கவர்ச்சியுடன் தோன்றும்.

சிலவகை உயர்ந்த பீட்ரூட் கிழங்குகள் உள்ளன. அவை நமது நாட்டிலும் கிடைக்கின்றன. அதை சேகரித்து சாறு எடுத்து அதனுடன் சிறிதளவு கிளிசரின் கலந்தால் அருமையான உதட்டுச்சாயம் தயார். இந்த சாயம் உதடுகளைக் கெடுக்காது. செய்து பாருங்களேன்.

## உங்கள் கன்னம் என்றும் மின்ன....

முகத்தில் எண்ணெய்ப்பசை காணப்படுகின்றதா? கவலை வேண்டாம். முட்டை வெள்ளைக் கருவுடன் எலுமிச்சம் சாறு கலந்து தேய்த்து அரைமணி நேரம் ஊறியபின் குளிர்ந்த நீரினால் கழுவினால் கன்னம் மிளிரும். கிளிசரின், எலுமிச்சம் சாறு இரண்டையும்கலந்து அதனைக் கன்னங்களில் தேய்த்து வந்தால் கன்னம் மிளிரும்.



பசும்பாலை காய்ச்சி அதில் கிடைக்கும் ஆடையில் கிளிசரின், சில துளி பன்னீர் கலந்து தேய்த்து வந்தால். கன்னம் மெருகூட்டும்.

கரட்சாறு, எலுமிச்சம் சாறு, தக்காளிப் பழச்சாறு ஆகிய மூன்றையும் கலந்து கன்னத்தில், மற்றும் முகம், கை, கால்களில் தேய்த்தால் கரும்புள்ளிகள் அகலும்.

இரவு படுக்கப்போகும்முன் ஒலிவ் ஒயிலை முகத்தில் தடவி இரவு முழுவதும் அப்படியே விட்டுவிட்டு காலையில் முகம் கழுவுங்கள்; தோல் சுருக்கம், கரும் புள்ளிகள் நீங்கும்.

முகத்திற்கு வெந்நீர் ஆவி பிடித்தால் முகத்துவாரங்களில் அடைபட்டிருக்கும் அழுக்கு நீங்கி முகம் சுத்தமாகும்.

## சுவையாய் இருக்க சதையான கோழி

பெண்களே கோழி இறைச்சி வாங்கும் போது எவ்வாறு பார்த்து வாங்குவது என்ற குழப்பமா? வேண்டாம் இனிக் கவலை. இதோ உங்களுக்கு சில குறிப்புக்கள்;

1. புதிதாக நறுக்கப்பட்ட கோழியின் மாமிசத்தில் இருந்து அருவருக்கத்தக்க வாடை எதுவும் வராது. அப்படி வந்தால் அது நறுக்கப்பட்டு பல மணிநேரமாகி விட்டது என முடிவு செய்யுங்கள்.

2. மாமிசம் வெண்மையானதாகவும், திடமானதாகவும் இருக்க வேண்டும்.

3. கோழியின் மார்பெலும்புக்கு முன் காணப்படும் 'விஷ்போன்' (wish Bone) மிருதுவானதாகவும், வளைத்தால் எளிதில் வளைவதாகவும், இருப்பது அவசியம். அவ்வாறு இல்லாமல் கடினமாக இருந்தால் அது வயதான கோழி என முடிவு செய்யுங்கள்.

4. உரிக்கப்பட்ட கோழியின் கால்கள் மஞ்சள் நிறத்தில் இருக்க வேண்டும். கால்விரல்கள் பார்ப்பதற்குச் சுத்தமாக இருக்க வேண்டும்.

5. மார்புப் பகுதி அகலமாக இருக்கும் படி பார்த்து வாங்க வேண்டும்.

6. குறுகலான மார்பும், நீளமான கால்களும் உடைய கோழிகளை வாங்கக் கூடாது. இத்தகையவற்றில் எலும்பு எடைதான் அதிகமாக இருக்கும்.

7. கால் பகுதியில் மாமிசம் அதிகமாக இருக்கிறதா என்பதைச் சோதனை செய்து வாங்கவேண்டும்.

8. சொல்லப்பட்ட பெரும்பாலான முறைகளையே உயிருடன் இருக்கும் கோழி வாங்கும் போதும் பின்பற்ற வேண்டும்.

மேற்கண்ட அனைத்து வழிகளையும் பின்பற்றி சுவையான சுத்தமான கோழியைச் சமைத்துப்பாருங்களேன்.

சமைப்போம் சுவைப்போம் — தொகுத்துத் தருவது—சுகந்தினி

# ஐஸ்கிறீம் தயாரிக்க ஆசையா?


## இதைப் படியுங்கள்! முதலில்!

கவனிக்க வேண்டியவை.

ஐஸ்கிறீம் தயாரிக்கும் போது சீனி சேர்க்கும் விஷயத்தில் திட்டமான நடைமுறையைக் கையாள வேண்டும். அளவுப்படியே சீனியைச் சேர்க்க வேண்டும். சீனியின் அளவுஅதிகமானால் ஐஸ்கிறீம் கெட்டியாகாமல் போய்விடும்.

ஐஸ்கிறீம் கலவை நன்றாக அமைய வேண்டுமானால் முட்டை அடிக்க பயன்படுத்தும் கருவியைக் கொண்டு அடித்துக் கலக்க வேண்டும். ஐஸ்கிறீமில் பழரசம் அல்லது பழவிழுது சேர்க்கவேண்டுமானால் முதலிலேயே கலந்துவிடக்கூடாது. பாலை நன்கு குளிரவைத்து பாதியளவுக்கு அது கெட்டியான பின்னரே பழச்சாறு பிழிந்து கலக்க வேண்டும்.

ஐஸ்கிறீம் கலவை தயார் செய்யும்போது ஒரு முழு முட்டையை அப்படியே வைத்து உடைத்துப் போடுவதைவிட இரண்டு முட்டைகளின் மஞ்சள் கருவை மட்டுமே பயன்படுத்தலாம். இவ்வாறு செய்யும்போது ஐஸ்கிறீம் மிகவும் நன்றாக இருக்கும். மஞ்சள் கருவைக் கலக்கும் போது கீழ்க்கண்டவாறு செய்யலாம்:



முதலில் மஞ்சள் கருவை நன்றாக அடித்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். பால், சீனி, கஸ்டாட் பவுடர்,(கடைகளில் கிடைக்கும்) ஆகியவைகளின் கலவை கொதிக்கத் தொடங்கும் போது கலவையுடன் கூடிய பாத்திரத்தைக் கீழே இறக்கிக்கொள்ள வேண்டும். கலவையை நிதானமாகக் கிளறிக்கொண்டே மஞ்சள் கருவை ஊற்ற வேண்டும். இந்தக் கலவை கொதிக்கக் கூடாது. இந்தக் கலவையுடன் கூடிய பாத்திரத்தை ஐஸ்கட்டியில் வைத்து குளிரச் செய்ய வேண்டும். மூன்று நிறங்களில் ஐஸ்கிறீம் செய்வதாக இருந்தால் இவ்வாறு செய்யலாம்:

ஐஸ்கிறீம் கலவையை மூன்று சம பாகங்களாகப் பிரித்துத் தனித்தனியே வைத்துக் கொள்ள வேண்டும். பிரிக்கப்பட்ட கலவையின் ஒரு பங்கை வெண்மையாகவே வைத்திருக்க வேண்டும். இரண்டாவது பங்கை ரோஸ் நிறமாக்க வேண்டும். மூன்றாவது பங்கை செம்மஞ்சள் அல்லது பச்சை நிறமாக்கிக்கொள்ள வேண்டும். வெள்ளைப் பங்கைக் குளிரச் செய்து அது கெட்டியானவுடன், ரோஸ் பாகத்தை மேலே வைத்து இந்தக் கலவையும் கெட்டியான பிறகு செம்மஞ்சள் அல்லது பச்சைக் கலவையை அதற்கு மேலாக வைத்து குளிரச் செய்து கெட்டியாக்க வேண்டும்.

கோப்பி ஐஸ்கிறீம் செய்வதாக இருந்தால் நெஸ்கஃபே போன்ற திடீர் கோப்பித்தூளைத் தான் பயன்படுத்த வேண்டும். வீட்டில் தயாரிக்கும் சாதாரண கோப்பியைப் பயன்படுத்தினால் ஐஸ்கிறீம் கெட்டியாகாமல் நீராகிவிடும்.

### ஒரேஞ் ஐஸ்கிறீம்

**தேவையானவை:**

ஒரேஞ் பழச்சாறு - 300 மில்லி லீற்றர்
சீனி - 75 கிராம்
எலுமிச்சம் பழச்சாறு - 3 மேசைக்கரண்டி
தண்ணீர் - 2 மேசைக்கரண்டி
ஜலடீன்தூள் - 2 மேசைக்கரண்டி
ஒரு முட்டை வெள்ளைக்கரு.

**செய்முறை:**

சீனியுடன் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து அடுப்பில் வைத்து கொதிக்க வைக்க வேண்டும். கொதி வந்த பிறகு தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் கொதிக்குமாறு விட்டு இறக்கிக் கொள்ள வேண்டும். ஜலடீன் தூளை இரண்டு மேசைக் கரண்டி வெந்நீரில் விட்டு நன்றாகக் கரைத்துக் கொள்ள வேண்டும். முட்டையின் மஞ்சள் கருவை நன்றாக அடித்து ஜலடீன் கரைசலுடன் கரைத்துக் கொள்ளவேண்டும். ஒரேஞ் பழச் சாற்றை கொதித்த எலுமிச்சம் பழச் சாற்றுடன் சேர்த்து முட்டைக் கலவையுடன் கலந்து குளிரச் செய்யும் தட்டில் வைத்து ஒருமணி நேரங் கழித்து நன்றாகக் கெட்டியானதும் எடுத்துப் பயன்படுத்தலாம்.

பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 13

## மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

### முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

## பழிக்குப் பழி

காதலில் தோல்வி என்றால் அழுது கொண்டு ஒரு மூலையில் இருக்கும் பெண்கள் பலர் இருக்கிறார்கள்.



வெளிநாடுகளில் பெண்கள் அழமாட்டார்கள். விட்டேனா பார் என்று களத்தில் இறங்கிவிடுகிறார்கள்.

அமெரிக்க ஹொக்கி வீராங்கனை டிரிசியா. அவருக்கு ஒரு காதலர். பெயர் கிரகாம் குக். அவரும் ஹொக்கி வீரர்தான்.

இருவரும் காதலித்தார்கள். நெருக்கமாய் பழகினார்கள்.

திடீரென்று கிரகாம் குக் மலர்தாவும் வண்டாகிப் போனார். டிரிசியாவை மறந்துவிட்டார்.

டிரிசியா கண்களை கசக்கிக் கொண்டு திரியவில்லை. ஒரு காரியம் செய்தாள்.

கிரகாம் தனது பின்புறங்களை காட்டிக்கொண்டிருப்பது போன்ற படத்தை பனியனில் பிரின்ட் போட்டு அணிந்து கொண்டாள். அந்த பனியனோடு சுற்றத் தொடங்கினாள்.

"கிரகாமை பழிவாங்கி விட்டேன். எனக்கு இந்த சந்தோஷமே போதும்" என்கிறாள் டிரிசியா.

பாவம் கிரகாம் குக் மனமுடைந்துபோய் இருக்கிறார்.

அமெரிக்காவில் சமீபத்திய சூடான சமாச்சாரம் இதுதான்.


## யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்

முரசின் 'பரிசுக் கூப்பன்' போட்டியில் அதிஸ்டசாலியான 50 பேரில் ஏற்கனவே 30 அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் இடம் பெற்றிருந்தன. இம் முறை மேலும் பத்து அதிஸ்டசாலிகள்.

31. செல்வி. அஞ்சலா ஜேக்கப், நெலுக்குளம்-வவுனியா.
32. ஃபாத்திமா. நுஸ்ருல் சலாம், ஹெம்மாத்தகம.
33. றஃமத் ஜிப்றி - பாணந்துறை.
34. திருமதி. மங்கையற்கரசி இராசையா, இரத்தினபுரி.
35. திருமதி. மலர்விழி நாராயணசாமி, மாத்தளை.
36. ஜென்னிபர் ஜோசப், நீர்கொழும்பு.
37. மதிவதனி கனகசபை சாவகச்சேரி-யாழ்ப்பாணம்.
38. சூரியகலா சின்னராசா ஆரையம்பதி - மட்டக்களப்பு.
39. எஃப். ஆமிசா - புத்தளம்.
40. சியாமளா சிறீநிவாசன், கொழும்பு-06.

(மறுவாரமும் வரும்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்







தமிழக கவிஞர் நா. காமராசன்
(முரசுக்குத் தந்தது)

இது சுயமல்ல
இதயத்தின் திரைச்சீலை.
இதை இழக்கும் போது
பொய்முகம் அணியும் மனிதன்..
பெறும்போது
புகழ்முகம் சுமப்பான்
இது புன்னகை மின்னலும்
கண்ணீர் மழையும்தரும்
சிறியவானம்.

இது உடலின் முகவரி.
பேசும் சதைக்கண்ணாடி;
பிறரைப் பார்க்கவும் செய்யும்!

வாழ்வின வருகையும்
மரணத்தின் வரவும்
தெரியும் இடம்!

## உன் சம்மதமும் என் சமாதியும்

உன்னோடு
மௌன யுத்தத்தில்
ஆயுதம் ஏந்தாமல்
போராடிப் போராடியே
எனக்கு மாரடைப்பு!

அடிமேல்
அடியடித்தால்
அம்மியும் நகரும்
என்றதனால் தான்
உன்னை அம்மியாக
எண்ணிக் கொண்டேன்!

நீயோ அது
அம்மிக்குச்
சொன்னதாய்
எண்ணிக்கொண்டாய்!

உன்னை
எண்ணி எண்ணியே
நாராய்
மெலிந்துபோனேன்!

இன்னும் நீ
மௌனிப்பதில்
இன்னும் சிலநாளில்
உன்கல்யாண
மாலைக்கு
பூமட்டும் வாங்கி
என்னையே
நாராக்கிப்
பின்னிக்கொள்வாய்
போலிருக்கின்றது!

உன் அன்போடு
மாமாங்கமாய்
வாழும் ஆசை
எனக்கிகல்லை!

ஒரு கணம் மட்டும்
வாழ்ந்தால் போதும்
அதனால் அன்பே...

இதழ்திறந்து
சம்மதம் என்று
கூறு!

நீ சம்மதித்த
அந்த பேரதிர்ச்சியில்
நிரந்தரமாகவே
இறந்துபோகிறேன்!

பூண்டுலோயா மெய்யன் நடராஜ்

## பதில் எழுதுபுள்ள...

உனை
என் வாலிபம்
கெஞ்சிக் கேட்கிறது
உன்னால்
உனைத் தரமுடியுமா?
ooo
எனனில்
என வாலிபம்
சூடாவதையும்
என்னால்
பொறுத்திருந்து
தாங்கமுடியுமா?
ooo
நான்
சோகங்களை
வாங்கிப் போகிறேன
அதை
நீ..
உன வீட்டு
ஜன்னல வழியாகப் பார்..
தெரியும்!
ooo
மரங்கள்
செடி கொடிகள்
கொட்டாவி விட்டபோது
நான்
உனக்கு எழுதிய
காதல கடிதம்
பறந்து போய்விட்டது!
ooo
அது
உன் முகவரிக்கு
வந்து சேர்ந்ததா?
ooo
பதில்
எழுதுபுள்ள...
ooo
உனபதிலை
வாசிக்காமல
என்னால்
தூங்கவோ: மரணிக்கவோ
முடியாது என்கிறேன்
நம்புவாயா!
oooo
.....???


பொத்துவில்
பௌர்ணமி நிலா



## வசந்தம் எழுதும் வாழ்த்து

என்
நெஞ்சில்
நெருடல் ஒன்று
நீண்ட நாட்களாக
இருந்து வருகிறது
••
கடந்த கால(க்)
கனவுகளை
வருடிப்பார்க்கிறேன்.
வருத்தமாகவே
வந்து போகிறது.
••
செவ்வானம்
சிரித்து சந்தோஷித்தது.
சமாதான மேக சஞ்சாரங்கண்டு.
••
சமாதானம்–எம்மை
சந்திக்குமோ என்னமோ...?
ஒரு நாள் விடியும்.
••
அந்த வைகறையின்
அழகில்
வசந்தம்
வாழ்த்துக்கள் எழுதும்
••

இஸ்லாஹிய்யா கே. முனாஸ்.



## ஒரு கிராமப் பெண்ணின் காதல் பாடல்

சேத்துல நாத்து வீசியே கண்ணாலே
சேதி அனுப்புறீங்க– என்
சின்னம்மா பார்த்ததும் ஒண்ணுந் தெரியாது
போல முழிக்கிறீங்க!

காத்துல மாராப்பு கொஞ்சம் விலகிட
காத்துக் கெடக்கிறீங்க – ஒரு
கண்கொத்திப் பாம்பைப் போல் மண் கொத்தும் என்னையே
கவ்வத் துடிக்கிறீங்க!

காலுக்கு மேலேயே பாவாடை தூக்கி நான்
கட்டி நடவு நட–பசும்
பாலுக்கலையிற பூனை போல நீங்க
பார்த்து மயங்கிறீங்க!

மேலுக்கு நானும் வெறுக்கிறேன் – ஆனாலும்
மிச்ச மொண்ணுமில்லீங்க – ஒங்க
தோளுக்கு என் கையத் தொத்திக் கிடப்பது
தொலைவுல இல்ல மச்சான்!

நாளைக்கி எங்குட வேலிப்பக்கம் நீங்க
நழுவாம வந்திடுங்க – ஒங்க
வாளுக்கு ஒப்பான மீசையழகிலே
என்னுயிர் இருக்குதுங்க!

எம்.ஏ.இசார்தீன்
அட்டாளைச்சேனை - 10




## நீ வராவிடின்!



[illegible]

## விடை இல்லாத வினா.....!

எனக்குள் முகிழ் விட்ட
புதுக் கவிதை நீ
உன் புன்னகையால் எனை
பின்னிக் கொண்டவள்

கண்ணசைவில் தமிழ் தந்து
கவி தந்து எனையே
என்னுள் கரைத்தவள்
வசந்தகாலப் பூக்களின் மீது
அமர்ந்து வந்த தென்றலாய்
இதயத்தை வருடியவள்

சிறகடித்த விழியால்
சிக்க வைத்து பக்கம் வந்து
சிந்தனை தெளிவு தந்து
என்னை கிறங்க வைத்தவள்

எத்தனை எத்தனை மாற்றங்கள்.....
என் மனவெளியில்
விதைத்த உன்னில்
வந்த மாற்றம் தான்–என்
மனதை உழுததடி!

பிரிவெழுதி துயர் தந்து
என் பின்னடைவில்
நீ...முன் நிற்கின்றாய்

உயிர் சுமந்த உடல்
இன்று....மரணச் சிசுவை
மடியேந்த முன்பும்
வினாடியிலும் விசுவாசிக்கும்
விழிகளோடு
விடை காணாமலே...
மடிந்து போகும்!

ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13.



தாஜ்மஹாலின்
மகுடம்
என்
காதலி(யி)ன்மௌனம்!
oo

அந்த நிலவு
வராதிருந்தால்.....
இந்த வானம்
இமைப்பொழுது கூட
சிரித்திடாது....!
ஷஹிர்ஷா தாஷிம்-தர்கா நகர்.

## கண்டு பிடித்த பத்துப்பேர்

'மகாசூலம்' தொடர்கதையை எழுதும் எழுத்தாளர் பெயரை மிகச் சரியாக ஊகித்தவர்களில் அதிஷ்டசாலிகளான பத்துப் பேர் இவர்கள்தான்.

01. கே. ஷாம்நாத், கொழும்பு-06.
02. ஏ. ரதீஸ்வரன், கனடா.
03. எம்.என். ஹனீபா, மட்டக்களப்பு.
04. வி. உதயப்பிரகாஷ், கிளிநொச்சி.
05. அ. ரொனால்ட், நீர்கொழும்பு.
06. ஜெ. ஈஸ்வரி, கொழும்பு-05.
07. ஏ.பாத்திமா நஸீர் , புத்தளம்.
08. வை. அஹமட், கல்முனை.
09. என். நளாயினிதேவி, நுவரெலியா.
10. சா. முபாரக், தெகிவளை.



## இந்த வாரம் உங்கள் பலன்

(21.05.95 முதல் 27.05.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

இடபம் - சூரியன், புதன்
சிம்மம் - செவ்வாய்
துலாம் - இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
மேடம் - வெள்ளி, கேது

சந்திரன்– கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், கடன்தொல்லை. | காலை 8 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- | வீண் பிரயாசம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| சனி- | தொழில் மாற்றம், முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், காரியத்தடை. | காலை 8 மணி |
| புதன்- | புதிய முயற்சி, மனப்பயம் நீங்கும். | காலை 9 மணி |
| வியாழன்- | தொழில் சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | காரியத்தடை, மனப்பயம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் பகை, மனக்கசப்பு. | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | பொருள் இலாபம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப்பயணம், குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, கௌரவம். | காலை 8 மணி |
| சனி- | உயர்ந்த நட்பு, கௌரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பணச்செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | கௌரவக் குறைவு, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- | முயற்சி தடை, பணவிரயம். | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் கலகம், மனப்பயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், காரியத்தடை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | முன்னேற்றம், உறவினர் பகை. | காலை 8 மணி |
| புதன்- | தொழில்நிலை மந்தம், மனப் போராட்டம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | தொழில் விருத்தி, பணச்செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, மனக்கலக்கம். | பகல் 2 மணி |
| புதன்- | வீண்குறை கேட்டல், பணத்தடை. | காலை 7 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | தொழில்கேடு, மனச்சஞ்சலம். | பகல் 12 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, உயர்ச்சி நிலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, மனச்சஞ்சலம். | பி.ப. 2 மணி |
| புதன்- | வீண்மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பணச்செலவு. | காலை 8 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு,முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணச்செலவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, வரவுக்கு மிஞ்சிய செலவு. | காலை 6 மணி |
| புதன்- | வீண்குறைகேட்டல், கௌரவக்குறைவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| வெள்ளி- | செய்தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, காரியசித்தி. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் கேடு, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் வாக்குவாதம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், கௌரவக்குறைவு. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, காரியசித்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -9

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணச்செலவு, கஷ்டநிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, வாக்குக்கலகம். | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தொழில் பிரச்சனை, மனப்பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |
| சனி- | பயனற்ற செயல், மனக்கலக்கம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-8

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நன்மை, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணத்தடை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியத்தடை, மனக்கலக்கம். | காலை 8 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியசித்தி, உறவினர் பகை. | காலை 7 மணி |
| வெள்ளி- | இல்லச் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4



தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.

-சுப்பிரமணிய பாரதியார்.



### ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியர்

காட்டினில் ஓரிடம் சிங்கமொன்று
கனிவாய்ப்படுத்து உறங்கியதாம்
மேட்டு நிலமென எண்ணியதால்
மேலொரு எலி விளையாடியதாம்

கோபம் கொண்ட சிங்கமது
குதித்து எலியைப் பிடித்ததுவாம்
தூக்கம் கலைத்து விட்டாய் நீ
துடிக்கக் கொல்வேன் என்றதுவாம்

பயந்த எலியும் சிங்கத்திடம்
பணிவாய்ப் பலமுறைக் கெஞ்சியதாம்
தயவாய்க் கேட்டேன் கொல்லாதீர்
தருணத்தில் உதவுவேன் என்றதுவாம்

சிறிதாய் இருக்கும் உன்னாலே
பெரிதாய் உதவ முடியாதே!
தரித்து நில்லாமல் ஓடு என
சிங்கம் எலியை விட்டதுவாம்

வேடன் வைத்த வலையினிலே
சிங்கம் ஓர்நாள் சிக்கியதாம்
காடே அதிரக்கத்தியதால்
கணப் பொழுதினில் எலி வந்ததுவாம்

வலையை அறுத்து சிங்கத்தை
வடிவாய்த் தப்ப வைத்ததுவாம்
சிறியோர் என்று இகழாதீர்
அவரும் ஓர்நாள் உதவிடுவர்

- பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

## பாப்பா முரசு சிறு கதை

# ஆறு கேள்விகள்

குலோத்துங்க மன்னனுக்கு அறிவாளிகளைப் போற்றி பரிசு அளிப்பதில் பெருமகிழ்ச்சி. பொது மக்களின் அறிவைச் சோதிக்கும் அளவு நிறையப் போட்டிகளை அறிவித்து அப்போட்டியில் வென்றவர் களுக்கு நிறைய பரிசளித்து வந்தார்.

ஒரு முறை அவர் நாட்டு நிலைமைகளை அறிய விரும்பி, மாறுவேடம் அணிந்து புறப்பட்டார். அவர் போகும்போது, ஒரு பாழடைந்த மண்டபத்தில் சிலர் தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவனைப் பார்த்து, "நீங்கள் 'யாரப்பா? எதற்காக இங்கே தங்கியிருக்கிறீர்கள்?" என விசாரித்தார்.

அதற்கு அவன், மாறுவேடம் பூண்டு வந்திருப்பவர் யாரெனத் தெரிந்து கொள்ளாமல் தன்னுடன் இருந்த அனைவரையும் அறிமுகப்படுத்தினான்.

"ஐயா! இவன் சாப்பாட்டைக் கேட்கத் தெரியாதவன். யாரிடமும் வம்பு பேச மாட்டான்."

"இவனிடம் மனிதன் எதை அடைய முடியாதோ அது இல்லை."

"இவன் இருபத்துநான்கு மணி நேரமும் நிம்மதியாக இருப்பவன்."

"இவன் கண் மூடித் திறப்பதற்குள் கடந்து போனதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பவன்."

"இவன் நிலையில்லாத தன் மீது இச்சை கொண்டவன். எப்போதும் தன்னை அழகுபடுத்திக்கொண்டே இருப்பான்."

"நாங்கள் அறுவரும் நிழலுக்காக இங்கே தங்கி இருக்கின்றோம்." என்றான்.

அரசனுக்கு அவன் சொன்ன வேதாந்தம் புரியவில்லை. சரி அரண்மனைக்குப் போய் மந்திரியிடம் கேட்கலாம் என்று நினைத்துச் சென்று விட்டார்.

மறுநாள் அரசன் அரண் மனையில் சபையினரிடம் இதை அறிவித்து, "அவர்கள் சொன்ன தற்கான பொருள் உங்களுள் யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள். தெரியாவிட்டால் பொது மக்களுக்கு அறிவியுங்கள். சரியான பதில் சொல்லு பவர்களுக்கு ஆயிரம் பொற் காசுகள் பரிசளிக்கிறேன்." என்றார்.

அரசனின் கட்டளைப்படி தண்டோரா போடப்பட்டது. ஆனால் மூன்று நாட்களாகியும் அரசரின் சந்தேகத்தைப் போக்க யாருமேமுன் வரவில்லை.

நான்காவது நாள்...

"அரசே! உங்களுடைய சந்தேகத்தைப் போக்க ஆறுபேர் வந்திருக்கிறார்கள். பார்ப்பதற்குப் பிச்சைக்காரர்கள் போல் தோற்றமளிக்கிறார்கள். உள்ளே அனுப்பவா?" எனக் காவலாளி கேட்டான்.

உடனே அரசர், "அவர்களை வரச் சொல்லுங்கள்," என்றார்

அரசரின் ஆணைப்படி அந்த ஆறுபேரும் உள்ளே அழைத்து வரப்பட்டார்கள். அரசருக்கு அவர்களைப் பார்த்ததும் தாம் பாழடைந்த மண்டபத்தில் பார்த்த அதேஆறுபேர் தான் என்று புரிந்துவிட்டது.

அவர்களுக்கு அரசரை அடையாளம் தெரியவில்லை.

அவர்களைப் பார்த்து அரசர், "என்ன விஷயமாக என்னைப் பர்ர்க்க வந்தீர்கள்?" என்று கேட்டார்.

"அரசே! நாங்கள் உங்களுடைய கேள்விக்கான விடைகளைச் சொல்லி பரிசுகளைப் பெற்றுப்போக வந்தோம்," என்றனர்.

"சொல்லுங்கள்", என்றார் அரசர்.

அரசவையில் உள்ள அனைவரும் அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அரசவை ஊழியன் ஒருவன் கேள்விகளைப் படிக்க அவர்கள் அதற்குப் பதில் சொல்ல ஆரம் பித்தார்கள்.



"முதல் கேள்விக்குப் பதில் ; சாப்பாட்டைக் கேட்கத் தெரியாதவன், யாரிடமும் வம்புக்குப் போகாதவன் ஊமை"

அடுத்த கேள்விக்கு பதில்; முட்டாள். எளிதில் அடைய முடியாதது அறிவு. அது இல்லாதவன் முட்டாள் தானே?"

"இருபத்தி நான்கு மணி நேரமும் நிம்மதியாக இருப்பவன் தூங்குமூஞ்சி. தூக்கம் நிம்மதி தானே."

"கண்மூடித் திறப்பதற்குள் கடந்து போவது காலம். அதுதான் கடந்த காலம். அது பற்றிப் பேசுவது வீண்."

"நிலையில்லாதது அழகு. அழகு இல்லாதவன் எப்போதும் தன்னை அழகுபடுத்திக் கொண்டே இருப்பான்."


"இதுவே உங்கள் கேள்விக்கு பதில். அதற்கு உதாரண மானவர்கள் என்னுடன் இருக்கும் ஐந்து பேரும்,"

என்று சொல்லி முடித்தான்.

அரசர் உடனே இந்தச் சின்ன விஷயம் என் புத்திக்கு எட்ட வில்லையே என வெட்கப்பட்டு, ஆயிரம் பொற்காசுகளை அவர்களுக்கு வழங்கினார்.

அவர்கள் அரசரிடம் பொற் காசுகளைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றார்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.05.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 91
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 88

பரிசுக்குரியவர்:
எம்.எச்.எம் ஹாபிலீன்
பு/சாஹிரா தேசிய கல்லூரி புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்

ஜெ. செ. முத்துச் செல்வி
பு/உடப்பு.த.ம.வி.-உடப்பு.

எஸ். சுசிலியா
கிருலப்பனை, கொழும்பு-05.

கீர்த்தனா பெர்னான்டேர்
புனித/சவேரியார்/பெண்கள் மத்திய மகா வித்தியாலயம்-மன்னார்.

ச. சுதன் பிரசாத்
பு/சில்வேஸ்டர் கல்லூரி -கண்டி.

செல்வன். ச. சக்திராஜ்
ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி-திருமலை.

டி. சதீஷ்குமார்
கெனல் வீதி, வட்டக்களி, சிலாபம்..

## அறிவோம் மனதில் பதிவோம்



ஆபிரிக்காவில் காணப்படும் 'ஒகபி' என்னும் விலங்கு ஒட்டகச்சிவிங்கி போல் இருக்கும். இதன் நாக்கு மிக நீளமாக இருக்கும். இது தன் நாக்கை வைத்தே தனது காதுகளைச் சுத்தம் செய்து கொள்ளும்

எகிப்தில் கி. மு. 3000 ஆண்டிலிருந்தும் சீனாவில் கி. மு. 4000 ஆண்டிலிருந்தும் கடிதப் போக்குவரத்து இருந்துள்ளது.



★★★

கிழக்கு அவுஸ்திரேலியாவில் காணப்படும் 'விப்பர்ட்' என்ற பறவை கத்தினால் சவுக்கால் அடிப்பது போன்ற சத்தம் வரும்.



★★★

## வாரம் ஒரு நாடு

### பல்கேரியா

**அமைவிடம்:** கிழக்கு ஐரோப்பாவில் வடக்கே ருமேனியா, மேற்கே யூகோஸ்லாவியா, தெற்கே கிரேக்கம் மற்றும் கிழக்கே கருங்கடலை எல்லை களாகக் கொண்ட நாடு பல்கேரியா.

**பரப்பளவு:** 110,000 சதுர கிலோ மீற்றர் (42, 825 சதுர மைல்)

**மக்கள் தொகை:** 9037,000

**தலைநகரம்:** சோஃபியா (மக்கள் தொகை: 1,200,000)

**ஆட்சிமுறை:** 1944 செப்டம்பர் 9ல் இந்து சோஷலிசக்குடியரசானது.

**பேசும் மொழி:** பல்கேரியன், ரஷியன், ஆங்கிலம், ஜேர்மன் மற்றும் ஃபிரெஞ்ச் மொழிகள் பேசப்படுகின்றன.

**மதம்:** பெரும்பாலானோர் பல்கேரிய பூர்வீக மதக் கோட்பாடுகளைக் கடைப் பிடிக்கின்றனர். இஸ்லாமும் கிறிஸ்த வமும் கூட மிகக் குறைந்த மக்களின் மதங்களாக உள்ளன.

**விளைபொருட்கள்:** கோதுமை, பார்ளி, சோளம், ரை, உருளைக்கிழங்கு, இனிப்பு பீற்ரூட், புகையிலை மற்றும் ஒட்ஸ் ஆகியவை.
இரும்புத்தாது, காரீயம், செம்பு,நிலக்கரி மற்றும் துத்தநாகம் போன்ற கனிப்பொருட்களும்கிடைக்கின்றன.

**தேசிய தினம்:** செப்ரம்பர் 9, 10.

**சிறப்பம்சங்கள்:** டன்யூப் நதியும் கருங்கடலும் இந்நாட்டை வளம் கொழிக்கும் நாடாக்கியுள்ளன.
இங்குள்ள பள்ளத்தாக்குகளில் அதிக மான பரப்பளவில் ரோஜா மலர்த் தோட்டங்கள் உள்ளன. இவற்றிலிருந்து பெறப்படும் ரோஜா எண்ணை வெளி நாட்டு செலாவணியை ஈட்டித்தருகிறது. உலகில் 90 சதவிகிதமான ராஜா எண்ணை இங்குதான் உற்பத்தி செய்யப்படுகிறது.



**பார்க்க வேண்டியவை:** இந்நாட்டின் தலைநகரமான சோஃபியா 5000 ஆண்டு பழமை வாய்ந்தது. பண்டைக் காலத்தில் இயங்கி வந்த நூற்றுக்கும் அதிகமான சந்நியாசி மடங்கள் பலவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கதைகளைக் கூறுகின்றன. பண்டைய நகரங்கள் பல-அக்காலத்திலிருந்த அதே அமைப் புக்களிலிருந்து சிறிதளவும் மாற்ற மடையாமல் பேணப்பட்டு வருகின்றன.

கருங்கடற் கரையோரங்கள் பிறநாட்ட வர்களைக் கவர்ந்திழுக்கும் அனேக அமைப்புக்களைக் கொண்டுள்ளன. பல மைல்கள் தூரம் வண்ணமலர்களைக் கொண்டு குலுங்கும் ரோஜா தோட்டங்கள் பார்ப்போரைப் பரவசப் படுத்தும். சோஃபியா நகரை ஐரோப்பாவின் பசுமை நகரம் என்று வர்ணிக்கிறார்கள். எப்போதும் பசுமைப் போர்வை போர்த்து-வண்ணமலர்கள் இறைத்துக் கிடக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

பல்கேரியாவில் 500க்கும் அதிகமான இயற்கை நீரூற்றுக்கள் உள்ளன. இவற்றுள் சந்தன்ஸ்கி என்ற இடத்தில் காணப்படும் ஊற்றுக்கள் ஆஸ்த்மா போன்ற நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றதாக கருதப்படுகின்றன. ஏனைய நீரூற்றுக்களும் பலதரப்பட்ட நோய்களை தீர்த்து வைக்கும் மருத்து வகுணம் கொண்டவை என்று கூறப்படுகிறது.

பனியுறை காலங்களில் இங்குள்ள நீர்நிலைகள் பனிச்சறுக்கு விளையாட்டுக் களுக்கு ஏற்றவையாக மாறி விடுகின் றன. இன்று இவ்விளையாட்டுக்கு சர்வதேச ஸ்தானத்தை பல்கேரியா பெற்றுள்ளது.

## உலகக் குடிமகனின் பெருவாழ்வு

(தங்கியுள்ள காரணிகள்)

அன்பில் - நெகிழ்வு
அறிவில் - தெளிவு
ஆக்கத்தில் - ஊக்கம்
வாழ்வில் - எளிமை
உண்மையில்- உயிர்ப்பு
உழைப்பில் - ஓய்வின்மை
கொள்கையில் - உறுதி
இயற்கையில் - ஈடுபாடு
துன்பத்தில் - துணை நிலை
புலமையில் - ஆழம்
ஆராய்ச்சியில் - நடுநிலைமை
பதவியில் - பகட்டு இன்மை
புரட்சியில் - முதன்மை
பண்பில் - சால்பு
அறத்தில் - நம்பிக்கை
புகழில் - மங்கா நிலை
செல்வத்தில் - செருக்கின்மை
விளம்பரத்தில் - விருப்பின்மை
தமிழில் - நெஞ்சம்

தொகுப்பு: க. நிமலதாசன்
மட்/மாங்காடு,த.வி.செட்டிபாளையம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

கோகுலின் அலறல் கேட்டு இல்லத்துக்குள்ளிருந்தவர்கள் அத்தனைபேரும் ஓடிவந்தார்கள். இருதினங்களாக இல்லத்துக்குப் போகாமல் சுமதியைப் பற்றியே புலம்பிக் கொண்டிருந்த தாயும் தந்தையும் இப்போது மகள் திரும்பிவிட்டாள் என்கிற உணர்வோடும், மகிழ்ச்சியோடும் ஓடோடி வந்தார்கள்.

வந்த பிறகு தான் அவர்களும் அலறினார்கள்.

ஒரு துளி இரத்தச் சேதமோ காயமோ இல்லை. மகள் செத்துப் போயிருந்தாள். அவளது கைகள் அப்போதும் வாயையும் மூக்கையும் மூடியிருந்தன. ஏதோ ஆபத்து!

சுற்றியிருந்த புடவையை மெல்ல மெல்ல விலக்கினாள் சுமதியின் அம்மா. அவளும் பெண்தானே?

ஒரு பெண்ணுக்குப் பெண் தான் இதுமாதிரி ஆபத்துக்களையே இனம் கண்டுகொள்ளமுடியும் போலும்!

அவள் ஓசையிட்டு அழுதாள்; "என் மகளைக் கொண்டு போய் ஒளிச்சு வச்சிருந்தவங்க அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கிட்டாங்களே! பாவம் கொழந்தை! புதைதைக்கப் போராடியிருக்கா! முடியலேன்னதும் மூச்சைப் புடிச்சுட்டுச் செத்துப் போயிருக்கா!"

"கொண்டு போய் ஒளிச்சு வச்சிருந்தது அந்தப் பிசாசு பத்ராதான்னு நம்பூதிரி சொன்னாரே! அதெப்படி..... பொண்ணுக்குப் பொண்ணே? என்னடி சொல்றே?" என்றார் சுமதியின் அப்பா ஒன்றும் விளங்காமல். பவுர்ணமிக்கு பத்ராவை ஆவாதிக்கும்போது எந்த விக்கினமும் இல்லாமல் சுமதி திரும்பி வருவாள் என்கிற நம்பிக்கையோடு இருந்தவர்கள் அவரும் மனைவியும்!

ஏன், இல்லத்தில் அத்தனை பேரும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால்....?

கோகுல் தலை தலையாகப் போட்டுக்கொண்டான்!

□□

இவனைக் கொன்று தின்று பசியாற நினைத்தவள் பத்ரா! பலிக்கவில்லை; அதனால் இவன் தாலி கட்டிய மனைவியைப் பழி வாங்கியிருக்கிறாள் என்று தான் அவன் நினைத்தான்! நினைத்துக் கொண்டுமிருந்தான்! இப்போது அவன் மாமியாரின் அலறலில், இது வேறு ஏதோ ஒரு வகையாகப் பழிதீர்க்கப் பட்டிருப்பது புரிந்தது!

குழம்பினான்.

□□

இதற்குள்-தகவல் கிராமத்துக்குப் போய் விட்டது!

சுமதியின் சாவு இயல்பாக நடக்கவில்லை என்பதால் அந்த ஆத்மா கதி கிடைக்காமல் அலையலாம்! எனவே உடனுக்குடன் பிணத்தை எரித்து அதற்கான ஈமக்கிரியைகளைப் பரபரப்பாக முடித்தாக வேண்டும் என்று பெரியவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அதிக நேரம் போட்டுவைக்க முடியாது!

பாலேக்கல் இல்லத்தை ஏதோ ஒரு சாபம் வளைத்துக்கொண்டிருக்கிறது... அது தான் பாச்சுவை முதல் நாளும், சுமதியை மறுநாளும் இப்படிக் கொன்று போட்டிருக்கிறது.... என்று சிலர் பொத்தாம் பொதுவில் சொன்னார்கள். "கொன்று போட்டால், பிணம் எப்படி இல்லத்துக்கு பறந்து வரும்?" என்று யாரோ சந்தேகம் கேட்டார்கள்.

"அது பறந்தப்ப நான் பார்த்தேன்! இரண்டு பக்கமும் இறக்கை விரிச்சு ஒரு இராஜாளிப் பறவை பறந்தமாதிரிப் பறந்தது" என்று ஒருவர் சாட்சியம் சொன்னார்.

"பறந்தது இருக்கட்டும். சொல்லி வச்ச மாதிரி நீலகண்டன் திருமேனி இல்லத்துக்குள்ளே-அதுவும் கோகுல் வாடியிலேயே போய் விழுந்ததெப்படி?"

"ஆமா-எப்படி?"

"அது தாண்டா-இதுக்கு உள்ளே இருக்கிற சூட்சமம்! எவனோ நீலகண்டனுக்கு எதிரியா ஒருத்தன் இருக்கான். அவன் நீலகண்டன் குடும்பத்தோட வஞ்சம் வச்சுட்டு இப்படி எல்லாம் செஞ்சு நீலகண்டனைக் கோபப் படுத்தறான்....."

"எவனோ ஒருத்தன்னு ஏன் மழுப்பறே? நீலகண்டனுக்கு பவத்ராதன் தான் எதிரி! அவன் பொண்ணை இவன் மகனுக்கு எடுத்துக்காம தோப்புக்கார நம்பூதிரி பொண்ணை எடுத்ததிலே கோபம். அதான் ஒவ்வொருத்தரையா முடிச்சிட்டிருக்கான்!"

ஜனங்களின் பேச்சு, பத்ராவையே மறந்துவிட்டு பவத்ராதன் திருமேனி மீது திசைமாறியது! ஒவ்வொருத்தருக்கும் நீலகண்டன் மீது அனுதாப அலை!

"என்ன இருந்தாலும் நீயும் மாந்த்ரீகன்; நானும் மாந்த்ரீகன்! நம்ம ரெண்டு பேருக்குள்ளே என்னத்துக்குப் போட்டி?" என்று ஒருவர், தம்மையும் எதிரில் நின்றவனையுமே நீலகண்டனும் பவத்ராதனுமாக உருவகித்துக் கொண்டு கத்த ஆரம்பித்தார். அதைப் புரிந்துகொள்ளாத மற்றவர்-

"யோவ்-நான் மாந்த்ரீகன் இல்லய்யா! மளிகைக் கடைக்காரன்!"

"அட, ஒரு பேச்சுக்குக் கேக்கறேன்! ஒரே தொழில் செய்யற ரெண்டு பேர், ஒருத்தருக்கு ஒருத்தர் அடிச்சுகிட்டா அதுக்கு என்ன பொருள்?" வேறொருவர் அவர்களின் குறுக்கே வந்து அடக்கினார்:

"வெவரங்கெட்டதனமா இதென்ன சண்டை திடீர்னு?"

"இல்லீங்க....வந்து...."

"இதுக்குள்ளே ரெண்டு பேருமே ஒண்ணுமில்லப்பா! மூணாவதா ஒரு பிசாசு தான் வந்து மூட்டி விட்டிருக்கு சண்டையை! செத்துப்போன பாச்சு தான் முந்தாநாள் இராத்திரி என்கிட்டே சொன்னான்...அது ஒரு பைஸாஸ சக்தியோட வேலை! அது சாதாரணப் பைஸாஸம் இல்லே....யக்ஷி!"

"யக்ஷியா?" மிரண்டார் கேட்டவர்.

"ஆமா யக்ஷி!"

"கந்தர்வன் காட்டுக்கு வருமே.....அந்த யக்ஷியா?" கேள்வியில் மறுபடியும் பீதி.

"அட, அது எல்லாம் இதுக்கு முன்னாலே யக்ஷியே இல்லே! வெறும் பட்சி! ஆனா இது இராஜாளி மாதிரி! ஒவ்வொரு கால் நகத்தாலேயும் நம்மை மாதிரி நாலுபேரைத் தூக்கிட்டுப் பறக்கிற மகாராஜாளி!" அவர் உருவகித்துக் காட்டியதுமே... அதேபோல் ஒரு பறவை வானிலிருந்து சிறகு விரித்தபடி வருவதைப் போல் ஓர் உணர்வு! கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கண்கள் அவ்வளவும் மிரண்டு போயின! திடீரென்று அந்த அரசரடி மண்டபம் இப்படியும் அப்படியும் அசைவதைப் போலிருந்தது! அடுத்தகணம்-

அவர்களின் நடுவே அமர்ந்து அவர்களின் பேச்சு மொத்தத்தையும் கேட்டுக் கொண்டிருந்த ஓர் இளைஞன் மண்டபத்திலிருந்து மர இடுக்குகளின் இடையே புகுந்து ஆகாசத்திற்கு உயர்ந்து அப்படியே மாயமானான்!

இதை நேருக்கு நேர் கண்டவர்களின் நெஞ்சுக்குழி கொஞ்ச நேரம் அடிக்க மறந்தது! அப்படியப்படியே பேச்சு மூச்சற்றுப் போய் அமர்ந்திருந்தார்கள்! பத்ராவின் பழிகார வெறி, ஆண்குலத்தின் மீது ஆரம்பம் ஆகி விட்டதென்று அப்போது அந்தக் கிராமத்தில் பலருக்கும் தெரியாது!

□□

'அது மனித குலத்தையே அழித்துச் சாம்பலாக்கும்; ஆண் வர்க்கத்தைப் பூண்டறுத்துப்போடும்!' என்றெல்லாம் உணர்ந்ததால்தான் பவத்ராதன் திருமேனி மூன்று நாட்களில் அக்கினி பர்வதத்தின் முகட்டின் மீது குஞ்சனோடு நடந்து கொண்டிருந்தார். குதிரை வண்டியை மலையின் அடிவாரத்தில் நிறுத்தி விட்டு வந்திருந்த அவர்கள் அது எறும்பை விடச் சிறியதாய் - ஒரு சிறு புள்ளியாய்த் தெரிந்ததைக் கூர்ந்து பார்க்க முடியவில்லை!

அப்படியே ஆனாலும் அதை வேடிக்கை பார்க்கிற நேரமா? குகையைத் தேட வேண்டும். அங்குள்ள சிலையைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்புறம் அதன்முன் நிற்கிற மகாசூலத்தை எடுக்க வேண்டும்!

பவத்ராதனின் மொத்தக்கவனமும் அப்போது இந்த ஒரு இலட்சியத்திலேயே இருந்தது! இரத்தத் துடிப்பு இருப்பதாகச் சொன்ன குஞ்சன் நாக்கு உலர....கால்கள் தளர...துவண்டு தொங்கிப் போனான். திருமேனி எப்போதும்போல்.....அதே புன்னகை..! அதே நடை...!

□□

நீலகண்டன் திருமேனிக்கு வழிதவறி விட்டது! இப்போது மட்டுமில்லை புறப்படும்போதே இப்படி ஒவ்வொரு தவறுகள்-! ஒவ்வொரு இடையூறுகள்! ஒவ்வொரு அசுத்தங்கள்! அவர் புறப்பட்டுப் பாதிவழி வருவதற்குள் மூன்று நாட்கள் முடிந்து விட்டன.

"திருமேனி எதுக்குத் திருப்பித் திருப்பி வண்டியை இதே வழியிலே ஓட்டிட்டு வர்ரீங்க? எங்கே போகணும் நீங்க?"

விறகுச் சுமையோடு வந்த ஒருவர் மூன்றாவது முறையாகவும் அதே குதிரை வண்டியைத் தன் எதிரில் கண்ட பரிதாபத்தால் விசாரித்தார்! சுமையை இறக்கிப் போட்டார், நீலகண்டன் திருமேனி!

"அக்கினி மலைக்குப் போகணும்!"

"அதுக்கு இந்த வண்டி பிரயோசனமில்லே! மூணாவது மலைத் திருப்பத்திலே இறங்கினா குறுக்கே ஒரு படிக்கட்டு வரும். அதிலே நீங்க மட்டும் நடந்து போகணும். வண்டியையும் குதிரையையும் கீழேயே விட்டுடணும்."

"மூணாவது மலையா?"

"ஆமா...குதிரைய விரட்டுங்க. எப்படியும் சூரியஸ்தமனத்துக்குள்ளே கொண்டு போய் நிறுத்திடும்! அதுக்கப் புறம்...நீங்க போற வேகத்தைப் பொறுத்துத்தான் அக்கினி மலை!"

திருமேனி ஒரு வழியாகத் தளர்ந்து போய் விட்டார்!

விறகுச் சுமைக்காரன் சொன்னபடி அந்திப்பொழுது மேற்கே சிவந்து கொண்டிருந்தபோது குதிரை அவரைக் கொண்டுபோய் மூன்றாம் மலை அடிவாரத்தில் நிறுத்தியது. அப்புறம்..... அவர் ஏறி மேலே போகப் போக, படிகளும் தெரியவில்லை; வழியும் புரியவில்லை! இருட்டு பூசிக்கொண்டது மலை முழுக்க!

இனி எப்படி நடப்பது? குழம்பிப் போனார். அங்கே தெரிந்த ஒருபாறை மீது ஏறி அமர்ந்தார். பாறையின் சூடு இதமாக இருந்ததால் வீசியடித்த சிலிர்க் காற்றுக்கு லேசாகக் கண்கள் செருக்கிக் கொண்டன. எவ்வளவு நேரம் தூங்கினாரோ..... விழிப்பு வந்தபோது சந்திரன் மலைக்கும் மேலே வந்திருந்தான். புல்லும் புதரும் பாறையும் தாரையும் அந்த வெளிச்சத்தில் பளிச்சிட்டன.

நன்றி கூறி அண்ணாந்து பார்த்தபோது தான்...பவுர்ணமிக்கு இனியும் இரண்டு தினங்கள் இருக்கலாம் என்கிற உணர்வு, மனசைச் சுட்டது.

அப்புறம் அவர் பாறை மீது படுத்துக் கொண்டிருக்க வில்லை!

முதலில் மகாசூலத்தை எடுக்க வேண்டும். புல்லரியும் குன்றுக்கு உடனே புறப்பட்டாக வேண்டும்.

பவுர்ணமி என்பது முப்பது நாழிகையும் தொடரும்! கடைசியில் ஒரே ஒரு நாழிகை இருந்தாலும் பூஜையை ஆரம்பித்து விடவேண்டும். பூஜை துவங்கினால் பத்ராவை ஆவாதிக்கிற கர்மமும் துவக்கம் என்று அர்த்தம்! அதற்கான ஆயத்தம் - அவரது ஓட்டத்திலும் நாட்டத்திலும் தெரிந்தது! ஆனால் குகைக்குள்...?

சிலை மட்டுமே இருந்தது! மகா சூலத்தைக் காணவில்லை!

"கடவுளே...என்ன விளையாட்டு இது தனக்குள்ளாகவே அவர் கேட்டுக் கொண்டிருந்தபோதுதான் அந்தச் சிரிப்பு தன்னருகில் கேட்டதும் திரும்பிப் பார்த்தார்.

ஒருவரையும் காணவில்லை!

"யாரது?" நீலகண்டனின் குரல் குகைக்குள் எதிரொலித்தது.

"நான் தான்!" அப்போது இந்தப் பதில் குகைக்கு வெளியே! எழுந்து பரபரப்பாக வந்தார்.

"யாரது?" கேட்டார்!

கதியற்றவர்களின் ஆத்மா கதிமோட்சம் பெற அக்கினி மலைக்குள் தான் வர வேண்டும் என்கிற ஐதீகம் நீலகண்டனுக்கும் தெரியும். அப்படியானால்...தன்னோடு பேசுகிற பெண் குரலும் கதியற்றுப்போய் வந்த ஒரு ஆத்மாவா?

"யாரது?"

"சப்தமியில் மருமகள்: அஷ்டமியில் மனைவி."

நெற்றிப் பொட்டில் வலித்தது நீலகண்டனுக்கு!

□□

ஏற்றிவைத்த நிலைவிளக்குகளின் முன் பவத்ராதன் திருமேனி பாதிக் கண்களை மூடிக் கொண்டிருந்தார். அவரது உதடு களில் மந்திர மலர்கள்!

ஈரத்துண்டு உடுத்த கோகுல் அவருக்கு அருகில்.

அவர்கள் இருவருக்கும் முன்னால் மகாசூலம்! நட்டுவைக்கப்பட்டிருந்தது!

இந்த ஆறுநாட்களில் பத்ராவின் அக்கிரமம் புல்லரியும் குன்றில் பல இளைஞர்களைப் பலி வாங்கியதால் ஊரே உன்மத்தம் பிடித்த நிலையில்! வீடுகளின் முன்னால் செருப்பும், பழந்துடைப்பமும் தொங்கின. எல்லோர் கதவுகளும் அடைத்தே இருந்தன. தொடர்ந்தார்ப்போல் விடலைப் பருவம் மாறி மீசை முளைக்க ஆரம்பிக்கிற நிலையிலேயே பல இளைஞர்களும் பலியாகியிருந்ததால்-தங்கள் தங்கள் மக்களை வீடுகளுக்குள் கிராமத்தார் சிறை வைத்திருந்தார்கள்.

எல்லோரையும் கிலி பிடித்திருந்தது.

வரும்போது இந்தச் செய்தியைக் கேட்ட பவத்ராதன் இனி அந்தத் துன்பம் உலகத்தை ஆட்டிப் படைக்கக் கூடாது என்பதற்காகத்தான் வீட்டுக்குக் கூடப் போகாமல் நேராக பாலேக்கல் மனைக்கு வந்தார். இருமுறை அவமானப் பட்டது அப்போது அவர் மனசில் இல்லை!

நீலகண்டனும் அங்கே இல்லை. எனவே கோகுலிடம் சுருக்கமாகச் சொன்னார். அவன் ஏற்கெனவே பூஜைக்குரிய பொருட்களை ஆயத்தப்படுத்தி வைத்திருந்ததால்-

வந்ததுமே இல்லக் குளத்தில் நீராடி விட்டுப் பூஜையைத் தொடங்கிவிட்டார் நம்பூதிரி.

அன்று பவுர்ணமி நாள்! அறுபது நாழிகையும் பவுர்ணமிதான்.

சந்திர தரிசனம் மட்டும் முப்பது நாழிகை. இதற்காக அவர் காத்திருக்கவில்லை! இது சன்மாந்த்ரீகம். எனவே பகலும், இரவும் இதன் பலாபலன்கள் ஒன்றுதான். பிரதோஷத்துக்கும் முன்னால் பூஜையை முடித்தாக வேண்டும். இதைக் கணக்குப் பண்ணித்தான் ஈஸ்வரத் தியானமும், உபாசனா மூர்த்திகளுக்கான துதியம் முடித்தார் பவத்ராதன். அப்புறம்?

மந்திரங்களிலிருந்து மந்திரங்கள்!

மந்திரோச்சாடனத்தின் கதிமாற்றங் கள். பத்ராவை ஆவாகிப் பதற்கான கர்மங்கள்...!

இரண்டாம் கட்டத்தை எட்டிய பூஜையும் சுபமாகவே முடிந்தது. அது முடிந்ததுமே மூன்றாம் கட்டம்.

பத்ரா திணற ஆரம்பித்தாள். அவளுடைய வீரியம் குறைய ஆரம்பித்தது! வேறு வழியில்லை! பாலேக்கல் மனைக்கு வந்தாக வேண்டும்! வராமல் அவளால் நிலைக்க முடியாது.

அதன் அறிகுறி தெரிந்தது.

மரக்கிளைகளில் பேயாட்டம் தொடங்கின. சுற்றிலும் காற்று சுழித்தது. ஏற்றிவைத்த தீபத்தின் நாளங்கள் ஆடின! பவத்ராதன் பதறவே இல்லை! நிதானமாக நினைத்த கர்மத்தையே சிந்தையில் நிறுத்தி வைத்துக்கொண்டு மந்திரகதியை மாற்றினார். கோகுலையும் பதறாமலிருக்கும்படி முதலிலேயே அவர் எச்சரித்திருந்தார். ஏதாவது தடங்கல்களைப் பத்ரா செய்யலாம்! அதையும் எச்சரிக்கையோடு நெஞ்சில் நிறுத்தியிருந்தார் அவர்.

இல்லத்தின் மதிற்சுவர் மீது அட்டகாசச் சிரிப்போலி கேட்டது!

பிறகு அதுவே அழுகையாயிற்று.

"நான் வரமாட்டேன்..... வரமாட்டேன்!" ஈனக்குரலில் புலம்பியது வேறு யாருமில்லை! பத்ராவே தான்! சிறிது நேரத்தில் அந்த அழுகையும் அடங்கியது. அடுத்த கணம் ஏதோ ஒண்ணு பூஜை அறைக்குள் வந்து விளக்கின் அருகே விழுந்தது!

காட்டுப் பூக்களின் வாசனை அறையெங்கும் வீசியது!

விழுந்த பொருள் மெல்ல மெல்ல எழுந்தது. பத்ரா புலம்பியபடி நின்றாள்: "திருமேனி! எனக்கு வாழ்க்கை வேணும். யாரையும் தொந்தரவு செய்ய மாட்டேன்! நம்புங்க! நான் இதுவரைக்கும் வாழவேயில்லை! வாழ்க்கையைத் தெரிஞ்சுக்கவும் இல்லே!"

"நீ இரத்தப்பசி எடுத்தவ! உன்னை வாழவைக்க முடியாது! நீ வாழ்ந்தா உலகமே அழிஞ்சுடும்....." சூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டார் பவத்ராதன் திருமேனி.

"இரத்தமே இல்லாத ஒரு ஜென்மமா வாழவாவது என்னை விடுங்க திருமேனி! எத்தனையோ நூற்றாண்டுகளாக கல்லிலே கிடந்தவ....கருணை காட்டுங்க திருமேனி!"

பவத்ராதனுக்கு அந்த நேரத்திலும் தனது நிதானம் மாறாத சுபாவம்....

"நான் எப்போ கூப்பிட்டாலும் கூப்பிடற இடத்துக்கு வருவியா?"

"வருவேன்."

"நம்பறேன்!" சட்டென்று பவத்ராதன் மகாசூலத்தில் அவளை ஆவாகிப்பதற்குப் பதிலாக அந்த மகாசூலத்தையே நீட்டிச் சத்தியம் கேட்டார்! "இதுமேல ஆணையா உன்னாலே வரமுடியும்னு நான் நம்பறேன். இதுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படற மாதிரி தொடு?உனக்கு ஒரு ஜென்மம் வரும்!" - சொன்னார்.

தொட்டாள் பத்ரா. அடுத்த கணம் அவள் அப்படியே ஒரு வௌவால் உருவமானாள். இரத்தமே இல்லாத ஒரு ஜென்மம்!

பவத்ராதன் மறுபடியும் ஒரு பூஜையை நடத்த ஆரம்பித்தார்.

அது மறுநாளும் மறுநாளும் பாலேக்கல் மனையில் தொடர்ந்து கொண்டிருந்தபோது,

நிராசை மட்டுமில்லை; தன்மகன் கோகுலை அந்தப் பிசாசுகொன்று பழிதீர்த்திருக்கும் என்கிற புத்திரசோகமும் நெஞ்சைக் கனப்படுத்த வந்து சேர்ந்தார் நீலகண்டன் திருமேனி.

ஆனால் ஆச்சரியம்.....

பாலேக்கல் மனையில் 'மந்திர முழக்கம் கேட்டது. பூஜை அறையில் பவத்ராதனும் கோகுலும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முன் மகாசூலம்! இல்லத்தின் வாசலில் நின்ற குஞ்சன் தான் எல்லா விவரத்தையும் சொன்னான்.

கேட்க கேட்க பவத்ராதனின் மீதிருந்த பகைமையும் கோபமும் விலகி....ஆபத்து நேரத்தில் உதவிய ஒரு நண்பனைப் பார்க்கிற கனிவோடு நின்றார். நன்றிப் பூக்கள் கண்களில் வடிந்தது நீலகண்டனுக்கு.

இனி அவர் மேலிடம் மனைவாசலுக்கும் ஒருநாள் போகலாம்!

ஸ்ரீலதாவைக் கோகுலுக்கு மனைவியாக ஏற்றுக்கொள்ளலாம்.

பாலேக்கல் வாரிசை பத்ரா என்கிற பேயிடமிருந்து காப்பாற்றிக் கொடுத்த பவத்ராதனுக்கு நீலகண்டன் உயிருள்ள வரை கடன்பட்டிருக்க வேண்டும்- இல்லையா?

அப்போதும் பவத்ரான் பூஜையிலேயே மூழ்கியிருந்தார்.

(முற்றும்)

21



# ம கா சூ ல ம்

இருகூரான்

அ ர ங் க ம்

பெயர்: ரி.குமார்
வயது: 23
முகவரி: 143. Lance lot Road. Wembley. Middx, Had Zaz. U.K.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: ஜீ.ராஜா
வயது: 18
முகவரி: சென் ஜேம்ஸ் மத்திய பிரிவு. ஹாலி-எல போஸ்ட்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை,

பெயர்: கே. நகுலானந்தன்
வயது: 18
முகவரி: 81/5, ஸ்ரீ குணானந்த மாவத்தை, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், சித்திரம்வரைதல்.

பெயர்: எம்.நஜிமுதீன்
வயது: 23
முகவரி: P.O.Box 5040, Dammam.31422, Saudi Arabiya.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, ஓவியம் வரைதல்.

பெயர்: எம். பர்சான்
வயது: 18
முகவரி: 32, நிகவொல்ல, யடவத்த, மாத்தளை.
பொழுது போக்கு: கிரிகெட், பத்திரிகை, புத்தகம்.

பெயர்: எம். பரிஸ்
வயது: 19
முகவரி: இக்பால் வீதி, தி/மூதூர்-07.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகைகள், வானொலி.

பெயர்: எஸ் சதீஸ்
வயது: 19
முகவரி: பிரதான வீதி, கரவெட்டி மட்டக்களப்பு.
பொ.போ: வழமையானவை.

பெயர்: ஜி முரளிதாஸன்
வயது: 20
முகவரி: சோலண்ட்ஸ் தோட்டம், லுணுகலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி,

பெயர்: எம்.சாந்தகுமார்
வயது: 24
முகவரி: 3 வெலகெதர வீதி, குருநாகல்.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம்.ஜிப்ரி
வயது: 17
முகவரி: 231, ஹனீபா வீதி, கல்முனை-05.
பொழுதுபோக்கு: கதை, கவிதை வாசித்தல், நண்பர் தொடர்பு

பெயர்: பி.அஸ்வர்
வயது: 18
முகவரி: பஸார் வீதி, சிலாபம்.
பொ.போ: பத்திரிகை ,வானொலி, தொலைக்காட்சி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

25

மறுநாள் பெலகேயா தொழிற்சாலை வாசலுக்கு வந்து சேர்ந்த பொழுது, அவளை அங்கு நின்ற காவலாளிகள் வழிமறித்தார்கள். அவளது கூடைகளைச் சோதனையிட்டுப் பார்ப்பதற்காக அவற்றை இறக்கிவைக்கச் சொன்னார்கள்.

"ஐயையோ! எல்லாம் ஆறிப்போய் விடுமே!" என்று அமைதியாக ஆட்சேபித்தாள் தாய். அவர்களோ அவளது ஆடையணிகளை முரட்டுத்தனமாகத் தடவிச் சோதித்தார்கள்.

"வாயை மூடு" என்று கடுகடுப்பாய்ச் சத்தமிட்டான் ஒரு காவலாளி.

"நான் சொல்வதைக் கேள். அவர்கள் அதை வேலிக்கு வெளியே இருந்து உள்ளே எறிந்து விடுகிறார்கள், அப்பா!" என்று அவளைத் தோளைப்பிடித்து லேசாகத் தள்ளிவிட்டுச் சொன்னான் இன்னொரு காவலாளி.

அவள் உள்ளே சென்றவுடன் முதன்முதல் அவள்முன் எதிர்ப்பட்டவன், அந்தக் கிழவன் சிஸோவ்தான்.

"அம்மா, நீ கேள்விப் பட்டாயா?" என்று அமைதியாக, சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே கேட்டான் அவன்.

"என்னது?"

"அதுதான் அந்தப் பிரசுரங்கள்! அவை பழையபடியும் தலை காட்டிவிட்டன. நீ ரொட்டியிலே உப்புத் தூவியிருக்கின்றாயே, அதுமாதிரி அந்தப் பிரசுரங்கள் எங்கே பார்த்தாலும் பரவியிருக்கின்றன. அவர்கள் சோதனை போட்டதிலும், கைது செய்ததிலும் குறைச்சலில்லை. என் மருமகன் மாசினைக் கூட அவர்கள் சிறைக்குள்ளே தள்ளிவிட்டார்கள். எதற்காக? உன் மகனைக் கூடத்தான் உள்ளே தள்ளினார்கள். ஆனால் என்ன ஆயிற்று? இந்தப் பிரசுரங்களுக்கு இவர்கள் காரணமில்லை என்பது இப்போது எல்லோருக்குமே தெரிந்து போயிற்று."

அவன் தன் தாடியைக் கையில் அள்ளிப் பிடித்துக்கொண்டு அவளைப் புதிர் நிறைந்த கண்களோடு பார்த்தான்.

"நீ ஏன் என் வீட்டுக்கு வரக்கூடாது? தன்னந்தனியே இருப்பது உனக்கும் சங்கடமாகத் தானிருக்கும்...."

அவள் அவனுக்கு நன்றி கூறினாள். உணவுப் பண்டகளின் பெர்களைச் சொல்லிக் கொண்டே, வழக்கத்திற்கு மாறான ஒரு உற்சாகம் தொழிற்சாலையில் நிலவுவதைக் கூர்ந்து கவனித்தாள். தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாகவும் தனித் தனியாகவும் வந்தார்கள். ஒரு தொழிற்கூட்டத்திலிருந்து இன்னொன்றுக்கு ஓடினார்கள்.

கரிப்புகை படிந்த அந்தச் சூழ்நிலையில், ஏதோ ஒரு தைரியமும், துணிவும் நிரம்பிப் பிரதிபலிப்பதாக அவளுக்குத் தோன்றியது. இங்குமங்கும் எண்ணற்ற பேச்சுக் குரல்கள் கேட்டன. கிண்டலான பேச்சுக்களும், உற்சாகம் ஊட்டும் பேச்சுக்களும் ஒலித்தன. வயதாகிப்போன தொழிலாளர்கள் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்கள். கவலை தாங்கிய முகங்களோடு முதலாளிகள் அவர்களைக் கடந்து சென்றார்கள். பொலிஸ்காரர்கள் அங்கு மிங்கும் ஓடினார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் கூட்டமாக நிற்கும் தொழிலாளர்கள் மெதுவாகக் கலைந்து பிரிந்தார்கள்; அல்லது பேச்சு மூச்சற்றுக் கம்மென்று நின்றார்கள்; அப்படி நின்றுகொண்டே, எரிச்சலும் கோபமும் மூண்டு பொங்கும் அந்தப் பொலிஸ்காரர்களின் முகங்களை வெறித்துப் பார்த்தார்கள்.

எல்லாத் தொழிலாளர்களும் அப்போதுதான் குளித்து முழுகிவந்தது போலத் தோன்றினார்கள். கூஸெவ் சகோதரர்களில் மூத்தவன் விரைவாக நடந்து சென்றான்; அவனது தம்பி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே அவன்கூட ஓடினான்.

தச்சுப் பட்டறையின் கங்காணியான வவீலவ், ஆஜர்ச்சிட்டைக் குமாஸ்தாவான இசாய் முதலியோரும் தாயைக் கடந்து சென்றார்கள். குள்ளமான அந்த நோஞ்சான் குமாஸ்தா தன் தலையைத் திருப்பிச் சுற்றும்முற்றும் பார்த்தான்; பிறகு அந்தக் கங்காணியின் சுருங்கிப்போன முகத்தை ஏறிட்டுப் பார்த்தவாறு, தனது தாடியைத் துடைத்துக்கொண்டே சளசளத்துப் பேச ஆரம்பித்தான்.

"அவர்களுக்கு இது சிரிப்பாயிருக்கிறது. இவான் இவானவிச், இதைக் கண்டு கேலி செய்கிறார்கள்! ஆனால் நம்முடைய மனேஜர் சொன்னமாதிரி இது சர்க்காரையே (அரசாங்கத்தையே) அழிக்க முயலும் காாரியம்தான். இங்கே செய்ய வேண்டியது களைபிடுங்குவதல்ல; ஆனால் உழுது தள்ள வேண்டியதுதான்...."

வவீலவ் தனது கரங்கள் இரண்டையும் பிடரியில் கொடுத்துப் பிடித்துக் கொண்டவாறு நடந்தான்.

"ஏ நாய்க்குப் பிறந்தவனே! நீ போய் என்னவேண்டுமானாலும் அச்சடித்துத் தள்ளு!" என்று உரத்த குரலில் சத்தமிட்டான். "ஆனால், என்னைப் பற்றி மாத்திரம் துணிந்து எதுவும் சொல்லி விடாதே. ஆமாம்!"

வசீலி கூஸெவ் தாயிடம் வந்து சேர்ந்தான்.

"நான் இன்றைக்கு இரண்டாம் தடவையாக உன்னிடம் சாப்பாடு வாங்கிச் சாப்பிடப் போகிறேன். நல்ல சுவை!" என்று சொல்லிவிட்டு, தன் குரலைத் தாழ்த்தி, கண்களைச் சுருக்கி விழித்துக் கொண்டு, "அவர்களுக்குச் சரியான பொட்டிலே அடி விழுந்திருக்கிறது. நல்லவேலை, அம்மா. நல்லவேலை!" என்றான்.

அவள் அன்பு ததும்ப, தலையை அசைத்துக் கொண்டாள். தொழிளார் குடியிருப்பிலேயே பெரிய போக்கிரி என்று பேரெடுத்தவனான வசீலி அவளிடம் மிகவும் மரியாதையோடு நடந்து கொண்டதானது அவளுக்கு இன்பம் தந்தது. மேலும் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள உத்வேகமும் அவளுக்கு அதிக இன்பத்தை அளித்தது. அவள் தனக்குத்தானே நினைக்கத் தொடங்கினாள்:

"நான் மட்டும் இல்லாதிருந்தால்....."

மூன்று சாதாரணகூலியாட்கள் கொஞ்ச தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் அதிருப்தி தொனிக்கும் குரலில் அடுத்தவனிடம் மெதுவாகப் பேசிக் கொள்வது அவள் காதில் விழுந்தது.

"என் கண்ணில் அது படவே காணோமே...."



"அதிலே என்ன எழுதியிருந்தது என்பதைக் கேட்க எனக்கு ஆசை; நானோ எழுத்தறிவில்லாதவன். ஆனால், அது என்னவோ அவர்களைச் சரியான இடம் பார்த்து அடித்து விழத்தட்டியது என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது" என்றான் இன்னொருவன்.

மூன்றாவது கூலி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, இரகசியமாகச் சொன்னான்:

"வாருங்கள், பொய்லர் அறைக்குள்ளே போவோம்." கூஸெவ் தாயைப் பார்த்து, கண்ணைச் சிமிட்டிக் காட்டினான்.

"பார்த்தாயா? எப்படி வேலை?" என்றான்.

பெலகெயா உவகையும் உற்சாகமும் நிரம்பித் ததும்பியவாறு வீடு திரும்பினாள்.

"வாசித்துப் பார்க்கத் தெரியாததால் ஜனங்கள் எவ்வளவு வருத்தப்படுகிறார்கள் தெரியுமா?" என்று அவள் அந்திரேயைப் பார்த்துச் சொன்னாள். "சின்னப் பிள்ளையாயிருக்கும்போது நானும்கூட எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டேன். இப்போது எல்லாமே மறந்துபோய்விட்டது."

"ஏன், இப்போது படியேன்" என்றான் ஹஹோல்.

"இந்த வயதிலா? என்னை கேலி செய்யப் பார்க்கிறாயா?"

ஆனால் அந்திரேய் அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து அதன் அட்டையிலுள்ள எழுத்துக்களில் ஒன்றைச் சுட்டிக் காட்டினான்.

"இது என்ன?"

"எர்" என்று சிரிப்போடு பதில் சொன்னாள் அவள்.

"சரி, இது?"

"அ......"

அவளுக்குத் தன் நிலைமை பரிதாபகரமாகவும் அவமானகரமாகவும் இருப்பதாகத் தோன்றியது. ஏனெனில் அந்திரேயின் கண்கள் அவளைப் பார்த்து, கள்ளச்சிரிப்புச் சிரிப்பது போலத் தோன்றியது. அவள் அந்தப் பார்வைக்கு ஆளாக விரும்பவில்லை. ஆனால் அவனது குரல் மட்டும் அமைதியும் பரிவும் நிரம்பி இருந்தது; முகத்தில் கேலி பாவமே காணவில்லை.

"நீங்கள் உண்மையிலேயே எனக்குச் சொல்லிக் கொடுக்க நினைக்கிறீர்களா, அந்திரியூஷா?" என்று தன்போக்கில் வந்த சிறு நகையோடு கேட்டாள் அவள்.

"ஏன் சொல்லிக் கொடுக்கக்கூடாது?" என்றான் அவன்.

"எப்படி எப்பிடியென்பதைக் கற்றுக் கொண்டால் அப்புறம் எல்லாமே மிகவும் லேசாக வந்துவிடும். படித்துத்தான் பாரேன். மந்திரத்தைச் சொல்லு: பலித்தால் வெற்றி; பலிக்காவிட்டால், பாபமில்லை!"

"இன்னொரு பழமொழி, தெரியுமா? விக்கிரகத்தை வெறித்துப் பார்த்தால் மட்டும் சந்நியாசி ஆக முடியாது."

"ஊம்" என்று தலையை வெட்டியசைத்துக் கொண்டு சொன்னான் ஹஹோல். "பழமொழிகளுக்கா குறைச்சல்? குறையத் தெரிந்தால் நிறையத் தூங்கலாம்!' இந்தப் பழமொழிக்கு என்ன சொல்லுகிறீர்கள்? எல்லாப் பழமொழிகளும் வயிற்றிலிருந்துதான் பிறக்கின்றன. இவற்றைக் கொண்டு மனத்திற்குக் கடிவாளம் பின்னுகிறது வயிறு. மனித இதயம் வாழ்க்கைப் பாதையில் சுலபமாகச் செல்வதற்காக, அதைப் பக்குவப்படுத்துவதற்காகவே பழமொழிகள் உதவுகின்றன.

"இது என்ன எழுத்து?"

"எல்" என்றாள் தாய்.

"சபாஷ்! பார்த்தாயா, இவை எல்லாம் எப்படி ஒரே வரிசையில் அமைந்திருக்கின்றன! சரி. இது என்ன!"

அவள் தன் கண்களைச் சுழித்து, புருவங்களைச் சுருக்கிவிரித்து, மறந்து போன அந்த எழுத்து என்னவென்பதை ஞாபகப் படுத்துவதற்காக அரும்பாடு பட்டாள்; தன்னை மறந்து அந்த முயற்சியில் அவள் ஈடுபட்டாள். ஆனால் சீக்கிரமே அவள் கண்களில் அசதி தட்டிவிட்டது. கண்ணிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. முதலில் வழிந்தது சோர்வுக் கண்ணீர்; பின்னர் வழிந்ததோ சோகக் கண்ணீர்!

"நானாவது படிக்கிறதாவது?" என்று பொருமினாள். "நாற்பது வயதுக் கிழவி நான். இப்போதுதான் படிக்கத் தொடங்குகிறேன்."

"அழாதீர்கள்" என்று பரிவோடு கூறினாள் ஹஹோல்.

"நீங்கள் நன்றாக வாழத்தான் முடியாது போயிற்று; ஆனால் வாழ்ந்த வாழ்க்கை எவ்வளவு படுமோசமானது என்பதையாவது உணர்ந்துகொண்டீர்கள். நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்பினால், எத்தனை ஆயிரம் பேரானாலும் நல்வாழ்வு வாழ முடியும். ஆனால் அவர்களோ மிருகங்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல அந்த வாழ்க்கையைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறார்கள். ஒரு மனிதன் இன்றைக்கும் உண்கிறான், உழைக்கிறான். நாளைக்கும் உண்பான், உழைப்பான். இப்படியே என்றென்றைக்கும் அவனது வாழ்நாள் முழுவதும்-தினம் தினம் உண்பதும் உழைப்பதுமாகவே அவன் வாழ்ந்தால் அதனால் என்ன லாபம்? இதற்கிடையில் பிள்ளைகளை வேறு பெற்றுப் போடுகிறான். குழந்தைப் பருவத்தில் அவை அவனுக்குக் குதூகலம் அளிக்கின்றன. கொஞ்சம் வளர்ந்து, வயிற்றுக்கு அதிக உணவு கேட்கும் அளவுக்கு அந்தக் குழந்தைகள் பெரிதாகி விட்டால், உடனே அவனுக்குக் கோபம் பொங்குகிறது; தன் குழந்தைகளையே திட்ட ஆரம்பிக்கிறான்: 'ஏ பன்றிக் குட்டிகளா! சீக்கிரம் வளர்ந்து பெரிசாகி எங்கேயாவது பிழைக்க வழி தேடுங்கள்' என்று கறுவுகிறான். அவனோ தன் பிள்ளைகளை வீட்டிலுள்ள ஆடு மாடுகள் மாதிரி மாற்றிவிட முனைகிறான்; அவர்களோ தங்கள் கும்பியை நிரப்பிக் கொள்ளத்தான் உழைக்க முனைகிறார்கள். இப்படியாக அவர்கள் வாழ்க்கை இழுபடுகிறது. மனித சிந்தனையைத்தளையிட்டுக் கட்டிய விலங்குகளையெல்லாம் தறித்தெறிய வேண்டும் என்ற காரணத்துக்காக எவனொருவன் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து வாழ்கிறானோ, அவனே மனித ஜாதியில் உயர்ந்தவன். அம்மா உங்கள் சக்திக்கு இயன்றவரை நீங்கள் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்."

"நானா?" என்று பெருமூச்சு விட்டாள் அவள். "நான் என்ன செய்ய முடியும்?"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நாமெல்லாம் மழை மாதிரி; ஒவ்வொரு மழைத் துளியும் விதையைப் போஷித்து வளர்க்கிறது. நீங்கள் மட்டும் படிக்கத் தொடங்கினால்...."

அவன் சிரித்துக்கொண்டே பேச்சை நிறுத்தினான். அங்கிருந்து எழுந்து, அறைக்குள் மேலும் கீழும் நடந்தான்.

"நீங்கள் படித்துத்தான் ஆக வேண்டும். பாவெல் சீக்கிரமே வந்துவிடுவான். வந்தவுடன் அவன் உங்களைக் கண்டு அப்படியே திகைத்துப் போக வேண்டும். ஆமாம்!"

(தொடர்ந்து வரும்.)

# உனக்குத் தெரியாது

விக்ரம் தலைகுனிந்திருந்தான். அவனது கண்கள் கலங்கிச் சிவந்து போயிருந்தன. செவ்வந்தி கதறினாள்.

"அப்போ நீங்க அன்னிக்குச் சொன்னதெல்லாம் பொய்யா?"

"என்னிக்குச் கொன்னது?"

"ஒரு ஆறு மாசத்துக்கு முன்னாடி"

"அது உண்மைதான். ஆனா இந்த ஆறு மாசமா ஒரு பெரிய இடைவெளி எதுக்கு?"

அவன் சற்று அழுத்தமாகக் கேட்க செவ்வந்தி மௌனமானாள். பின் ஏதேதோ காரணங்கைளக் கூறினாள். அந்தக் காரணங்களை அவனால் ஏற்றக்கொள்ள முடியவில்லை.

"கட்டிக்கப்போற என்னோட கருத்துக்கள், விருப்பங்களைவிட உனக்கு மத்தவங்களோட கருத்துக்கள் முக்கிய மாப்பட்டு அதன்படி நடந்திருக்கே அப்பிடித்தானே?"

விக்ரம் கேட்ட விதம் செவ்வந்தியைக் கலங்க வைத்தது.


"அது வந்து.....வந்து"

"இங்க பாரு செவ்வந்தி, நீ யாரோட பேச்சைக் கேட்டு நடந்து கிட்டியோ அவங்க பேச்சையே நீ தொடர்ந்து தாராளமாகக் கேட்டுக்கலாம்"

விக்ரம் நெருப்பைக் கொட்ட,

"என்னை என்ன செய்யச் சொல்றீங்க" செவ்வந்தி அழுதாள்.

"நீ ஒன்னும் செய்யத் தேவையில்லை,



எம்.சுரேஷ்

ஓடிப்போய் நீ இவ்வளவு காலமும் இருந்த இடத்தில பத்திரமாக இரு."

அவனுக்கு ஆத்திரத்தில் மூச்சு வாங்கியது.

"என்னோட கருத்துக்களையும், விருப்பங்களையும் அனுசரிச்சுப்போகத் தெரியாத ஒரு பெண்ணைக் கட்டிக்கிறதைவிட ஏதாவது ஆத்தில, குளத்தில குதிச்சுத் தற்கொலை செஞ்சிக்கலாம்!"

அவனது வார்த்தைகள் அவளது அழுகையை இன்னும் கூட்டியது.

"என்னை மன்னிச்சிடுங்க விக்ரம்...."

"நோ! இட் இஸ் டூ லேட் செவ்வந்தி! காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியாம இருக்கலாம், ஆனா எனக்கு நல்லாத் தெரியும். அதனால நேரத்தை வீணாக்காம நீ இங்கிருந்து தயவுசெஞ்சி போயிடு."

கத்தினான் விக்ரம்.

அந்த ஆத்திரத்தின் அர்த்தம் செவ்வந்திக்கு நன்றாகப் புரிந்தது! ●

# பரிதாபம்

"டிக்கெட்! டிக்கெட்" பேரூந்தில் நடத்துனர் கூறியது காதில் விழுந்தது. ஆனால் மனம் என்னவோ பொக்கட்டிலிருந்து பணத்தை எடுக்க மறுத்தது. இவ்வளவு கூட்டத்தில் தன்னை நடத்துனர் கவனிக்க மாட்டார். இது நியாயம் தானே ஏறியது முதல் இறங்கும்வரை நின்று கொண்டே பயணம் செய்ததால்



வி. சுசீலா.

இதில் தவறு இல்லை என்று அந்தப் பெரியவர் மனம் சமாதானமடைந்தது. இதோ! இறங்குமிடமும் வந்தது. அவரும் இறங்கினார். பேரூந்தும் நகர்கிறது.

'அப்பாடா 2ரூபாய் மிச்சம்!' என்று மனதிற்குள் சந்தோஷப் பட்டுக்கொண்டார். சுளீரென்று வெயில் வறுத்தெடுத்தது. அப்போதுதான் ஞாபகம் வந்தது- கையில் குடை இல்லாதது.

100 ரூபாய் புதுக்குடையுடன் அப்பெரியவரை ஏமாற்றிவிட்டுப் புள்ளியாய் மறைந்திருந்தது அப் பேரூந்து.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# கெ(ச)ால்லாத காதல்

மேகலா அதிர்ந்துபோனாள். இவனெப்படி தன்னை இந்தப் பாழடைந்த இடத்துக்கு அழைத்து வந்தானெனப் புரியாமல் குழம்பிப்போனாள். அவனோ சாந்தமாக புன்னகைத்தான்.

அவன் இடையிலிருந்த கூர்மையான கத்தியினை கையிலெடுத்ததும் உள்ளுக்குள் அதிர்ந்து போனாள். இதயம் வேகமாகத் துடித்தது. நடுங்கும் குளிரிலும் உடம்பு வியர்த்தது. அவன் எதுவுமே பேசவில்லை. கண் வெட்டாமல் அவளையே பார்த்து இரசித்தான். அவள் மனம் குழம்பிப் போனாள்.

"பிரதீப்....என்னை ஏன் இஞ்ச தூக்கி வந்தனி? பிளீஸ்...... மறுபடியும் என்னை என் வீட்டில் கொண்டு போய் விடு!" விழிகள் நனைய சொல்லி அழுதவளை பரிவுடன் நோக்கினான் அவன் மௌனமாய் நின்றான்.

"பிரதீப் என் உடம்புக்காகவா என்னை இங்கு தூக்கி வந்தனி? சொல்லு பிரதீப் சொல்லு.....! விடிஞ்சா எனக்கு கல்யாணம். வீட்டுல அப்பா அம்மாவெல்லாம் பயத்தில துடித்துப் போயிருப்பாங்க." நிஜமாகவே அவள் அழுதே விட்டாள். அவன் பலமாகச் சிரித்தான். அதில் விரக்தி கலந்திருந்தது.

அவள் கலங்கிப்போனாள்.

"உனக்கு கல்யாணமா...?"

"ஆமாம்....பிரதீப்... அது உனக் குத்தெரியும்தானே! தெரிந்துமா நீ இப்படி



ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

நடந்துக்கிற?"

"தெரியும் மேகலா.... நல்லாவே தெரியும். அதை நினைத்துத்தான் நான் உன்னை தூக்கி வந்தன்!" ஆடிப் போனாள் அவள்.

"அதுதான் ஏனென்று கேட்கிறேன். என் உடம்புக்காகவா?" வியப்புகலந்த பயத்துடன் அவள் கேட்டாள்.

"மேகலா... உன்னோட பாலர் வகுப்பில இருந்து படிச்சவன் நான். விபரந்தெரிந்த நாளில் இருந்து நான் உன்னத்தான் 'காதலிக்கிறேன்!"

"வட் யூ மீன்?" அதிர்ந்துபோனாள் அவள்; மாறாமுகத்துடன்அவன்.

"உண்மை மேகலா. கிட்டத்தட்ட பத்து வருசமா நான் உன்னை மனதால காதலிக்கிறன். நீயில்லாமல் என்னால வாழமுடியாது!"

"ஏன் இதை முன்னமே சொல்லேல்ல?"

"சொல்லத்தெரியல! நம்ம நட்பு போயிடு மோங்கிற பயம்....!" சர்வசாதாரணமாகச் சொன்னான்.

"நீ லேட்டாகிட்ட பிரதிப்... எனக்கு மாப்பிள்ள பார்த்து நிச்சயமாகிடுச்சி.... விடிந்தால் கல்யாணம்!" அவள் விழிகள் நனைந்திருந்தன.

"தெரியும் மேகலா! நான் லேட்தான்! ஆனால் ஒரே வார்த்தை ஒரேயொரு வார்த்த "ஐ லவ் யூ பிரதீப்"னு சொல்லு! அதைக் கேட்டுட்டு என்பாட்டுல உன்நினைவோடயே இந்த ஊரவிட்டே போயிடுறன்..பிளீஸ்!"

"முடியாது என்னால முடியாது!"

"பிளீஸ்! எனக்காக மேகலா... பாரு இந்த கத்தியை! குத்தினா உயிர் போயிடும்!" கெஞ்சியபடி முன்னோக்கி வந்தவனை கண்டு பின்வாங்கினாள்.

"முடியாது பிரதீப்.... என்ன கத்தியால குத்தி கொன்னாலும் முடியாது!" தரையில் அமர்ந்து கதறி அழத்தொடங்கினாள்.

"மேகலா நான் உன்ன உயிராக நேசிக்கிறன்! அதை உன்னால புரிஞ்சிக்க முடியாது! ஒரேயொரு வார்த்த ஐ லவ் யூ சொல்லு! உன்ன பத்திரமா உன்ர வீட்டுக்கு கொண்டுபோய் விடுறன்!"

"முடியாது"

"முடியாது.....?"

"ம்...முடியாது!" தலையாட்டினாள்.

"பிளீஸ் மேகலா.... எனக்காக!" குழந்தையைப்போல் கெஞ்சும் குரலிலவன்.

"பிரதீப் நான் உன்ன காதலிக்கல!" அந்த மண்டமே அதிரும்படி கத்தினாள். அவன் கண்களில் நெருப்புத் தெரிந்தது. கோபத்தால் உதடுகள் துடித்தன. கத்தியை ஓங்கியபடி தன்னை குறிவைத்து நோக்கி வந்தவனை பார்த்து, எழுந்து இரண்டடி பின்நோக்கி நடந்தாள். அவன் நெருங்கி விட்டான், ஓங்கி.....

"அம்.... மா...ா..ா.....!" பலமாக கத்தியவனின் குரலைத் தொடர்ந்து

"மே....க....லா.....!" என்ற குரலும் சேர்ந்தொலித்தது. திடுக்கிட்டவள் பின் நோக்கிப்பார்த்து அதிர்ந்து போனாள். அங்கே பிரதீப் இரத்த வெள்ளத்தில் மிதந்தான். தன்னைத்தானே குத்தி தற்கொலை செய்து கொண்டிருந்தான். மேகலா மௌனமாய் அமர்ந்து அவன் விழிகளைப் பார்த்தான் அதில் ஏக்கம் தெரிந்தது. அழுகையுடன் அதனை மூடிவிட்டாள்.

கீழே காலடிச்சத்தங்கள் தெளிவாய் கேட்டன. நிச்சயமாக அது அவளின் வீட்டாராகத்தானிருக்க வேண்டும், இப்போது அவள் விழியிலிருந்து வடிந்த கண்ணீர் துளிகள் அவனின் நெஞ்சில் பட்டு சிதறிக் கொண்டிருந்தன.

# பயணிகள் கவனிக்கவும்.......!



என். உதயகுமார்

அன்று 'ஹெந்தளை' பஸ் அளவுக் கதிகமான கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. வானம் வேறு கண்ணீர் சிந்தியிருந்தமையால் பலர் ஈரம் சொட்டச், சொட்ட நெருக்குப்பட்டுக் கொண்டிருந்தனர்.

'இந்த பிரைவேட் பஸ் காரருக்கு எவ்வளவு தான் சனம் ஏறிக் கொண்டாலும் திருப்தியே ஏற்படாது' இது பஸ்ஸிற்குள் ஒருவரது முணுமுணுப்பு. இந்த நெருக்கடிக்கிடையில் ஒருவாறு சீட்டொன்றைப் பிடித்து அமர்ந்திருந்தான் ராகவன். அவனுடைய கைகளில் சுருட்டப்பட்ட வண்ணம் அன்றைய 'தினமுரசு' வாரமலர் இருந்தது. ராக வனுடைய 'சிறுகதை' அன்றைய மலரில் பிரசுரமாகியிருக்கின்றதா என்று பார்க்கும் ஆவல் அவனுக்கு இருந்தாலும் முரசை விரித்துப்படிப்பதற்கு இலேசான தடை அவன் மனதில் விழுந்தது. எங்கே அது பஸ்ஸிற்குள் அவனை 'தமிழன்' என்று இனம்காட்டி விடுமோ என்ற தயக்கம் தான் அதற்குக்காரணம். அவனுக்குப் பக்கத்திலிருந்தவர் வேறு அன்றைய 'டெயிலி நியூஸ்' படித்துக் கொண்டிருந்தார். "அவ்ரோ விமானம் புலிகளின் ஏவுகணை தாக்குதலுக்குட்பட்டு பல இராணுவ வீரர் பலி" என்ற செய்தி முன் பக்கத்திலேயே பெரிய எழுத்துக்களால் போட்டிருந்தது ராகவனின் தயக்கத்தை சற்று இன்னும் அதிகப்படுத்தியது. என்றாலும் அவனால் ஆவலை அடக்க முடியாமலிருந்தது. 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற பாரதியாரின் வரிகளை நினைத்த ராகவன் துணிவை வரவழைத்துக்கொண்டு முரசை புரட்ட ஆரம்பித்தான்.

ஒவ்வொரு பக்கத்திலும் தலையங்கங்களை மட்டும் வாசித்துக்கொண்டு 'சிறுகதைப் பகுதிக்கு வந்தபோது அவன் கண்கள் பார்வையை விலக்க மறுத்தன. '[illegible]' என்ற அவனது சிறுகதை பிரசுரமாகியிருந்தது. 'ராகவன்' என்ற அவனது பெயரை உச்சரித்தபோது 'கின்னஸ் புத்தகத்தில்' அவனது பெயர் இடம் பெற்று விட்டாற்போல் பிரமிப்பில் அவன் மனம் துள்ளிக்குதித்தாடியது.

"கருணாகரல ஸீட் எகக் தென்ட" என்ற குரல் சுவாரசியமாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' படித்த வண்ணமிருந்த ராகவனை குழப்பியது. பார்வையை நேராக்கிப் பார்த்தபோது கைக் குழந்தையுடன் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். பஸ்ஸிற்குள் உடனே யாருக்கும் தோன்றாத இரக்கம் ராகவனுக்கு ஏற்படவே எழுந்து அப் பெண்மணிக்கு இடம் கொடுத்தான். ஆனால் அவனைக் கூட்டம் நிற்கவிடவில்லை.

நெருக்கத்தால் முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பெண் பரிதாபமாக அவனைப் பார்த்தாள். ராகவன் வசதியாக நிற்பதற்கு சற்று பின் நோக்கி நகர்ந்து கொண்டான். ஆனால் மறுகணம் ஏன் பின்னுக்கு வந்தோம் என அவன் மனம் எண்ணியது. அவன் நின்று கொண்டிருந்ததற்குப் பக்கத்து சீட்டில் ஒரு காதல் ஜோடி தங்களை மறந்த வண்ணம் அமர்ந்திருந்தனர். அவனது கைகள் தாராளமாக அவளது இடையைச் சுற்றி இருந்தது. அவர்கள் கன்னங்களிரண்டும் 'டூயட்' பாடிய வண்ணமிருந்தன. அடிக்கடி பஸ்ஸில் ஏற்பட்ட 'குலுக்கல்' வேறு அவர்களுக்கு இன்னும் வசதியாக அமைந்தது. ராகவனுக்கு பெரிதும் சங்கட மாயிருந்தது. அவன் பார்வையை மறுபக்கம் திருப்பிக்கொண்டபோது தான் அவதானித் தான் அவனுக்கு பக்கத்தில் ஒரு பள்ளி மாணவி நின்றுகொண்டிருப்பதை. ராகவனின் மனம் கூச்சப்பட்டது. அதே நிலைமை அந்த மாணவிக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும், அவள் பார்வையை தாழ்த்திக் கொண்டாள். ராகவன் மீண்டும் பார்வையை எதிர்ப்பக்கம் திருப்பியபோது தான் பார்த்தான், ஒரு வயோதிபர் அந்த இளம் ஜோடியையே பார்த்த வண்ணமிருந்தார். ராகவன் பார்ப் பதைக் கண்டதும் மீதமாயிருந்த முன் பற்கள் தெரிய சிரித்தார்.

ராகவன் மனம் கோபத்தால் குமுறிக் கொண்டது.

இவர்களுக்கு காதல் செய்ய வேறு இடங்களாகிடைக்கவில்லை.........?

'விக்டோரியா பூங்கா', 'கோல்பேஸ் கடற்கரை' என்று அரசாங்கமே காதலர் களுக்கு என்று இடம் ஒதுக்கியிருக்கும் போது, இப்படி சிறுவர் முதல் பெரியோர் வரையும் புழங்கும் பொது இடத்தில் ஏன் காதல் செய்ய வேண்டும்' அவர்களிடம் இதைக்கூறவேண்டும் போலிருந்தது ராகவனுக்கு.

அந்த ஜோடிகளின் சீட்டிற்கு நேர் மேலே 'புகைத்தல் தடை செய்யப் பட்டுள்ளது' என்ற அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது. மாறாக ராகவனுக்கு, அதை எடுத்துவிட்டு 'பஸ்ஸிற்குள் காதல் தடைசெய்யப்பட்டுள்ளது' என்ற வாசகத்தை எழுதி ஒட்டினால் நல்லது என்று தோன்றியது.

ராகவன் மனம் யோசித்தது. திடீரென்று மின்னல் தாக்கியதுபோல் பளிச்சென்று அவன் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது.

'இதையே 'கரு' வாகக் கொண்டு தின முரசிற்கு ஒரு சிறுகதை எழுதி அனுப்பினால், அதைப்படித்த சில காதலர்களாவது திருந்தலாம் தானே.....'

மிகவும் நல்ல எண்ணமாக அவன் மனதில்படவே சந்தோஷமேற்பட்டது.

"என்ன தலைப்பு வைக்கலாம்......"

'பயனிகள் கவனிக்கவும்' மனதிற்குள் சொல்லிப்பார்த்துக்கொண்ட போது பொருத் தமான தலைப்பாகவே ராகவனுக்கு தோன்றியது.

# "திசை மாறிய பறவை"

கவிப்பிரியா நிஷா

பஸ்ஸில் கூட்டம் நிரம்பி வழிந்தது. சன நெருக்கடிக்கு மத்தியில் நசுங்கியவாறு கைக்குழந்தையோடு ராதிகா நின்று கொண்டிருந்தாள்.

சன நெருக்கடியினால் காற்றோட்டமின்றி குழந்தை வீரிட்டு அழுதது. குழந்தையின் அழுகையை எவ்வாறு நிறுத்துவதென்று புரியாமல் அவள் தவித்துப் போய் நின்றாள். பஸ்ஸிற்குள் இருந்த எல்லோரும் அவளை பரிதாபமாக பார்த்தனர். ஆனால் ஒருவரும் அவளுக்கு அமர்ந்து கொள்ள இடம் கொடுப்பதாய் தெரியவில்லை.

ராதிகா அழும் குழந்தையை சமாதானப் படுத்த முயன்று கொண்டிருந் தாள். அவளது நிலையைப்பார்த்து அனுதாபப்பட்ட ஒரு பெரியவர், தான் அமர்ந்திருந்த இருக்கையை அவளுக்காக தியாகம் செய்தார். அவருக்கு பார்வையாலேயே நன்றி கூறிவிட்டு அந்த இருக்கையில் போய் அமர்ந்துகொண்டாள். ஜன்னல் வழியாக வந்த காற்று குழந்தையின் முகத்தை வருடிச் செல்ல குழந்தை தன் பொக்கை வாயை திறந்து அழகாகச் சிரித்தது.

குழந்தையின் சிரிப்பை இரசிக்கக்கூடிய மனநிலையில் அவள் இல்லை. அவளது மனம் வேதனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

தன் வாழ்க்கை இப்படி ஆகிவிடும் என்று அவள் கனவிலும் கூட நினைத்திருக்க வில்லை.

சதீஷை அவள் முழுமையாக நம்பியிருந்தாள். அந்த நம்பிக்கையினால்தான் தன் பெற்றோரையே உதாசீனப் படுத்தி விட்டு அவனோடு வந்தாள். ஆனால் அது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது தான் அவளுக்குப் புரிந்தது. அவனது ஆசை வார்த்தைகளில் மயங்கியது அவளது குற்றமா? அல்லது பருவத்தின் கோளாறா?

நிச்சயமாக அவளுக்குப் புரியவில்லை. சதீஷை திருமணம் செய்து கொண்டு ஆறே ஆறு மாதங்கள் தான் அவள் சந்தோசமாக வாழ்ந்தாள். அதன் பிறகு அவனிடம் ஏற்பட்ட மாற்றம் அவளை நிலைகுலையவைத்தது. தினந்தோறும் குடித்துவிட்டு வந்து அவளை கண்மண் தெரியாமல் அடித்துத் துன் புறுத்தினான். ஒருநாள் அவளுடன் சண்டை பிடித்துக் கொண்டு போனவன் போனவன் தான். திரும்பி வரவேயில்லை.

அவன் எங்கே போனான்? என்ன ஆனான்? ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அவன் அவளை ஏமாற்றிவிட்டான் என்பது மட்டும் புரிந்தது. பிறந்த வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த ராதிகா, சதீஷை திருமணம் செய்து கொண்ட பின்னர்தான் வறுமை என்றால் என்ன என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தாள்.

தான் பட்ட கஷ்டம் தன் குழந்தையும் படக்கூடாது என்று எண்ணியவள் தன் பெற்றோரிடமே சென்று விடுவதென்று தீர்மானித்தாள். இப்போது பிறந்த வீட்டிற்குத் தான் சென்றுகொண்டு இருக்கிறாள். எந்தப் பெற்றோரை அவமதித்து வந்தாளோ அதே பெற்றோரிடம் திரும்பிச் செல்ல நேரிட்டு விட்டதை நினைக்க அவளுக்கு வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.

பஸ் ஒரு குலுங்கலோடு நின்றது. பஸ்ஸிலிருந்து இறங்கியவள் அந்த ஊரைப் பார்த்து பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டாள். அவள் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே இதே ஊரில்தான். வீட்டை அண்மித்தவளின் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. அழைப்பு மணியை அமுத்தினாள். சற்று நேரத்தில் கதவு திறக் கப்பட்டது. கதவைத் திறந்தவர் அப்பாதான்.

"நீங்க யாரு?"அவளை உற்றுப் பார்த்த வாறு கேட்டார்.

"அப்பா! என்னைத் தெரியலயா? நான் தான் ராதிகா" கலங்கிய விழிகளோடு சொன்னாள்.

"எந்த ராதிகா?" அவரது கேள்வி



அவளை என்னவோ செய்தது.

"உங்க பொண்ணு ராதிகா அப்பா" சொல்லும் போதே அவளுக்கு அழுகை வந்தது.

"இருக்க முடியாதே! என் பொண்ணு ராதிகாதான் என்னைக்கோ செத்துப் போயிட் டாளே" அவர் கூறிமுடிக்கவும் அங்கே அம்மா வந்தாள்.

"ராதிகா....எப்போ வந்தே? நல்லா இருக்கியா? உள்ளே வாம்மா" பெற்றதாய் பாசத்தோடு அழைத்தாள்.

"பங்கஜம் நீ உள்ளே போ..."

மனைவியை அதட்டினார்.

"நான் செஞ்சது தப்புத்தான். அதற்கான தண்டனையை நான் அனுபவிச்சிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க அப்பா" அவள் அழுதாள். அவள் அழுவதைப் பார்த்து குழந்தையும் அழுதது.

ராதிகாவின் கையிலிருந்த குழந்தையை வாங்குவதற்காக அருகே வந்த அம்மா, அப்பா முறைத்துப் பார்க்கவும் சட்டென பின்வாங்கினாள்.

"எவனோ ஒருத்தனுக்காக ஒட்டியிருந்த உறவையே வெட்டி எறிஞ்சிட்டுப் போனவ தானே நீ. இப்போ எதற்காக இங்க வந்தே?" அவரது பேச்சில் கோபம் தொனித்தது.

"அந்த சதீஷ் என்னை ஏமாத்திட்டான்."

அவளது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது.

"அவன் இப்படிச் செய்வான்னு எனக்குத் தெரியும். இது நீயா தேடிக்கிட்ட வாழ்க்கை. அதனால ஏற்படுற கஷ்ட நஷ்டங்களை நீ அனுபவிச்சித்தான் ஆகணும். நீ என்னைக்கு இந்த வீட்டை விட்டு போனியோ அன்னைக்கே நான் உன்னை தலைமுழுகி விட்டேன். ஸோ, நீ இங்கிருந்து போகலாம்."

அப்பா கண்டிப்பானவர்தான். ஆனால் அவர் இவ்வாறு கூறிவிடுவார் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"என்னங்க......அவதான் மனம் நொந்து போய் வந்திருக்கா. நீங்க வேற அவ மனசை நோகடிக்கணுமா? என்ன தான் இருந்தாலும் அவ நம்ம பொண்ணு இல்லையா? ஏதோ தெரியாத்தனமா தப்பு பண்ணிட்டா. அதான் மன்னிப்புக் கேட்கிறா இல்லே. இவ்வளவு நேரமா அவளை வாசலிலேயே நிற்கவெச்சி பேசிக்கிட்டு இருக்கிறீங்களே....முதல்ல அவளை உள்ளே கூப்பிடுங்க."

அம்மாவை சுற்டெரிப்பதைப் போலப் பார்த்தார்.

"பங்கஜம் உனக்கென்ன புத்தி கெட்டுப் போச்சா? யாரை உள்ளே கூப்பிடச் சொல்றே? இவளையா.....? இவளால நாங்க பட்ட அவமானம் போதாதா? நீ வேணும்னா அதையெல்லாம் மறக்கலாம். ஆனா நான் மறக்கிறதாயில்ல. என்னைப் பொறுத்த வரைக்கும் நம்ம பொண்ணு செத்துப் போயிட்டா."

அம்மா வாயடைத்துப் போனாள். அவர் ராதிகாவை நோக்கினார்.

"இங்க பாரு இவ்வளவு நேரமா ஒன்னோட பேசிக்கிட்டு இருந்ததே மகா தப்பு. தயவு செய்து இங்கிருந்து போயிடு. அதோட அப்பா, அம்மான்னு சொந்தம் சொல்லிக்கிட்டு இனிமேலும் இந்த வீட்டு வாசப்படியை மிதிக்காதே! அப்படி மிதிச்சேன்னா நான் பொல்லாதவனாகிடுவேன்."

படார் எனக் கதவைச் சாத்தினார். அவள் விக்கித்துப் போனாள்.

"என்னங்க.....கதவைத் திறங்க. அவளை உள்ளே கூப்பிடுங்க" அம்மா அப்பாவிடம் கெஞ்சுவது அவளது செவிகளில் விழுந்தது.

குழந்தை அவளது தோளில் உறங்கிக் கொண்டிருந்தது. அழுகையனூடே ராதிகா தன் கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தாள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# விலக – உயிர் விலகும்

## தருவது ரசிகன்

சிரித்துக் கொண்டிருந்த நிலவை கரு மேகம் வந்து கவ்வத் தொடங்கியது.

பைரவன் உள்ளத்தில் கவலை மெல்ல கவியத் தொடங்கியது.

கொட்டும் மழைவந்து கொவ்வை இதழால் தேன் கொட்டும் தேவதையின் வரவை தடுத்துவிடுமோ என்றுதான் கவலை.

நினைத்து முடிப்பதற்கிடையில் வானம் பூமியை நீராட்டத் தொடங்கிவிட்டது.

'வம்பு பிடித்த வானம். நேரம் கெட்ட நேரத்தில் கொட்டித் தொலைக்கிறதே' என்று வானத்தை மனதில் வசைபாடிக் கொண்டான்.

வசைபாடும் அவனை கேலி செய்து கண்ணடிப்பதுபோல வானம் மின்னலடித்தது.

மின்னல் வெளிச்சத்தில் அவன் கண்ட காட்சி இதயத்தை புரவிவேகத்தில் துடிக்க வைத்தது.

கொட்டும் மழையில் நனைந்தபடி நூலிடை அசைய, தண்டுக்கால்களால் பூமியின் மேனியை மெல்ல மிதித்து பூச்செண்டு மேனியாள், தேர் ஒன்று நகர்ந்துவருவதுபோல அவனைத் தேடி வந்து கொண்டிருந்தாள்.

மரநிழலில் ஒதுங்கி ஒடுங்கி நின்ற பைரவன் நனைந்துவரும் மலரை அணைக்க பாய்ந்து ஓடினான்.

தெப்பமாய் நனைந்திருந்தாள் தேவதை.

கொட்டிய மழையில் குளித்து உடலோடு உடலாய் ஒட்டியிருந்தது தேக வனப்பை திரையிட்டு மறைத்த ஆடை.

திரை நனைந்து நெகிழ்ந்துவிட தேக வனப்பின் ஏற்ற இறக்கங்கள் விழிகளில் பட்டு அவன் உடலில் வெப்பத்தை விதைத்தன்.

தெப்பமாய் நனைந்தவள் குளிரை விரட்டும் வெப்பமாய் மாறினாள்.

"எப்படி வந்தாய் மலர்விழி?"

இது என்ன கேள்வி என்பது போலப் பார்த்தாள்.

"பார்த்தால் தெரியவில்லை, நனைந்தபடிதான் வந்தேன்."

"வான் மழை பொழியத் தொடங்கியதால், இந்த தேன் மழை வரத்தவறிவிடுமோ என்று நினைத்தேன்."

சொல்லியபடியே அவளை அணைத்துக் கொண்டான்.

கொட்டும் மழையும் வாட்டும் குளிரும் இதழ்கள் கலக்கையில் மறந்து போனது.

உதடுகளால் தேன் எடுத்தவன் உச்சி முதல் உள்ளங்கால்வரை அவளுக்குள் சூட்டை உற்பத்தி செய்தான்.

சுவையேறியதால் சுற்றம் மறந்தது.

சூடேறியதால் சூழ்ந்திருந்த குளிர் தொலைந்தது.

பூமியை மிரட்டுவதுபோல வானம் இடி இடித்தது.

மலர்விழி அவனை மேலும் இறுக்கிக் கொண்டாள்.

பைரவனின் கன்னத்தை தன் செவ்விதழ்களால் வருடிக்கொண்டு சென்று, அவன் செவி மடலில் நாவால் கோலம் போட்டு குறும்பு செய்தாள்.

ஆணுக்கும் சிலிர்ப்பு வரும். பைரவனுக்கும் சிலிர்ப்பு வந்தது.



அப்படியே முகம் குனிந்து, மஞ்சமாய் நினைத்து மலர்விழியின் மார்புகள் மத்தியிலே தலை சாய்த்தான்.

அவன் காதுக்குள் அவள் கேட்டாள்.

"போதும் அல்லவா?"

அவன் தன் கரத்தால் மலர்விழியின் இடையில் ஆராய்ச்சி நடத்திக்கொண்டு, முகத்தை அவளின் நெஞ்சத்து மஞ்சத்தில் இருந்து நகர்த்தாமல் பதில் சொன்னான்,

"நான் இன்னும் உண்ணவே ஆரம்பிக்கவில்லையே!"

"என்ன?"

"பார்க்கத்தானே தொடங்கியிருக்கிறேன் இனித்தானே வாங்கத் தொடங்க வேண்டும்"

"வாங்குவதா? யார் இங்கே விற்றுக் கொண்டிருக்கிறார்களாம்?"

"காற்று வாங்குகிறோம் அல்லவா மலர்விழி?"

"ஆம் வாங்குகிறோம்."

"அதனால் பூமி காற்றை விற்பனை செய்வதாக அர்த்தமாகுமா? பூவின் வனப்பையும், வாசத்தையும் நேசிக்கிறோம் அல்லவா?"

"ஆம், நேசிக்கிறோம்."

"வண்ண மலர்கள் வாசத்தை விலை பேசி வழங்குவதாக எண்ணலாகுமா? இயற்கையின் எழிலை விழிகளால் வாங்கி வியக்குகிறோம் அல்லவா?"

"புரிகிறது. புரிகிறது. இயற்கை தன் எழிலை ஏலத்தில் விடுகிறது என்று நினைக்கலாகுமா என்றுதானே கேட்க வந்தீர்கள்?"

"கத்தி விழிக் காரிகையே-நீ புத்தியுள்ள கட்டழகியடி!"

இடியோசை மத்தியிலே அவன் பதித்தான் 'இச்' ஒலிகள்.

"போதும்....வர வர மழையின் வரவு அதிகமாகிறது. போகவேண்டும் நான்."

"அதுதான் முடியாது!"

"ஏன்?"

"ஏன் என்று கேட்காதே. இதோ தேன் என்று பருகத்தா! வீண் என்று ஒரு நொடியும் போக்காமல், என் நிலையை மான் விழியால் காண்!"

"என்ன உங்கள் நிலை?"

"காத்திருந்து வேல் எறிந்த வேடன், வீழ்ந்த புள்ளிமான் எழுந்து ஓடத்தான் விட்டான் ஆயின் அவன் பெயர் மூடன்"

கேலியான குரலில் கிளி மொழியாள் சொன்னாள்;

"ஐயய்யோ நீங்கள் புத்திசாலியல்லவா?"

"அதாவது விவேகமுள்ள வேடன்!"

"ஆம். ஆம். அதிலென்ன சந்தேகம்?"

"சரியாகச் சொன்னாய். விவேகமுள்ள வேடன் நிலைதான் என் நிலையும்! அதனால்தான் கேட்கிறேன், விடுபட்டு புள்ளிமான் ஓட விடுவேனோ நான் என்று?"

இறுக்கப்பட்டாள். இடையில் ஆராய்ந்த அவன் கரம் வயிற்றை வருடி, தொப்புள் சுழி நெருடி வித்தை பல செய்ய, வெட்கம் வராமல், இன்னும் வேண்டும் வேண்டும் என்று விருப்பம் வருவது உணர்ந்தாள்.

'மேகம் வெளியேதான் மழை பொழியும். மோகம் உள்ளேயே மழை சொரியும். புதிய கலை அறிவதிலே வேகம்தான். அதனால் பாடாய் படுகிறது என் தேகம்தான். பூவுக்கு வண்டின் செயல் வலியல்ல என்றாலும் வலிய இவன் கரங்கள் செய்யும் விஷமத்தால் இன்ப வதைபடும் தேகம் பாவம்தான்'

அவள் மனதுக்குள் ஓடியது எண்ணம். பைரவனோ கன்னம் வைத்து காத்திருந்த திருடன் அகப்பட்டதையெல்லாம் சுருட்டும் வேகம்போல, தளிர்மேனி மீதிருந்த அழகையெல்லாம் அள்ளியெடுத்துக் கொண்டிருந்தான்.

வசப்பட்டது வீணை. சுரம் தந்து, தானும் சுரம் உணர்ந்து, காமன் தொடுக்கும் சரம் முன் பணிந்து கனிந்து கொண்டிருந்தது.

மழை ஓசை மத்தியிலும் தூரத்தில் எழும் காலடி ஓசையை அவள் செவி வாங்கத் தவறவில்லை.

சட்டென்று விலகி, அவசரத்திலும் ஆடைகளை சரிசெய்தபடி துள்ளி ஓடினாள் வண்ணத் தேவதை.

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. காலடி ஓசை அருகே வந்த போதுதான் அவள் ஓடிய காரணம் புரிந்தது.

வந்தது வர்ணத் தேவதையை வயிற்றில் சுமந்து தந்தவள்.

மழையில் நனைந்தபடி திருடன் போல் முழித்துக் கொண்டிருந்தவனை விசித்திரமாய் பார்த்தபடி மகளைத் தேடிச் சென்றுகொண்டிருந்தாள் அம்மா.

'தான் சுமந்த உயிரை தேடி வந்தவள், நான் அடைந்த உயிரை கவர்ந்துவிட்டாளே' என்று நினைத்தான்.

"அவள் வந்து என்னோடு கூடும் போது உயிருக்கு வாழ்வு வந்தது போல் மகிழ்ந்திருந்தேன். பிரியும் போது உயிருக்கு சாவு வந்ததுபோல் ஆகிவிட்டேனே" என்று முணுமுணுத்தான்.

அவன் முணு முணுப்பில் விசித்திரம் எதுவுமில்லை. காதலின் சிறப்பே அது தானே! அதனைத்தான் திருவள்ளுவர் சொல்லிச் சென்றார்.

**"வாழ்தல் உயிர்கன்னள் ஆயிழை சாதல்**
**அதற்கன்னள் நீங்கு மிடத்து"**
**அதிகாரம்-113 குறள்-1124.**

## இலக்கிய நயம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல—101

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | ■ |
| | ■ | | | ■ | 4 | 5 |
| 6 | 7 | ■ | | ■ | | |
| | | ■ | 8 | | | |
| ■ | | ■ | 9 | | | ■ |
| 10 | | | | ■ | ■ | 11 |
| 12 | | ■ | ■ | 13 | | |

### இடமிருந்து வலம்

01. மன்னனின் மனைவி. உலகப் பேரழகி.
04. இதில் வீழ்ந்தோர் தாமும் கெட்டு குடியையும் கெடுப்பார்கள்.
06. வேகத்தை இப்படியும் அழைக்கலாம்.
08. கிடைக்கும் போது சரியாகப்பயன் படுத்த வேண்டும்.
09. திருத்தப்பட வேண்டியது.
10. அகதிகள் அயல் நாடுகளில் கோருவது.
12. இதன்படியே எல்லாம் நடக்கும் என்பர் சிலர்.
13. இதற்கு வேகம் தெரியாது.

### மேலிருந்து கீழ்

01. இது ஜோசியத்துடன் தொடர்புடையது.
02. ராமகிருஷ்ண பரமகம்சரை இப்படியும் சொல்லலாம்.
03. படுக்கையில் வீழ்த்தி விடும்.
04. பெறுமதி என்றும் சொல்லலாம்.
06. இது கயிறாகும்.
07. பக்தர்கள் இங்கே படையெடுத்துச் செல்வார்கள்.
11. பெண்ணை இப்படியும் வர்ணிப்பர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 27.05.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-101
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-99ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சி | ■ | 2 கா | ■ | 3 கூ | த் | 4 து |
| 5 ல | டா | ய் | ■ | ட் | ■ | ரு |
| ம் | ■ | 6 க | ட் | டு | ரை | ■ |
| பு | ■ | றி | ■ | ற | ■ | 7 க |
| ■ | 8 வா | ■ | 9 ஏ | வு | 10 க | ணை |
| 11 சூ | ரி | ய | ன் | ■ | ல் | யா |
| ■ | 12 சு | ள | கு | ■ | வி | ழி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 99இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. திருமதி. கே. பாலகிருஷ்ணன், கொழும்பு-11.
2. செல்வி. ஏ. அகல்யா, நுவரெலியா.
3. கே. ரமேஷ், மட்டக்களப்பு.
4. திருமதி. ஹைரியா என் சரீப், திருமலை.
5. எல். அப்துல் நஸார், அநுராதபுரம்.
6. செல்வி. எம். சித்திராதேவி, நானுஓயா.
7. செல்வி. என். றம்ஸியா, புத்தளம்.
8. டிலோஜன் ஜெகநாதன், வவுனியா.
9. எம். நிஸாம் தீன், தலவாக்கலை.
10. எஸ். ஜெயரதன், மொரட்டுவ.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்



**ஒரு வள்ளல் எல்லாம் இழந்த பின் என்ன செய்வான்?**

செல்லையா ஸ்ரீகாந்த்-ஹட்டன்.

*தனக்குதவ இன்னொரு வள்ளல் எங்காவது இருக்கிறாரா என்று விசாரிக்க வேண்டியதுதான்.*

▫▫

**எந்தச் செயலைச் செய்ய நினைக்கும் போதும் தோல்வி வருமோ என்று நினைப்பவர்களுக்கு என்ன சொல்கிறீர்?**

ஜெயந்தி சிதம்பரம்-புத்தளம்.

*அத்திவாரம் உறுதியாக இருந்தால்தான் கட்டிடம் காத்திரமாக இருக்கும். ஆரம்பமே நம்பிக்கையில் தொடங்கினால்தான் செய்யும் காரியம் யானையின் தும்பிக்கைபோல பல முள்ளதாக இருக்கும் என்றெல்லாம் உபதேசிக்கும் அளவுக்கு நான் ஒன்றும் அனுபவசாலியல்ல.*

▫▫

**டியர் சிந்தியாக் கண்ணு, கொழும்பில் நீங்கள் அடையாள அட்டை இல்லாமல் மாட்டிய அனுபவம் உண்டா?**

ச.ராமஜெயம், எட்/அல்கொள்ள எஸ்டேட்.

*அடையாள அட்டை இருந்தும் மாட்டிக்கொண்டு திணறிய 'அனுபவம்தான் உண்டு.*

▫▫

**கனவில் வரும் அப்பிள் பழம், நேரில் கிடைக்கும் மாம்பழம், இரண்டில் எது சிறந்தது?**

எம்.ஏ.எம்.இன்ஷாப்-கம்பளை.

*கனவில் வருவதை எட்ட நினைத்துக் கொண்டிருந்தீர் என்றால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடும் இன்ஷாப்.*

▫▫

**அன்பின் சிந்தியா! உலகில் மன்னிக்க முடியாத குற்றம் எது?**

சி.யோகராஜா-மட்டக்களப்பு.

*நம்பிக்கைத் துரோகம்.*

▫▫

**டியர் சிந்தியா! நீங்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பா அல்லது புலிகளுக்கா?**

பாலமுனை வாஹிட்

*நியாயத்தின் கனம் எங்கு அதிகமோ அந்தப் பக்கத்திற்கு.*

▫▫

**கவிஞர் வைரமுத்துவின் படப் பாடல்கள், தனிக் கவிதைகள் இவற்றில் எது பிடிக்கும்?**

சா.தயாளினி-வவுனியா.

*படப்பாடல்கள் பல நிர்ப்பந்தம் காரணமாக எழுதப்படுவதால், நிர்ப்பந்தங்கள் இல்லாமல் அவர் எழுதும் நிதர்சனமான கவிதைகள் மிகவும் பிடிக்கும்.*

▫▫

**காதலிலே தோல்வியுற்றாள் கன்னியொருத்தி. அவள் என் நண்பி. அவளுக்கு உங்கள் யோசனை என்ன?**

செல்வி சுலோசனா-கண்டி.

*சோகப்பாடல்களை நீங்கள் கேட்பது சரி உங்கள் நண்பியைக் கேட்க வேண்டாம் என்று கூறுங்கள்.*

▫▫

**நீங்கள் பிறந்தேயிருக்காவிட்டால்?**

கா.உதயகுமாரி-அப்புத்தளை.

*இவ்வாறான கேள்விகளுக்கு பொறுமையாக பதில் சொல்லும் அகில உலக புத்திசாலி இல்லாமல் வினாக்கள் பல விக்கி விக்கி அழுதிருக்கும்.*

▫▫

**ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றப்படும் என்று சொன்னார்களே?**

கார்த்திக் பிரியை-மாத்தளை.

*இப்போது மட்டும் என்ன மாற்றவே மாட்டோம் என்றா சொல்கிறார்கள். கொஞ்சம் முன்னே பின்னேயாகும் அவ்வளவுதான். பரவாயில்லையே சமாதான காலத்தில் சொன்னதை இந்த யுத்த காலத்திலும் நினைவில் வைத்திருக்கிறீரே!*

▫▫

**'இந்திய டுடே' சஞ்சிகையில் நமது ஜனாதிபதியின் பேட்டி குறித்து உமது கருத்து?**

எஸ்.ஜெயக்குமார்-பண்டாரவளை.

*கேள்விகள் தொடுக்கப்பட்ட முறையில் சிண்டு முடியல்தனம் நிறையவே இருக்கிறது. புலிகளுக்கு அடியுங்கள் என்று நமது ஜனாதிபதியிடம் பொல்லைக் கொடுப்பது போலவும் கேள்விகளை தொடுத்திருக்கிறார்கள்.*

▫▫

**காதலி திருமணத்திற்கு அவசரப்படுவது ஏன்?**

ஏ.எம்.எம்-வாழைச்சேனை.

*நீர் அவசரப்பட்டுவிட்டதால், இப்போது திருமணத்திற்கு காதலி அவசரப்பட வேண்டியிருக்கிறதோ.*

▫▫

**நம்நாட்டு நிலவரத்தில் 'தினமுரசு' புலிகளுக்கு ஆதரவாக சங்கூதுவதாக கூறப்படுகிறதே?**

ஏ.பி.எம்.ஜிப்ரி-பேருவளை.

*'முரசு' யாருக்கும் சங்கூதாது. நாட்டில் நடக்கும் சங்கதிகளை கூறும்; அவ்வளவுதான்!*

▫▫

**தமிழ் நாட்டில் இன்றைய சூப்பர் ஸ்டார் யார்?**

சே.நவநீதன்-கொழும்பு-11:

*தமிழக பத்திரிகைகள் பரபரப்புக் கருதி உருவாக்கிவரும் ஹீரோ சுப்பிரமணிய சுவாமி அவர்தான் சூப்பர் ஸ்டார்.*

▫▫

**இந்தியா படையை அனுப்புமா?**

எம்.நியாஸ்-ஹட்டன்.

*அடுத்த வருடம் படையை அனுப்பக்கூடும்.-கிரிக்கெட் படையை. (உலகக் கிண்ணப் போட்டி அடுத்த வருடமல்லவா)*

▫▫

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இவ்வாரம் (21.05.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரீ.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.
அருந் தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:-
உடல்களெல்லாம் உயர் மேடாய்க் குவிந்திருக்க
இழந்த குற்றுயிராய்க் குமுறியழும்
ஒலியெங்கும் கூக்குரலுடனெழும்பும்
முனையைப் பார்க்கின்றேன்; இனம்புரியா
தன்பக்கடலாடுகின்றேன்!
அகம்பாவமடைகின்ற
ஏனோ மதிகெட்டுப் போனதிங்கே!
பெருமையெல்லாம் சாய்ந்ததன்றோ?

போற்றுகின்ற மாண்புடைய மாமனிதன்
நிறைந்துவிட உறுபொழுது விரைகிறது....
கொய்து, நற்சாந்துக் களிம்பெடுத்து
திரண்டு கங்கைமைந்தன் பாலடைந்தார்!

கீழ்வானிலெழுகின்ற
வரும் பொற்காலம் விரைவாகும்
பாரைவிட்டகன்று விடும்
எதிர்வரவைப் பார்த்திருப்போம்!

- காட்சி தொடக்கம் -

குருக்ஷேத்திரம் – பொழுது புலரும் நேரம் – திரௌபதியும் ஏனைய பெண்களும் கைகளில் விளக்கேந்தி அம்புப் படுக்கையில் கிடக்கும் பீஷ்மரைக் காணவருகின்றனர்.

**பீஷ்ம:** வா மகளே! வா! இறைவனருள் பாலிப்பானாக! கடந்த காலத்தில் ஏதேதோ நடந்திருக்கலாம்! ஆனால் பாரத சமுதாயம் என்றும் உன் பெருமையைப் போற்றும்! நீ வணக்கத்துக்குரிய பெண்ணாக என்றும் மதிக்கப்படுவாய்!

**திரௌ:** ஓ பிதாமகரே! பாரத சமுதாயத்தின் பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரியவர் தாங்கள். தங்கள் மருமகளாக இருக்கும் பேறு பெற்ற நான் பெரும் பாக்கியசாலியே! தங்கள் உடலில் பட்டுள்ள ரணங்கள், எறிக்கப் போகும் கொடும் வெய்யிலில் மேலும் வேதனை தாராமல் தடுக்க சந்தனக் களிம்பு தடவுவதற்கு உத்தரவு தாருங்கள். அதற்குமுன் இவளைத் தங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது.

உத்தரை பீஷ்மரின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறாள்.

**பீஷ்ம:** வாழ்க மகளே! இறைவன் அருள்பாலிப்பான்! ஆமாம்! இவள் யார் பாஞ்சாலி!

**திரௌ:** இவள் சுபத்திரையின் மகன் அபிமன்யுவின் மனைவி உத்தரை!

**பீஷ்ம:** மகளே! அறிமுகங்களுக்கு போர்க்களம் உகந்ததல்லவே! ஆமாம்! உன் கணவன் அபிமன்யுவையும் போர்க்களத்தில் தான் முதன் முதலில் காணும் வாய்ப்புக் கிட்டியது. போர் முடியும்போது யார் உயிருடன் இருக்கப்போகிறார்களோ தெரியாது! உனது கணவனின் வீரத்தை எனது உடல் அனுபவித்துள்ளது. அவன் நீடூழி வாழ வேண்டும். அவனைக் கண்டதும் எனது இளமைப் பருவம் என் நினைவுக்கு வந்தது. இன்று உன்னை முதன் முதலாகக் காண்கிறேன். உன் மாமா அர்ச்சுனனின் பாணங்கள், உன்னை வாழ்த்துவதற்கு என் கைகளை உயர்த்தமுடியாமல், கட்டிப்போட்டு விட்டன. அர்ச்சுனன் எய்த ஒவ்வொரு கணையும், அவன் சிறுவனாக இருந்தபோது ஓடோடி வந்து என் மடியில் குதித்து ஏறி விளையாடியதைத்தான் நினைவூட்டியது. அந்த அம்புகளுக்கு என்னால் முத்தமாரி பொழிய முடியாமல் போய்விட்டது. இந்தப் பாணங்கள் அனைத்தும் என்னுடைய வாழ்வின் பணியையே பிரதி பலிக்கின்றன.

திரௌபதியும் ஏனைய பெண்களும் சந்தனக்களிம்பினை பீஷ்மரின் உடம்பில் பூசி, மலர்களைச் சொரிந்து சோற்றையும் ஊட்டுகின்றனர். திரௌபதி பாதங்களைத் தொட்டு வணங்குகிறாள்.

பின்னணிப் பாடல்
குருவம்சத்தின் குலக்கொடியென வளர்
அர்வையரெழுந்து அகல்விளக்கேந்தியே
பெருமகனாமுயர் பீஷ்மரின் படுக்கையின்
அருகிலடைந்தவர் அடிதொழுதிறைஞ்சினர்!
இருளடைந்திருந்த இயற்கைத் தாயவள்
பெருமை பெறும் பொழுதினை நினைந்துமோர்
இருதிலனைக்கும் இயமனுமாங்கே
பொறுமையுடனே பொழுது பார்த்திருந்தனன்!

பெண்கள் பீஷ்மருக்கு இறுதி வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்புகையில் அங்கே துரியோதனன் தென்படுகின்றான்.

**திரௌ:** யாரது? துரியோதனனா....? எப்படி இருக்கிறாய்?

**துரி:** பெண்ணே! பிதாமகரை வீழ்த்தினால் அஸ்தினாபுரத்தை வென்றுவிடலாமென அர்ச்சுனன் எண்ணிவிட்டானா? பிதாமகர் மட்டுமே அஸ்தினாபுரமல்ல...! நான் தான் அஸ்தினாபுரி... நினைவில் இருக்கட்டும்!

**திரௌ:** அஸ்தினாபுரத்தின் துரதிஷ்டமே அதுதான்...!

# மகாபாரதம்

அங்கம் 80

திரௌபதி சென்றுவிடுகிறாள். துரியோதனன் பீஷ்மரின் அம்புப்படுக்கை அருகில் சென்று தன் கையொலி எழுப்புகிறான். காவலன் ஒருவன் அங்கே வருகிறான்.

**துரி:** பிதாமகரின் அம்புப் படுக்கையைச் சுற்றிவளைத்து ஒரு கிடங்கு வெட்டி வையுங்கள். வனவிலங்குகள் எதுவும் அப்பக்கம் வந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



- காட்சி மாற்றம் -

**குருச்சேத்திரம் – பாசறையில் கர்ணன், துச்சாதனன் மற்றும் சகுனி இருக்கின்றனர்.**

**கர்ண:** துரியோதனன் இதுவரை இங்கு வந்திருக்க வேண்டுமே மாமா!

**சகுனி:** அங்கத்துக் கதிபதியே! கங்கையின் மைந்தர் தனது இறுதிக் கோரிக்கையாக "துரியோதனா! எனது கடைசி காலம் நெருங்கிவிட்டது! பாண்டவர்களுக்கு பாதி இராச்சியத்தைக் கொடுக்க மறந்துவிடாதே" என்று புலம்பிக் கொண்டிருப்பார்.

**கர்ண:** அப்பேர்ப்பட்ட மாமனிதரைப்பற்றி இழிவாகப் பேசுவது நல்லதாகப் படவில்லை...!

**சகுனி:** உன்னைப் போன்றதொரு மாவீரனை போர்க்களம் போக விடாமல் தடுத்தமை அவருடைய வீரத்தனமாகலாம்! ஆனால் அவர் துரியோதனன்பால் கொண்டுள்ள பற்றுறுதியும் சந்தேகத்துக் கிடமானதே! எமது படையின் தளபதியான அவர் யுதிஷ்டிரரின் வெற்றியையே விரும்புகிறார். அத்துடன் அர்ச்சுனனே இணையற்ற வீரன் என்பதையும் பிரசித்தப் படுத்தத் தவறுவதில்லை.

**துரியோதனன் பிரவேசிக்கிறான்.**

**துரி:** மாமா கூறுவதில் உண்மையிருக்கிறது நண்பனே!

**துச்சா:** இருப்பினும் அவர் இன்னும் உயிருடன் இருக்கும்போது வேறு ஒருவரை படைத்தளபதியாக்க முடியாதே!

**துரி:** துரோணாச்சாரியாரும் பாண்டவர்களைக் கொல்வதற்கு தயக்கம் காட்டுவார் என்றே நான் சந்தேகப்படுகின்றேன். ஆகவே, யுதிஷ்டிரனை உயிருடன் பிடித்துத் தாருங்கள் என்றால் அதற்குக் கட்டாயம் சம்மதிப்பார். யுதிஷ்டிரர் கைதானால் அவர் நமது அடிமையாகிவிடுவார்; யுத்தமும் நின்றுவிடும்!

**சகுனி:** நல்ல யோசனை மருமகனே!

**கர்ண:** உண்மையில் இதுவே சிறந்த முடிவாகும்!

- காட்சி மாற்றம் -

**துரோணாச்சாரியாரின் பாசறை – அவருடன் கிருபாச்சாரியாரும் அஸ்வத்தாமனும் உரையாடுகின்றனர்.**

**துரோ:** கவுரவப்படைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு தங்களுக்கு கிட்டாதமைக்காக -கிருபாச்சாரியார் அவர்களே! தங்களைப் பாராட்டுகிறேன்!

**அஸ்வ:** அப்பா! என்ன சொல்கிறீர்கள்? பாண்டவர்கள் எமது எதிரிகளல்ல என்பதனை ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் அனைவரும் என் உடன் மாணவர்கள் - நண்பர்களும் கூட... இருப்பினும் துரியோதனன் அணி சேர்ந்து அவர்களுக்கெதிராகப் போரிடத் துணிந்த பின் ஏன் இத்தகைய வார்த்தைகள்....?

**கிருபா:** அதுதான் மருமகனே எமது சிக்கலான பிரச்சனை! உண்மையான எதிரிகளை எதிர்த்துப் போராடலாம்! ஆனால் உண்மையான அன்புடன் நேசிப்பவர்களுடன் மோதுவதென்பது மிகவும் சங்கடமான சமாச்சாரம்தான்!

**அஸ்வ:** அப்போ எதற்காகப் போரிட வேண்டும் மாமா?

**துரோ:** இதற்கான காரணத்தை துரியோதனன் மட்டும்தான் அறிவான். அவனுடைய சேவைக்காக நாம் அர்ப்பணிக் கப்பட்டவர்கள்; அவனைப் பாதுகாப்பதே எமது கடமையாகிவிட்டது. ஆகவே தீர்மானம் எடுப்பது எமது நிலைப்பாடல்ல; உண்மையில் அவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடமைப்பாடு எதுவும் உனக்குக் கிடையாது மகனே!

**அஸ்வ:** துரியோதனனுக்கு நான் கட்டுப்படவேண்டியதில்லை என்றபோதிலும் இன்றுள்ள நிலையில் அவனுக்குத் துரோகமிழைக்கவும் முடியாதவனாகஇருக்கிறேன். வென்றாலும் தோற்றாலும் நான் அவனுடைய அணியில்தான் நிற்பேன்! பாண்டவர்களைக் கொல்வதனாலும் போர் வீரனான நான் அதனை எனது கடமையாக ஏற்பேன்!

**இவ்வேளை துரியோதனன் அங்கு வருகிறான்.**

**துரி:** எவ்வாறுள்ளாய் சகோதரனே! வணக்கம் குருதேவா! வணக்கம் குலகுருவே! என்ன இந்தப் பாசறையில் இவ்வளவு பதட்டநிலை...?

**துரோ:** என் மகன் அஸ்வத்தாமனுக்கும் எனக்குமிடையில் சில அபிப்பிராய பேதங்கள் அவ்வளவுதான்....! அதுசரி, இந்தவேளையில் எதற்காக அவசரமாக வரவேண்டும்?

**துரி:** குருதேவரே! பிதாமகருக்கு நேர்ந்த விபத்து எனக்குப் பெரும் பிரச்சனையைத் தோற்றுவித்துவிட்டது. இத்தகைய தொருவிலை கொடுத்துத்தான் நான் வெற்றி பெறவேண்டுமா? இந்த யுத்தத்தில் வெகுதூரம் வந்துவிட்ட நான் வெறுங்கையுடன் திரும்ப முடியாது. பாண்டவர்களின் கல்லறை மீது நான் வெற்றிக்கோட்டை கட்ட விரும்பவில்லை. யுதிஷ்டிரரை உயிருடன் பிடித்து என்னிடம் ஒப்படைத்தீர்களானால், அதுவே போதும் எனக்கு! போரை நிறுத்திவிடுவேன்!

**துரோ:** யுதிஷ்டிரரின் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுத்த மாட்டாய் எனக் கருதுகிறேன்!

**துரி:** நிச்சயமாக எதுவும் நேராது என வாக்களிக்கிறேன்!

**துரோ:** பாண்டவர்களை அவ்வாறு வெற்றி கொண்டபின் பாதி இராச்சியத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுவாய் என நம்புகிறேன். அன்பு துரியோதனா! இந்த யோசனை நேற்று உன்னிடம் தோன்றியிருக்குமானால் கங்கையின் மைந்தர் அம்புப்படுக்கையில் கிடக்க வேண்டி ஏற்பட்டிருக்காதே! இருப்பினும் உன்னுடைய இந்த முடிவு என்னை மகிழ்ச்சியிலாழ்த்தியிருக்கிறது. நாளையே யுதிஷ்டிரரைக் கைது செய்து உன்னிடம் ஒப்படைக்கிறேன்!

**துரியோதனன் வணங்கிவிட்டு வெளியேறுகிறான்.**

- காட்சி மாற்றம் -

**திஷ்டத்துய்மன் பாசறை – படுக்கையில் இருந்தவரை காவலன் எழுப்புகிறான்.**

**காவலன்:** வாழ்க இளவரசே! முக்கியமான தகவலுடன் ஒற்றன் ஒருவன் வந்திருக்கிறான்.

**திஷ்ட:** வரச்சொல் (ஒற்றன் வந்ததும்) என்ன விஷயம்?

**ஒற்றன்:** ஆச்சாரியார் துரோணர் நாளை யுதிஷ்டிர மாமன்னரைக் கைதுசெய்யத் திட்டமிட்டுள்ளார் இளவரசே!

**திஷ்ட:** ஆச்சாரியார் என்ன நினைத்து விட்டார்? எங்களுக்கு போரிடத் தெரியாதென்பது அவருடைய எண்ணமா? யுதிஷ்டிர மாமன்னர், எவரும் ஓட்டிச் செல்லக்கூடிய - கதி அற்ற பசு என்ற நினைப்பா அவருக்கு...?

- காட்சி மாற்றம் -

**பாண்டவர் பாசறை – யுதிஷ்டிரர் தவிர்ந்த ஏனைய பாண்டவர் அணித்தலைவர்களுடன் கிருஷ்ணரும் காணப்படுகிறார்.**

**கிருஷ்:** திஷ்டத்துய்மா! யுத்தகாலத்தில் சினத்துக்கிடம் தராமல் சிந்தனைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்! ஆச்சாரியாரைப் பற்றி பார்த்தன் அறிவான்; பீமனும் தெரிந்திருப்பான்! பிதாமகர் தன்னை வீழ்த்துவதற்கான வழிமுறைகளையாவது குறிப்பால் உணர்த்திவிட்டார். ஆனால், துரோணரின் தந்திரோபாயங்களை அறிவது சுலபமல்ல; நாம்தான் அறிய முயல வேண்டும். இதேவேளை பெரிய அண்ணாவை (யுதிஷ்டிரரை) பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்! துரியோதனன் தக்கபடி ஆச்சாரியாரை மடக்கியிருக்கிறான். யுதிஷ்டிரர் மட்டும் அவர்களிடம் அகப்பட்டால் போர் முடிந்துவிடும். ஆனால் நீங்களனைவரும் யுத்தக்கைதிகளாகி விடுவீர்கள் - அடிமைகளாக்கப்பட்டு விடுவீர்கள்! அடிமையானபின் அரசுரிமை கோர முடியாது. ஆகவே, யுதிஷ்டிரரைப் பாதுகாப்பதே நம் அனைவரின் தலையாய கடமை!

**துருப:** வாசுதேவர் கூறுவதே சரியானது மகனே!

**அர்ச:** குருதேவரை முறியடிப்பது கடினம்தான்! இருப்பினும் அவரிடம் பயின்றவர்கள் பலர் இங்குள்ளனர்! அது தவிர சத்தியகு, மத்சயநாட்டரசர் போன்றாரும் எம் அணியில் இருக்கின்றனர். மூத்தண்ணா அவர்கள் உதவி களற்று அலைந்து திரியும் பசுவல்ல என்று எமது படைத்தளபதி கூறியதில் உண்மை இல்லாமலில்லை! அவரை போர்க்களத்திலிருந்து எவரும் சுலபமாகக் கடத்திக்கொண்டு போக முடியாது!

- காட்சி மாற்றம் -

**போர்க்களக் காட்சிகள் – நெருப்பு மற்றும் புகை மண்டலங்களைக் கிளப்பும் கணைகளை துரோணாச்சாரியார் ஏவுகிறார்.**

**யுதிஷ்:** என்னைச் சுற்றியவண்ணம் ஏன் எல்லோரும் நிற்கிறீர்கள்? ஆச்சாரியாரின் முன்னேற்றத்தைத் தடுக்கப்பாருங்கள். இல்லையானால் போர் இன்றுடன் முடிவடைந்துவிடக்கூடும்!

**சகாதே:** கவலை வேண்டாம் மூத்தண்ணா?

**யுதிஷ்:** எவ்வாறு கவலையற்றிருக்க முடியும் தம்பி! எம்முடனிணைந்து போரிடும் அனைவரும் எம் உடலுக்குச் சமமானவர்களல்லவா? எமது உரிமைகளுக்காக நாம் போராடுகிறோம். அவர்கள் எமக்காகப் போர்முனை புகுந்தவர்கள். ஆச்சாரியாரை எதிர் கொள்ள உங்களால் முடியாவிட்டால், இதோ நானே போகிறேன்!

**பீமன் அர்ச்சுனனைப் பார்க்கிறான்.**

**யுதிஷ்:** பீமா! ஏன் அர்ச்சுனனைப் பார்க்கிறாய்?

**அர்ச்:** தங்கள் அருகிலேயே நாங்கள் இருக்க வேண்டும் என்பது படைத்தளபதியின் கட்டளை அண்ணா!

**யுதிஷ்:** அன்புத் தம்பி பீமா! உன் அண்ணனின் சொல்லுக்குக் கட்டுப்பட மாட்டாயா....? என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் எதையோ மறைக்கப் பார்க்கிறீர்கள்.....!

**பீமன் பதிலிறுக்குமுன் துரோணரின் கணைகளுக்கு பெருவாரியான பாண்டவர்படை வீரர்கள் பலியாகின்றனர். கர்ணனும் அர்ச்சுனனும் மோதுகின்றனர். கர்ணன் காயமடைகிறான். துரியோதனனும் பீமனும்; திஷ்டத்துய்மனும் துரோணரும்; சகுனியும் சகாதேவனும்; மத்சய மன்னனுடன் மருமகன் நகுலனும் பொருதுகின்றனர். யுதிஷ்டிரரும் துரோணரும் நேரடியாகப்பொருத நேரிடும்போது அர்ச்சுனன் இடைபுகுந்து துரோணரை செயலிழக்க வைக்கிறான். இதேவேளை சூரியன் மறைகிறான் – போர் முடிவதற்கான சங்கொலி முழங்குகிறது.**

- காட்சி மாற்றம் -

**சொர்க்கலோகத்தில் சந்தனு மன்னன்**

**தேவகன்னி:** மகாராஜா! இது தேவலோகம்! மனக்கிலேசப்பட்டு, தேவேந்திரனுக்கு இழுக்கு ஏற்படுத்தலாகாது...!

**சந்த:** மகிழ்ச்சியைப் போன்று துன்பமும் ஒருவகை உணர்வுதான்! துன்பத்தை எவரும் விரும்புவதில்லை! ஆனால் துயரம் வந்தணையும் போது....!

**தே.கன்:** தாங்கள் இப்போது மனிதரல்ல... ஒரு ஆத்மா! தாங்கள் உலகில் விட்டு வந்தவற்றைப் பற்றி இங்கு சிந்திக்கலாகாது.

**சந்த:** இல்லை தேவி! இன்னும் நான் என்னவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதோ என்னுடைய ஒரு பாகம் அம்புப்படுக்கையில் கிடக்கிறது. எனது மூதாதையர் சீரும் சிறப்பும்பெற்ற அஸ்தினாபுரத்தை கட்டியெழுப்ப விரும்பினர்; ஆனால் அதனைச் சீர்குலைத்த பாவி நானே! அதோ கிடக்கும் அஸ்தினாபுரத்தின் பிரதிநிதியின் உடலை துளைத்துக் கொண்டிருக்கும் கணைகள் பாரத சமுதாயத்துக்கே ஏற்பட்ட கொடுமை! குருசேத்திரப் போர்முனையின் குரூரத் தோற்றத்தினை ஏற்படுத்திய குற்றவாளி நானே! அஸ்தினாபுரத்தில் நடந்தேறிய அனைத்து அசம்பாவிதங்களுக்கும் நானே பொறுப்பேற்க வேண்டும்! என் மகன் தேவவிரதனைப் போய்ப் பார்த்து அவனுடைய துன்பங்களுக்கு ஆறுதல் கூற நினைக்கிறேன். ஆனால் அதற்கான தைரியம் என்னிடம் இல்லையே!

பின்னணிப் பாடல்
இலட்சியம் தவறாது இறுதி நாள் வரையும்
குலப்பெருமையுடன் குன்றாதிலங்கியோன்
நிலத்திடைவீழா நெடுதுயிலிறுதி முன்
அழைத்துடனேகிட அணுகினன் சந்தனு!

**சந்த:** அதிபராக்கிரமசாலியான என் அன்பு மகனே! எனது வாழ்த்துக்களை ஏற்பாயாக...!

**பீஷ்ம:** யார்....? அப்பாவா...! தங்களை எழுந்து நின்று கைகூப்பி வரவேற்க முடியாத நிலையிலிருக்கிறேனே தந்தையே! இந்தச் செயலைப் புரிந்தவன் தங்களின் வழித்தோன்றல்தான்! இந்த நிலையினை அவன்மூலம் நான் பெற்றமை எத்தகைய களிப்பினைத் தருகிறது தெரியுமா தந்தையே! அவனுடைய மூதாதையான தாங்களும் அவனுக்காகப் பெருமைப்பட வேண்டும்!

**சந்த:** மகனே! உன்னால் தானடா நான் பெருமைப்பட வேண்டும். நான்தான் பெரும் தவறு செய்துவிட்டேன். நமது மாண்புமிகு நாடான அஸ்தினாபுரத்தை விட சத்தியவதியின் காதலைப் பெரிதாக நினைத்துவிட்டேன். அதன் விளைவாக உதித்தவனே திருதராட்டிரன் – அவனுடைய வாரிசு துரியோதனன்! சுயநலத்தால் நாட்டைக் கெடுத்த என்னை என் தாய் நாடே மன்னிப்பாயா?

**பீஷ்ம:** நடந்தவை நடந்து முடிந்தவை. அவை வரலாறாகிவிட்டன. தவறு தங்களுடையதல்ல... தவறிழைத்தவன் நானே! நாட்டின் நலனைக் கருதாமல் தந்தைப் பாசத்துக்கு தன்னலத்துடன் முன்னுரிமை கொடுத்தமையினால்தான் இன்று போர் மூண்டுள்ளது. எனது தவறினால்தான் எண்ணற்றோர் மாண்டனர்.... இரத்தாறு பெருக்கெடுத்துள்ளது...! பேரழிவைத் தடுக்க பெருமுயற்சி எடுத்தேன். முடியாமற் போனமைக்காக தங்களதும் மூதாதையரினதும் மன்னிப்பைக் கோருகிறேன்.

**சந்த:** மகனே! இந்த பாரததேசத்தின் பெயரை உன்பெயரால் **"பீஷ்மதேசம்"** என்று எதிர்காலம் அழைக்க வேண்டும் என்பதே எனது ஆசை!

**பீஷ்ம:** இல்லை தந்தையே! மாமன்னர் பரதரின் வம்சாவளிப் பெயர்தான் இந்நாட்டுக்கு என்றும் பொருந்தும்! இந்நாட்டை குருச்சேத்திரப் போர் முனைவரை இட்டுச் சென்ற இந்த அபாக்கியவானின் பெயர் பொருந்தவே பொருந்தாது. நான்விட்ட தவறுகளுக்கான பிராயச்சித்தம்தான் இதோ இந்த அம்புப்படுக்கை!

**சந்த:** இல்லை மகனே! நீ குற்றமற்றவன்! மூதாதையர்களான பரதமாமன்னரும் ஏனையோரும் உன்னால் பெருமை அடைகின்றனர் மகனே! இந்த முள்ளுப் படுக்கையில் நீ துன்பப்பட்டது போதும்! என்னுடன் வந்துவிடு! சொர்க்கவாயில் உனக்காகத் திறந்திருக்கிறது!

**பீஷ்ம:** சொர்க்கமானாலும் நான் இன்று அதனை ஏற்கமுடியாத நிலையிலுள்ளேன். தங்கள் கட்டளையினை மீறியமைக்கு என்னை மன்னியுங்கள்! நான் பாரதவம்சத்தின் தலைமகன். எனக்கு முன்னே சொர்க்கம் சேர வேண்டியவர்களை வழி அனுப்பி விட்டுத்தான் நான் புறப்படவேண்டும். அதுமட்டுமல்ல தந்தையே! அஸ்தினாபுரத்தை பாதுகாப்பான கரங்களில் ஒப்படைக்காமல் என் ஆத்மா என்னை விட்டுப் பிரியாது என்று தங்களுக்கு அளித்த வாக்கைக் காப்பாற்றவேண்டாமா? அதற்காகத்தானே, நான் விரும்பினாலொழிய எனது ஆத்மா என்னை விட்டுப் பிரியாது என்ற வரத்தினை தாங்கள் எனக்கு அளித்தீர்கள். ஆகவே, இப்பொழுது என்னை மன்னித்து விடுங்கள் தந்தையே!

**சந்தனு மறைகிறார் – அப்போது பீஷ்மரிடம் துரோணர் வருகிறார்.**

**துரோ:** ஓ கங்கையின் மைந்தரே! தங்களுக்கு ஒரேயொரு வார்த்தையினைத்தான் கூறலாம்! தங்களுக்கு மோட்சம் அருளப்பெற வேண்டும். என் போன்றோருக்கு அது கிடைக்காது. அத்தகுதி எனக்கு இல்லை! தன்னலமற்ற தியாகங்களைப் புரிந்த தாங்கள் உண்மையில் ஒரு கர்மயோகி! பெருமைக்குரியவரே! தங்களுக்கு முன் நான் போய்விடுவேன். ஆகவே எனது இறுதி வணக்கத்தைத் தாங்கள் ஏற்றருளக் கோருகிறேன்!

**பீஷ்மரை வணங்கிவிட்டு துரோணர் செல்கிறார்.**

பின்னணிப் பாடல்
தன்னலம் துறந்த தனிப்பெரும் தவமுனி
இந்நிலம் தன்னில் இவன் போலெவருமே
என்றுமே எங்குமே எவரிருந்தனரோ?
பின்னருலகிலும் பீடுமன் போலொரு
முன்னிலை வகுத்து முறைவழி கூறிட
அன்னவரெவருமே அவதரிப்பாரோ!

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)
www.padippakam.com
நன்றி - நூலகத்


அருள் ஜுவலர்ஸ்



4 3 6 3 3 1

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## நேசிப்பும் பூரிப்பும்

'முரசு' இல்லங்கள் தோறும் தானும் ஒரு குடும்ப உறுப்பினராக சேர்ந்துவிட்டதல்லவா. வாசித்துவிட்டு மீண்டும் புரட்டிப் பார்க்க முரசு இதழ்கள் வாசக நெஞ்சங்களால் சேகரித்து வைக்கப்படுகின்றன.

நூறு 'முரசு'களோடு உவகையோடு நிற்கும் முரசின் நேயன், படம் பிடித்தனுப்பியவர் திலீபன்.





Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

4 3 3 6 8 6

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## ஒரே ஒரு தவறு



எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் ஜோடியாக நடித்தவர் யாரென்கிறீர்கள்?

கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவிதான்.

ஆனாலும், எம்.ஜி.ஆர் ரசிகர்கள் ஒரே ஒருவரைத்தான் 'அண்ணி' என்றழைத்தார்கள். அவர்தான் ஜெயலலிதா.

அந்தளவுக்கு எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஜோடி அங்கீகாரம் பெற்றிருந்தது.

ஜெயலலிதாவின் அலட்சியம் கலந்திருக்கும் அழகும், அறிவும் எம்.ஜி.ஆரையும் வசீகரித்தன.

'அடிமைப் பெண்' படத்தில் எம்.ஜி.ஆருக்கு வாள் வித்தை கற்றுக் கொடுப்பது போல காட்சி. எம்.ஜி.ஆருக்கே கற்றுக் கொடுப்பதா? ரசிகர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களா? என்று சிலருக்கு சந்தேகம்.

அதற்கு எம்.ஜி.ஆர் சொன்ன பதில், "அம்முதானே (ஜெயலலிதாவைத்தான் அப்படி அழைப்பார்) சொல்லித் தருகிறது. ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்கள்".

எம்.ஜி.ஆரின் கணிப்பு பொய்யாகவில்லை. 'அடிமைப் பெண்' அசுர வெற்றி பெற்றது.

மார்க்சீம் கார்க்கியின் 'தாய்' நாவல் முதல் உலகின் தரமான நாவல்கள் அத்தனையும் ஜெயலலிதாவின் வீட்டு நூலகத்தில் இருக்கிறது.

அறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுள்ள ஜெயலலிதாவிடம் ஒரே ஒரு பலவீனம் அகம்பாவம்.

"தன்னை நடிகை என்று சித்தரித்து கேவலமாய் பேசிய வக்கிர புத்தியாளர்களை ஒரு கை பார்த்ததில் தவறில்லை. ஆனால் தனது உண்மையான விசுவாசிகளையே அவர் தள்ளி வைத்ததுதான் தவறு" என்கிறார்கள் விமர்சகர்கள். தவறு திருத்தப்படுமா?



தினமுரசு வாரமலர்

## கிசு-கிசு கிரிக்கெட் வீரர்கள்

மேற்கிந்திய தீவு கிரிக்கெட் அணியின் துணைக் கப்டன் கொட்னி வோல்ஷ். வேகப்பந்து வீச்சாளர்.

கிரிக்கெட் வீரர்களுக்கு இப்போதெல்லாம் ரசிகைகள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

வேகப் பந்து வீச்சாளர் வோல்ஷ் குறிதவறாமல் விக்கெட்டுக்களை வீழ்த்திவிட்டு திரும்பியபோது ரசிகை ஒருவரின் பிடியில் சிக்கிவிட்டார். கிடுக்கிப்பிடி! பொறாமையோடு கவனிக்கிறார்கள் சக வீரர்கள்.

மேற்கிந்திய தீவு அணி வீரர்கள் அடிக்கடி அழகிகளோடு கிசு கிசுக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. கிசு கிசுக்களில் அப்படியொன்றும் பெரிய பொய் இல்லைப்போல் தெரிகிறது. கில்லாடிகள்.




## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீகம் மூலமாக வாழ்வில் மலர்ந்தோர் எத்தனை எத்தனையோ. வெளிநாட்டிலும் சரி மாந்திரீக வேலைகளில் உத்தரவாதத்துடன் வரையறுக்கப்பட்ட கம்பனியாக 27 வருடமாக இலங்கையில் இயங்கிவரும் ஸ்தாபனம் இது ஒன்று மட்டுமே. வாழ்வில் பிரச்சனை உள்ள நேரங்களில் ஞாபகம் இருக்க வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம் மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K சாமி J.D.G.A.N.

P.Kசாமி அசோசியேட்ட் பிரைவேட் லிமிட். கொழும்பு-நுவரெலியா.

எம் மாதமும் 20 முதல் 31 வரை 162, கொட்டாஞ்சேனை வீதி, கொட்டாஞ்சேனை. இல்லத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசி எண்களின் வரிசைகள்:

கொழும்பு- 01-342463, 342464, 344831, 344832.
நுவரெலியா- 052-2508, 3093, 3336.

வெளிநாட்டு தொலைபேசி ஆலோசனைப் பிரிவு.

கொழும்பு-எக்சேஞ்சில் 26.
நுவரெலியா- " 21.

வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே தொலைபேசி.


மீசைக்கார பூனைகளுக்கு பலமான உபசரிப்பு. அமெரிக்காவில் பணக்கார வீடொன்றில் செல்லப்பிராணிகளாக இருப்பதால் இந்த அதிஷ்டம். "இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே".



## விருந்தோ நல்ல விருந்து

## சர்வநாசமும் சமயோசிதமும்

குண்டுவெடிப்புக்கள், குண்டு வீச்சுக்கள் வாழ்க்கையின் போக்கையும், இருப்பையும் ஒரு நொடியில் தலைகீழாக மாற்றிவிடுகின்றன.

எல்லாம் போனபின் இருப்பதையாவது காக்கப் போராடும் சமயோசிதமும் இல்லாமல் போகவில்லை.

தப்பிப்பிழைத்தது ஒரு கார் என்றாலும் மிஞ்சியது லாபம்தானே. திகைத்து நின்று அதனையும் இழப்பது என்ன நியாயம்? சமயோசித காட்சிதான் படத்தில்



## அசார் உஷார்



சார்ஜாவில் புகுந்து விளையாடி கிண்ணம் பெற்றதில் அசாருதீன், உஷாருதீன் என்றழைக்கப்படுகிறார்.

என்றாலும் பாகிஸ்தானை வெல்லக்கூடிய மனநிலை இந்திய கிரிக்கெட் அணிக்கு இன்னமும் வரவில்லை. அந்த மனோநிலை வரும் நாள்தான் திருநாள் என்கிறார்கள் இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள்.

சார்ஜாவில் இந்தியாவை சுருட்டிய பாகிஸ்தான் அணி இலங்கையிடம் பணிந்தது. இந்தியா சுருண்டதற்கு பாகிஸ்தான் அணி பற்றிய பிரமைதான் காரணம் என்கிறார்கள் அவர்கள்.

பாகிஸ்தான் அணியை தோற்கடித்து கிண்ணம் பெறுவதுதான் கப்டன் அசாருதீனின் தற்போதைய இலட்சியமாம். கனவு பலிக்குமா?